வெளியீடு 18-9-2003

Issued: 18-9-2003

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

02 டிச 2003
சென்னை-600 008
எழும்பூர்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

(C)

வியாழக்கிழமை, மார்ச் 27, 2003 – தொகுதி 37– எண் 2

**Thursday the 27th March, 2003 – Volume 37– No.. 2**

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**\ssembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

**27-3-2003**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்

**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 119-120

**2. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 120-156

**3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, அளித்தல்**

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 156-160

**4. அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002—2003 மொழிதல் (ஆ.செ.) 160

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ. இ.) 165

**5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, வாக்கெடுப்பு—** 161-165

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 161

**6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 165-166

**7. அரசினர் தீர்மானம்—**

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். 166-167

| | பக்கங்கள் |
|---|---|
| **8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்—** | |
| தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 | 167-169 |
| **9. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்** - தொடர்ச்சி | 169-243 |
| *திரு. கி. பாரிமோகன் | 169-171 |
| திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 171-177 |
| *திருமதி சி.எம். சூரியகலா | 177-184 |
| *திரு. எ.வ. வேலு | 184-202 |
| *மாண்புமிகு திரு. அ. அருணாசலம் | 202-218 |
| *திருமதி எஸ். மகேஸ்வரி | 218-227 |
| திரு. என். நன்மாறன் | 228-239 |
| திரு. ஜெக. வீரபாண்டியன் | 239-243 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 243 |


225516

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 13, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 மார்ச் 27, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு."

ஆட்சி முறையில் அறம் தவறாமல், அறம் இல்லாத தீய செயல்களைத் தவிர்த்து வீரத்தில் குறைவுபடாது, மானத்தைப் பெரிதும் மதித்துப் போற்றும் திறமை கொண்டதே சிறந்த அரசாகும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இரங்கற் குறிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் 3-3-2003 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் 1959-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று, 1962 வரையிலும், 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து 3 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2003 மார்ச் 27

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்.

வினா எண்கள் 101, 102 ஆகியவை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண் 103, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**103—**

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

***7856—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் 1975 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2003 மார்ச் 27]

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மேலும், இத்திட்டத்தின் மூலம் எந்தவிதப் பணிகளும் தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே பல்வேறு மலைப் பகுதிகள் இருந்து கொண்டு இருக்கின்றன. அரூரில் சித்தேரி மலையும், அதைப்போல, தருமபுரி பகுதியிலே வத்தல் மலை போன்ற பல்வேறு மலைப் பகுதிகளும் இருந்து கொண்டு இருக்கின்றன. *தருமபுரி மாவட்டத்திலே இருக்கின்ற வத்தல் மலையிலே ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். மத்திய அரசு உதவியோடு நடைபெற்று வருகின்ற உண்டு உறைவிடப் பள்ளி; அதைப்போல சாலை வசதி; இன்னும் இருக்கின்ற பல சலுகைகள் எல்லாம் அங்கே எதுவுமே செய்யப்படாமல் இருந்து கொண்டு இருக்கின்றன. சமீபத்திலேகூட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 26 கிலோ மீட்டர் நடந்து சென்று மக்கள் குறை கேட்கும் முகாமை நடத்தினார்கள். அங்கே பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அவரும் நடவடிக்கை எடுப்பதாக இந்த மாநில அரசுக்குப் பரிந்துரை அனுப்பி இருக்கிறார். அந்த வகையிலே வத்தல் மலையிலே உண்டு உறைவிடப் பள்ளி அமைக்கவும், சாலை வசதி ஏற்படுத்தித் தரவும், அங்கே இருக்கின்ற துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கித் தரவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகள் மட்டுமல்ல, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, பச்சை மலை, கொல்லி மலை போன்ற பல பகுதிகளும் இத்தகைய மேம்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. இது குறித்து மைய அரசிடம் மாநில அரசு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு மலைப் பகுதிகள் இருக்கின்றன என்றும், அவற்றையெல்லாம் மலைப் பகுதி

மேம்பாட்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாகவும் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலே சேலம் மாவட்டம், தருமபுரி, வேலூர், இன்னும் பல்வேறு மாவட்டங்களிலே மலைப் பகுதிகளிலே மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படி மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதிக்கு மத்திய அரசால் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதிலும், கடந்த காலங்களிலே 10,000 மக்கள் தொகை என்று வைத்து இருந்தார்கள். இப்போது அந்த 10,000 மக்கள் தொகை என்பதைக்கூடக் குறைத்துவிட்டதாகவும் அல்லது விதிவிலக்கு அளித்துக் கொடுப்பதாகவும், முன்னுரிமை வழங்குவதாகவும் சொல்கிறார்கள். அந்த வகையிலே, மலைப் பகுதியை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக, மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியைக் கட்டாயம் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு இணைந்து நடவடிக்கை எடுக்குமா, அதற்குண்டான விதிமுறைகளைத் தளர்த்துவதற்கும் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், அந்தப் பகுதியிலே வாழ்கிற மலைவாழ் மக்களினுடைய மேம்பாட்டையும் உள்ளடக்கியதாகத்தான் இருக்கும். அப்படித்தான் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான், மலைவாழ் மக்கள் வாழ்கிற பிற பகுதிகளான கொல்லி மலை, ஏலகிரி மலை, பச்சை மலை, பவள மலை போன்ற பல்வேறு பகுதிகளையும் இதற்கு உட்படுத்த வேண்டும் என்று மைய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் செல்லும். தக்க நடவடிக்கை எடுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் எல்லாம் Scheduled Tribes என்று சொல்லப்படுகின்ற மலை ஜாதி மக்கள்தான். ஆகவே, நம்முடைய மாநில அரசானது, அந்த மலைவாழ் மக்களுக்குரிய நலத் திட்டங்களைப் பெற்றுத் தருவதற்கு விரைவான நடவடிக்கையை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கூறியவாறு, தக்க நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் சித்தேரி என்ற மலைக் கிராமம் உள்ளது. அந்த ஊராட்சி கிட்டத்தட்ட 62 மலைக் கிராமங்களை உள்ளடக்கியதாகும். சித்தேரி மட்டுமல்லாமல், அங்கே வத்தல் மலையும் மலைக் கிராமமாக உள்ளது. அந்தப் பகுதிக்கு ஏதாவது பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால்கூட கழுதைமீது பொருட்களை ஏற்றி எடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அந்தப் பகுதியில் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீலகிரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தில் சேர்த்ததுபோல, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தையும் சேர்த்து, அந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் அல்ல; தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளை இந்த மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியவாறு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**104—**

## கட்டட வசதி

***9880—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 27

(அ) பொன்னேரி தலைமையிடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தை இரண்டாகப் பிரித்த பிறகு, திருவள்ளூர் மாவட்டம் என்று திருவள்ளூரைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கிவரும் அந்தப் பகுதியில் பொன்னேரி பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், வருவாய்த் துறை அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், பொது மருத்துவமனை என அத்தனையும் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் நிறைந்த அந்தப் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு இதுவரையிலும் ஒரு புதிய கட்டடம் இல்லாமல் பழைய கட்டடத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே, பொருளாதார நெருக்கடி இருப்பினும், இல்லை என்கிற பதிலை மாற்றி, கட்டடம் கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்து, பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பாரா என்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் அவசியத்தை உணர்ந்துதான் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட, உலகநாத நாராயணசாமி அரசு கலைக் கல்லூரிக்குச் சொந்தமான 2.25 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் அந்த நிலம், கல்வித் துறை விரிவாக்கத்திற்குத் தேவைப்படும் என்று கல்வித் துறை தெரிவித்ததால், வேறு நிலம் தேர்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது வேறோர் இடத்தைத் தேர்ந்தெடுத்ததில், அந்த நிலமும் கல்வித் துறையைச் சேர்ந்தது என்று தெரிவதால், அந்த நிலத்தை நீதித் துறைக்கு மாற்ற, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.



2003 மார்ச் 27]

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தைப் பொறுத்தவரையிலும், அந்தப் பகுதியிலே நிறைய நிலம் இருக்கிறது. அதில் பிரச்சினை எழுமானால், நிச்சயம் அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, அமைச்சரவர்கள் கூறுகின்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகுந்த ஒத்துழைப்பைத் தருவதாகச் சொன்னார்கள். அவர்கள் பொன்னேரி வட்டத்திலே வேறு ஏதாவது ஒரு நிலத்தை, அரசு நிலத்தைக் காட்டினால்கூட, அந்த நிலத்திலே கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**105—**

## கும்பாபிஷேகம்

**•18999—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியத்திலுள்ள திருவற்றிபுரம் ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து, கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு நிதி மற்றும் பொது மக்கள் நன்கொடை ஆகியவை மூலம் திருக்குடமுழுக்குச் செய்திட ஆரம்ப கட்ட நடவடிக்கை செயல்

[2003 மார்ச் 27

அலுவலரால் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** கண்ணியமிக்க சபையை மிகக் கண்ணியமாக நடத்திக் கொண்டிருக்கும் கனம் பொருந்திய சபாநாயகர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இவ்வளவு முன்னுரை? (சிரிப்பு)

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இந்தத் திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டத்திலே அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஈஸ்வரன் கோயில் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். 63 நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இந்த ஸ்தலத்திற்கே வந்து பாடி, காய்க்காத ஒரு பனை மரமே காய்த்துக் கொண்டிருக்கிறது. மகப்பேறு இல்லாதவர்களெல்லாம் இந்தத் திருக்கோயிலுக்கு வந்து பலனை அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, எல்லாக் கோயில்களிலும் நந்தி மேற்கே பார்த்து இருந்தால், இந்தக் கோயிலிலே நந்தி கிழக்கே பார்த்து இருக்கும் ஒரு வித்தியாசமான திருக்கோயில். இந்தக் கோயிலுக்கு அரசாங்கத்தினுடைய நிதி என்னமோ ஒரு இலட்சம் ரூபாய்தான். இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ரூ.50 ஆயிரம். மீதி ரூ.3.50 இலட்சத்தை மக்களிடமிருந்து வசூல் செய்து ரூ. 5 இலட்சத்திலே இந்தத் திருக்கோயில் திருப்பணி நடைபெற வேண்டுமென்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே இது போதாது. மேலும் இந்தத் திருக்கோயிலுக்கு [illegible] இலட்சம் ரூபாயை வழங்கி, இந்தத் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் சீரும், சிறப்புமாக நடைபெறுவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்களின் தமிழ் வாயால் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகரட்சகன், உங்களுக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கிறேனே, அப்புறம் எதற்கு? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் திருஞானசம்பந்தர் அவர்களால் பாடல் பெற்ற ஸ்தலம் என்பதால் 30% அல்லது 5 இலட்சம் ரூபாய் அரசின் நிதி பெற்றுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட பாடல் பெற்ற



2003 மார்ச் 27]

திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருவற்றிபுரம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் என அழைக்கப்படும் அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகைக்குட்பட்ட சட்டப் பிரிவு 46(1)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத் திருக்கோயில், நிலை-4 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது அறங்காவலர் குழுப் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால் செய்யாறு ஆய்வர் தக்காராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத் திருக்கோயிலில் முன்னதாக 19-6-1977 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மேற்படி திருக்கோயிலின் மேல்தளம், இராஜகோபுரம், அனைத்து விமானங்கள், திருக்குளம், நூற்றுக்கால் மண்டபம் ஆகியவற்றை அரசு நிதி மற்றும் பொது மக்கள் நன்கொடை என்ற நிதி ஆதாரத்தில் சீரமைத்து, 2003 ஆம் ஆண்டுக்குள் திருக்குடமுழுக்குச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத் திருக்கோயிலின் திருப்பணிக்காக முதலில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி தற்சமயம் வழங்கப்பட்டுள்ளது. பாடல் பெற்ற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் இப்பணிகள் அங்கிருக்கிற பக்தர்கள் மூலமாகவும், மற்றுமுள்ள ஆன்மீகத்தில் பற்றுள்ளவர்கள் மூலமும் வசூல் செய்து தாங்கள் முன்னின்று இதை 5 இலட்சம் ரூபாயில் செய்வதற்கு, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**106—**

**மருத்துவமனை விரிவாக்கம்**

**•443—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மார்ச் 27

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில், வரும் நான்கு ஆண்டுகளில் எல்லாப் புறநகர் மருத்துவமனைகளிலும் உள்ள வார்டுகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்கி, சிறப்புக் கவனிப்பு அளிக்கும் வகையில் அந்தப் புறநகர் மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி சென்ற ஆண்டு ஜூன் திங்கள் சென்னையிலுள்ள 4 புறநகர் மருத்துவ மனைகள், சைதாப்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் மதுரை பாலகங்காபுரம் மருத்துவமனை ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்கு ரூபாய் 100.93 இலட்சம் ஒதுக்கப்பட்டு, தேவையான உபகரணங்கள் மற்றும் கூடுதல் மருத்துவர்கள் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனைக்கு இந்த ஓராண்டு காலத்தில் மட்டும், இதுவரை அறுவை சிகிச்சை அரங்கத்திற்குக் குளிர்சாதன வசதி இல்லாமல் இருந்ததால், அங்கே ஒரு Split A.C பொருத்தப்பட்டுள்ளது. E.N.T. பிரிவுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவில் Operating Microscope வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஒரே ஒரு Ultra-sonogram தான் இருந்தது. இப்பொழுது இரண்டாவது Ultra-sonogram row வழங்கப்பட்டுள்ளது. நோயாளிகளுடைய வசதிக்காக அந்த ஸ்கேன் வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது. இதய ஓட்டத்தைக் கண்காணிக்கும் Cardiac Monitor அந்த மருத்துவமனைக்கு சமீபத்திலே வழங்கப்பட்டுள்ளது. அதேபோல Semi-auto analyser ரூ.1.2 இலட்சத்திலே வழங்கப்பட்டு, இரத்தப் பரிசோதனைக் கூடத்தில் நோயாளிகளின் உபயோகத்திற்காக அந்த மருத்துவமனைக்கு அந்த வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, உதவிப் பேராசிரியர்கள் தகுதியில் 3 டாக்டர்கள் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-15*

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் புற நகர் மருத்துவமனையில் அது உருவாகிய காலத்திலிருந்து, கட்டட வசதிகள் கூடுதலாக இருந்தாலும், சிறப்புப் பிரிவு மருத்துவத் துறைகளை உருவாக்க வேண்டுமென்று, கடந்த



2003 மார்ச் 27]

பல ஆண்டுகளாக நான் இந்த அவையிலே கேட்டு வந்திருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு, சிறப்புப் பிரிவுகளை அங்கே உருவாக்குவார்களா? அடுத்து, அந்த மருத்துவமனை கட்டியபோது, சவக் கிடங்கிற்கும் இடம் தேர்வு செய்து, அங்கே பெரிய அறையையும் கட்டினார்கள். ஆனால், கட்டிய நாளிலிருந்து இதுவரையில் அந்த அறையைத் திறக்கவும் இல்லை; அதைச் செயல்படுத்தவும் இல்லை. அந்தப் பிரிவையும் அமைச்சர் அவர்கள் உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலுள்ள பெரிய மருத்துவமனைகளிலுள்ள நோயாளிகளுடைய நெரிசலைக் குறைக்கவும், சாதாரண நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு, அருகிலேயே சிகிச்சையளிக்கவும்தான் இதுபோன்ற புறநகர் மருத்துவமனைகளை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று அரசு திட்டமிட்டு, அந்த வகையிலேதான் புறநகர் மருத்துவமனைகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் சொல்லியதற்கிணங்க, அங்கே சிறப்புப் பிரிவுகள், தேவைப்படுகிற அளவிற்கு விரிவாக்கம் செய்யப்படுவதற்கு அல்லது புதிதாகத் துவங்கப்படுவதற்கு நிச்சயமாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

நம்முடைய பெரியார் நகர் மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அது எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதைச் சொல்கிறேன். 'இந்து' பத்திரிகைகூட 26-3-2003 ஆம் தேதி வெளியிட்ட செய்தியில், பெரியார் நகர் புறநகர் மருத்துவமனை பற்றி எழுதுகிறபோது, ஒரு write-up-லே அவர்கள் எழுதுகிறபோது. 'Better equipped, but a peripheral hospital' என்று மிகச் சிறப்பாக அதைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். உள்ளபடியே அந்த மருத்துவமனையினுடைய தரம்; அங்கே வசதி, வாய்ப்புகள் எல்லாம் சிறப்பாக இந்த அரசாலே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அங்கே தேவையான சிறப்புப் பிரிவுகள் துவக்கப்பட வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக இந்த அரசு எந்தவிதத் தயக்கமும் இன்றித் தொடங்கும். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன, திறக்கப்படாமல் இருக்கிற அந்தச் சவக் கிடங்கை, மாண்புமிகு

[2003 மார்ச் 27

உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க, திறப்பதற்கு அல்லது அந்தச் சவக் கிடங்கைச் செயல் முறைக்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தொலைநோக்குத் திட்டத்திலே தொடங்கப்பட்ட புறநகர் மருத்துவமனைகளிலே என்னுடைய தொகுதியிலே அமைந்திருக்கிற ஸ்டான்லி புறநகர் மருத்துவமனையும் ஒன்று. அங்கே இருக்கின்ற படுக்கை வசதிகளை இரு மடங்காக ஆக்குவதற்கு ரூபாய் 100.93 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே தெரிவித்திருக்கின்றார்கள். இப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற பணத்திலே, சென்னைப் புறநகர் ஸ்டான்லி மருத்துவமனைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? என்னென்ன சிறப்புத் திட்டங்கள் அதிலே இடம் பெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள், அவர் தொகுதியிலே இருக்கிற சின்ன ஸ்டான்லி என்கிற அந்த மருத்துவமனையினுடைய வளர்ச்சியிலே மிகவும் அக்கறை கொண்டு அரசை அணுகி, பல காரியங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை அவரே பல முறை இங்கே பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே, அந்த மருத்துவமனையிலே தோல் வியாதிக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு ஒன்றும், Gastro-enterology பிரிவு ஒன்றும் அங்கே தொடங்கப்பட்டிருக்கின்றன. அங்கே 100 படுக்கைகள் இப்போது இருக்கின்றன. அதையும் விரிவுபடுத்துவதற்கு இந்த அரசு நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக ரூ.100.93 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கணிசமான அளவிற்கு அந்த மருத்துவமனைக்கும் இந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 107, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 மார்ச் 27]

**107—**

## மருத்துவமனை

***6567—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, கல்லக்குடியில் அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) லால்குடி தொகுதி, கல்லக்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

முற்பகல் 10-20

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, கல்லக்குடி பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள் மருத்துவமனை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால், 20 கிலோ மீட்டர் தூரமுள்ள லால்குடிக்கு வர வேண்டியுள்ளது. ஆகையால், 5 கிலோ மீட்டர் தூரமுள்ள புள்ளம்பாடியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் தரம் உயர்த்தவும், கல்லக்குடிக்கு ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுக்கவும் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அனுமதி வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதிலே, புள்ளம்பாடி ஆரம்ப சுகாதார நிலையம்தான் அந்த ஒன்றியத் தலைமை ஆரம்ப சுகாதார

[2003 மார்ச் 27

நிலையமாக இருக்கிறது. ஏற்கெனவே, 30 படுக்கைகள் கொண்ட, தாம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்படுவதற்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, கல்லக்குடி என்கிற அந்தப் பேரூராட்சிக்குத் துணை சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தத் துணை சுகாதார நிலையம் அங்கு கட்டடம் இல்லாமல் செயல்பட்டு வந்தால், அதற்குக் கட்டடம் இந்த ஆண்டேகூட கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, திரு. கே.பி. இிராஜேந்திர பிரசாத், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**108—**

**நல வாரியம்**

***31270—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர் நல வாரியம் அமைக்கப்பட்டு, 20-7-2000 முதல் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மார்ச் 27]

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்த நாடே போற்றும் அளவில் தொழிலாளர்களின் துயர் துடைத்திட பல்வேறு நலத் திட்டங்களை, ஏழையெளிய தொழிலாளர்களுக்கு வாரி வழங்கி வருகிறார்கள். தமிழகத்தில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேலான ஆட்டோ தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கிடையில் ஆட்டோ ஓட்டி வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களுக்கு வேலைக்கேற்ற வருமானமோ, பணிப் பாதுகாப்போ கிடையாது. 90 சதவீத ஓட்டுநர்கள், தினமும் 100 ரூபாய்க்கு ஆட்டோக்களை வாடகைக்கு எடுத்து ஓட்டி வருகிறார்கள். பெட்ரோல் மற்றும் உதிரிப் பொருட்களின் விலை உயர்ந்து வருவதாலும், போதிய சவாரிகள் கிடைக்காததாலும், போதிய அளவு வருமானம் கிடைக்காமல் தங்களது குடும்பத்தை நல்ல முறையில் பராமரிக்க முடியாமல் துயருற்று வருகிறார்கள். மற்ற வாகன ஓட்டுநர்களைவிட அதிகமான பல இன்னல்களுக்கு ஆளாகித் தவித்து வரும் ஆட்டோ தொழிலாளர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க அவர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வாரியம் செயல்படுகிறது என்று சொல்கிறார் அமைச்சர். (குறுக்கீடு) வாரியம் செயல்படுகிறது என்று சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் நல வாரியம் என்று 2000-ஆவது ஆண்டிலேயே தொடங்கப்பட்டு அவர்களுக்கு உரிய நலப் பணிகள் எல்லாம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அதிலே 38,534 பேர் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நலத் திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நல வாரியம் அமைக்கப்பட்ட அதே நேரத்தில், 2000-2001 ஆம் வருடத்திலே அமைக்கப்பட்ட மற்ற நல வாரியங்களில் எந்தெந்த நல வாரியங்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன? செயல்படாமல்

[2003 மார்ச் 27

இருக்கிற நல வாரியங்களைச் செயல்பட வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இது மூலக் கேள்வியோடு கொஞ்சம்கூடத் தொடர்பே இல்லாதது.

வினா எண் 109, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**109—**

**விலை நிர்ணயம்**

***18810—திரு இரா. இராம் பிரபு:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 10-25*

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் அரசு விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா என்பது என்னுடைய கேள்வி. என்னுடைய பகுதியிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக, பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் அதிக அளவிலே மிளகாய், பஞ்சு விளைச்சல் இருக்கின்றது. இப்போதுள்ள நிலையில், மழை இல்லாத காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் மிகவும் வறண்டு காணப்படுகிறார்கள். மிகவும் குறைந்த அளவிலே அவர்கள் விளைச்சலை ஏற்படுத்தியிருக்கக்கூடிய அந்த மிளகாய்க்கும், பஞ்சுக்கும்



2003 மார்ச் 27]

நிரந்தரமாக தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள்களுக்கு மத்திய அரசால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள Agricultural Cost and Prices Commission தான் இந்தப் பணியை மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டப் பயிர் சாகுபடியைப் பொறுத்தளவிலே, மிளகாய், பருத்தி போன்றவை முக்கியமான பணப் பயிர்களாக விளங்குகின்றன. ஆண்டுகள் செல்லச் செல்ல, விவசாயிகளுடைய இடுபொருள் மற்றும் தொழிலாளர்களுடைய கூலி உயர்வு ஆகியவற்றைக் கணக்கிடுகின்றபோது, மிளகாய், பருத்தி போன்ற விளைபொருள்களுக்கு அவர்களுக்குக் கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காததால், விவசாயப் பெருமக்கள் மிளகாய், பருத்தி போன்ற பணப் பயிர்களைச் சாகுபடி செய்வதைத் தவிர்த்து வருகின்ற ஒரு சூழ்நிலை, தென் மாவட்டங்களில், குறிப்பாக விருதுநகர் போன்ற மாவட்டத்தில் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர், இந்தப் பணப் பயிர்களுக்கு விலை நிர்ணயிக்கின்ற பொறுப்பு மத்திய அரசிடம் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆனால், அதே சமயத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில், பத்தி 64-ல் துணித் தொழில் குறித்து, துணித் தொழிலுக்காகத் தனி இயக்கம் ஒன்றினைப் பின்பற்றுவோம் எனக் கூறி, அதனுடைய அம்சங்களில் ஒன்றாக, தரமான பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும், துணித் தொழிலை அதன் இடுபொருட்களுக்கான தொழிற் பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் தனிக் கவனம் செலுத்துதல் என்கின்ற ஓர் அம்சத்தினைக் குறிப்பிட்டுள்ளார்கள். தென் மாவட்டங்களில் நூற்பாலை என்பது முக்கியமான வேலைவாய்ப்பினை அளிக்கின்ற ஒரு துறையாக இருக்கின்றது. இந்த நூற்பாலைத் தொழிலுக்குப் பஞ்சு மிகவும் அவசியமாக இருக்கின்றது. கடந்த காலங்களில் பருத்திக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காததால் இங்கே பருத்தி சாகுபடி செய்கின்ற பரப்பளவு குறைந்து, அதனால் வட மாநிலங்களிலிருந்து பஞ்சு வாங்குகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. இத்தகைய

சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு, பருத்தி சாகுபடி செய்கின்ற பரப்பளவை விஸ்தரிக்கும்பொருட்டு, அத்தகைய சாகுபடியாளர்களுக்குக் கட்டுப்படியாகின்ற விலையை நிர்ணயிப்பதற்கு இந்த அரசு மத்திய அரசிடம் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய விலை நிர்ணயத்தின்படி, குவிண்டாலுக்கு 1,875 ரூபாய் என்று பருத்திக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். தற்போது ரூ. 2,000 முதல் 2,650 வரை மார்க்கெட்டில் விலை போய்க்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசு, தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 2002-2003 ஆம் ஆண்டில் Contract Farming System-ல் Appachi Cotton நிறுவனம் மூலமாக, கோவை மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் போன்ற பகுதிகளில் ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில் பருத்தி சாகுபடி செய்வதற்கு ஊக்குவித்து வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் பார்த்த விவசாயத்தை நம்பி வாழ்கின்ற என்னுடைய தொகுதியான விளாத்திகுளம் தொகுதியிலே ஆந்திராவிற்கு அடுத்தபடியாக அங்கே குண்டு சம்பா வத்தல் அதிகமாக விளைகின்றது. இரண்டு ஆண்டு காலமாகப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, வத்தலுக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விலை நிர்ணயம் செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதே இதற்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.





110—

## இலவச வீட்டுமனைப் பட்டா

***13227—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சி மற்றும் தேவத்தூரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பேரூராட்சிப் பகுதியில் ஆதிதிராவிட மக்கள்—தும்பச்சம்பட்டி, சத்யா நகர், சண்முகவேல்புரம், கூடலிங்கபுரம், நாகனம்பட்டி, இருளக்குடும்பன்பட்டி, காந்தி நகர் போன்ற பகுதிகளில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள்—வசித்து வருகிறார்கள். இட நெருக்கடியால் ஒரே வீட்டில்கூட ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் கஷ்டமான நெருக்கடியில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கின்ற அந்தப் பகுதியிலும் சரி, அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் சரி, ஒரு சென்ட் நிலத்தின் மதிப்பு 50,000 முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. அரசு நிர்ணயம் செய்கின்ற விலைக்கு நில உரிமையாளர் யாரும் தானாக முன்வந்து நிலத்தைத் தரப்போவதில்லை. எனவே, அரசு கட்டாய நில எடுப்புச் சட்டத்தின் மூலம், அதைப் பயன்படுத்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன், அதேபோல் தேவத்தூர் ஊராட்சியிலே தேவத்தூரிலே சுமார் 150-க்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அங்கேயும் சுமார் 75-க்கு மேற்பட்ட குடும்பத்தினர் இலவச வீட்டுமனைப் பட்டா இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். தொகுப்பு வீடுகளைக்கூட பெற்றுப்

[2003 மார்ச் 27

பயனடைய முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயும் கட்டாய நில எடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் வட்டம், தேவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த தேவத்தூர், கோடாங்கிப்பட்டி, பெருமாள்நாயக்கன்வலசு ஆகிய இடங்களில் 146 ஆதிதிராவிடக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்குக் கடந்த ஆண்டுகளில் 101 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டா கொடுத்தது போக, சுமார் 15 சென்ட் நிலம் காலியாகவே உள்ளது. தேவத்தூர் கிராமத்தில் இன்னமும் சுமார் 25 ஆதிதிராவிடர் குடும்பத்தினர் தங்களது பெற்றோர் மற்றும் சுற்றத்தாருடன் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வீட்டுமனைப் பட்டா கேட்டு, கோரிக்கை எதுவும் வைக்கவில்லை. ஒட்டன்சத்திரம் பேரூராட்சிப் பகுதியில் விருப்பாட்சி பகுதியில் வசிக்கும் 92 குடும்பங்களுக்குக் கடந்த ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 9 மனை இடங்கள் தற்போது காலியாக உள்ளன. இருளக்குடும்பன்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரத்தில் வசிக்கும் வீடற்ற 115 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் 11-5-2000-ல் வழங்கப்பட்டுள்ளன. எனினும், நில உரிமையாளர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கினை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்ரபாணி.

**திரு. ஆர். சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இருக்கின்ற ஆதிதிராவிடர் நல அலுவலரிடத்தில் நிலம் கொடுக்கின்ற உரிமையாளர்களிடத்திலே நிலம் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா எனக் கேட்ட சமயத்திலே, அந்த அலுவலர்கள் சொன்னார்கள்; நிதி குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பதால் இந்த ஆண்டு குறிப்பிட்ட இடங்களில்தான் நிலம் கையகப்படுத்த முடியும், எனவே இப்போது முடியாது என்று சொன்னார்கள். எனவே, அரசு அந்தத் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, அங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீடற்ற ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு வீட்டுமனை இலவசமாக வழங்க வேண்டுமென்று சொல்லி ஏற்கெனவே காலங்காலமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டாக்களில் ஆதிதிராவிடர்கள் வீடுகட்டிக் குடியேறுவதற்கு அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படிப்பட்ட இடங்களில், தாமாகவே சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக, அடிப்படைத் தேவைகளான குடிநீர், தெருவிளக்கு, சாலை அமைத்துக் கொடுப்பதற்கு சுமார் 5 கோடி ரூபாய் ஒதுக்கி அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்து, அப்படிப்பட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்ற பட்சத்தில்தான், இப்போது தாமாகவே வீடு கட்டிக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் உள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 7 இலட்சம் ரூபாயில், ஏறக்குறைய 450 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இப்போது நில உரிமையாளர்களிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை மூலம் நிலத்தைப் பெற்று இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையுமாக ஆதிதிராவிடர் மக்களுக்காகவென்று நிலம் கையகப்படுத்தப்பட்டு இன்னும் பட்டா கொடுப்பதில் காலதாமதம் அதிகரித்து வருவது அரசினுடைய கவனத்திற்குத் தெரியுமா? அதேபோல், சாதாரணமாக நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் கொடுப்பதற்கு முன்வந்தாலும்கூட, அதைத் தடுப்பதற்கென்று அங்கே வில்லங்கம் ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் துரிதமாக நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த மக்களுக்குக் கொடுப்பதற்கு உரிய வேலை வேகமாக நடைபெறாதது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[2003 மார்ச் 27

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில்தான் இதுபோன்று நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகின்ற நேரத்தில் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குகள் தொடுத்தார்கள். ஆனால், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதையெல்லாம் மாற்றி, நில உரிமையாளர்களிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை மூலமாகவே நில ஆர்ஜிதத்தைப் பெற்று, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த காலத்தில் போட்ட, ஏற்கெனவே நிலுவையில் இருந்து வருகிற வழக்குகளை எல்லாம் விரைவாக முடிப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *111*, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**111—**

**போக்குவரத்து வசதி**

**•7371—திரு. செ. அண்ணாதுரை:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பல்வேறு பகுதிகளை இணைக்கும் வகையில் போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஜெயங்கொண்டம் பகுதியில், கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களை இணைக்கும் வகையில் 29 நகரப் பேருந்துகள் மூலமாக அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.



2003 மார்ச் 27]

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட டி.பழூர் ஒன்றியத்திலிருந்து குக்கிராமங்களுக்கு—ஜெயங்கொண்டத்திலிருந்து—இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அதன் காரணமாகப் பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கூடுதல் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் பகுதியில் அரசுப் பேருந்துகள் மூலமாகவும், தனியார் பேருந்துகள் மூலமாகவும், சிற்றுந்துகள் மூலமாகவும் தேவையான கிராமங்களுக்குத் தேவையான அளவிலே பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்படையாக, இன்னும் வசதி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பிட்டு, இன்னின்ன கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லை, அந்தக் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்பாரேயானால், அதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *112*, திரு. எஸ். கே. செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**112—**

**புதிய கட்டடம்**

**•8182—திரு. எஸ்.கே. செல்வம்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதை அரசு ஏற்குமா?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 மார்ச் 27

சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அவ்வலுவலகத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டும்பொருட்டு, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், சுந்தம்பட்டி கிராமத்தில் புல எண் 59/1-ல் 1.55 ஹெக்டேர் நிலத்தினை வருவாய்த் துறை, போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப, சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அவ்விடத்தில் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர், இன்று வளர்ந்து வருகின்ற நகரங்களில், சென்னை, மதுரை நகரங்களுக்கு அடுத்தாற்போல் உள்ள பெரிய நகரமாகும். அங்கே இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில், ஆண்டுக்கு ஓர் இடமாக இயங்கி வருகின்றது. மேலும், நகரின் நெரிசலான பகுதியிலே இப்போது இயங்கி வருகிறது. இதனால், வாகனங்களைப் புதுப்பிக்க வருகிறவர்களும், புதிய வண்டிகளைப் பதிவு செய்ய வருகிறவர்களும், புதிய வாகன ஓட்டுநர் உரிமம் பெற வருகிறவர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். எனவே, நமது இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதற்கு உடனடியாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கு ஏற்ப, சேலம் நகரத்திலே, சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு என்று, தனியாகக் கட்டடம் கட்டுவது பற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகரம் மாநகராட்சியைச் சேர்ந்தது. மிகப் பெரிய மாநகராட்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆண்டுக்கு ஒரு முறை வாடகைக் கட்டடத்திலே மாறி, மாறி இயங்கி வருகிறது. இந்த நிதி ஆண்டிலாவது அதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?



2003 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் போதுமானது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

113—

## தொழிற்பேட்டை

***18869—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை தொடங்க நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது, மீண்டும் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலக்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைப்பதற்குத் தேவையான நிலம் சுமார் 380 ஏக்கர் கையகப்படுத்தி, அதில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை தொடங்கத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யத் தயார் நிலையிலுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒரு மருத்துவத் தொழில் பூங்காவை சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட், நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தி வருகிறது.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை நவீன தொழில் மிகுந்த நாடாக உருவாக்க வேண்டும் என்பதற்காக, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது நிலக்கோட்டை தொகுதியில் சுமார் 380 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அவ்வாறு கையகப்படுத்திய நிலத்திற்குப்

[2003 மார்ச் 27

பணத்தைப் பட்டுவாடா செய்து, அந்தத் தொழிற்பேட்டை உருவாக வேண்டும் என்பதற்காக, சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற வைகை நதியில் தண்ணீர் எடுப்பதற்காக ராட்சத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூன்றை அமைத்து, அதற்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஒரு துணை மின் நிலையமும் அமைத்து, ஒரு துணை மின் கோட்டப் பொறியாளரையும், ஒரு அலுவலகத்தையும் தொடங்கி, சுமார் 150 மின் விளக்குகள்--சோடியம் விளக்குகள்--போட்டு ஒவ்வொரு யூனிட்டுக்கும் தார்ச் சாலைகள் அமைத்து அந்த நிலக்கோட்டை தொகுதி மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழகமே தொழில்மயமாக மாற வேண்டும் என்பதற்காகத் திட்டப்பட்ட அந்தச் சீரிய திட்டத்தை, 1996-க்குப் பின்னால் இந்த நாட்டை ஆள வந்தவர்கள் தனக்கு இரண்டு கண்கள் கெட்டாலும் பரவாயில்லை, தன்னுடைய எதிரிக்கு ஒரு கண்ணாவது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். குற்றச்சாட்டு கூடாது.

**திரு. கு. அன்பழகன்:** கெட வேண்டும் என்பது போல், அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள், புனித கோட்டையைக் கோட்டை விட்டவர்கள் என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே இருக்கின்ற தொழிற்பேட்டையையும் கைவிட்டு விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. அன்பழகன், கேள்வி மட்டுமே கேளுங்கள். மற்றதை மற்ற நேரத்தில் பேசலாம்.

**திரு. கு. அன்பழகன்:** எனவே, இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த ஆட்சியால் கைவிடப்பட்ட தொழிற்சாலை மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு அது தொடங்கப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல், அதற்கான சாத்தியக்கூறுகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டே தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 114, திரு. எச். ராஜா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

114—

## மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம்

***19005—திரு. எச். ராஜா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஜனவரிக்குள் தமிழகத்தில் மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் (State Electricity Regulatory Commission) முழுமையாகச் செயல்படக்கூடியதாக அமையும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு உறுதி அளித்ததா?

(ஆ) ஆம் எனில், மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முழுமையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது Current subject Current ஆக எடுத்திருந்தால் better-ஆக இருந்திருக்கும். ஏனென்றால், இது 13 மாதங்களுக்கு முன்பாகக் கேட்டிருந்த கேள்வி. ஆகவே, இம்மாதிரியான விஷயங்கள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்த செக்ஷனுக்கு அறிவுறுத்துவது பலன் உள்ளதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன். அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

[2003 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *115*, திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**115—**

**கூட்டுறவு அங்காடி**

***6252—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு, ஈச்சன்விடுதி பகுதி மக்களுக்குப் பகுதிநேர கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈச்சன்விடுதி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈச்சன்விடுதி, செருவாவிடுதி வடக்கு ஊராட்சிப் பகுதியைச் சேர்ந்ததாகும். அந்தக் கிராமத்திலே ஏறக்குறைய 300 விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் ரேஷன் மற்றும் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக, ஏறக்குறைய 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செருவாவிடுதி வடக்குப் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் ஏழை, எளிய மக்களுடைய வேலைவாய்ப்பு போகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அந்தக் கிராமத்திலே விரைவில் பகுதிநேர அங்காடியைத் துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிநேரக் கடையை அமைக்க வேண்டுமென்றால், இரண்டு கிலோ மீட்டர் தொலைவு இருந்திட வேண்டும். அதேபோன்று 200 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருந்திடுதல் வேண்டும். இந்த இரண்டும் அந்தப் பகுதியில் இல்லை. 181 குடும்ப அட்டைகள் மாத்திரம் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. ஈச்சன்விடுதி பகுதி 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மாத்திரமே இருக்கிற காரணத்தால், இவ்விரு வரையறைகளும் பொருந்தாததால், ஈச்சன்விடுதி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈச்சன்விடுதி கிராமத்தைச் சுற்றிப், பல்வேறு குக்கிராமங்கள் இருக்கின்றன. அவர்களும் 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, 500 குடும்ப அட்டைகள் கொண்ட செருவாவிடுதி ஊராட்சியிலிருந்து கூடுதலாக இன்னும் 25 குடும்பங்களை அந்தப் பகுதியிலே சேர்த்து அங்கு துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடர்ப்பாடுகள் எல்லாம் இருப்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, சில விதிகளைத் தளர்த்த இயலாத சூழ்நிலை இருந்திட்டாலும், அந்தப் பகுதியிலே அவசியம் தேவை என்று உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, மனுக்கள் மூலமாகத் தந்து, அந்தப் பகுதிக்குத் தேவை என்றால், சிறப்பு அடிப்படையிலே தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *116*, திரு. க. சிவராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2003 மார்ச் 27

116—

## பேருந்து நிலையம்

*2102—**திரு. க. சிவராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் விரைவாக முடிக்கப்பட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூர் பேரூராட்சியில் தனியார் நிலம் அளிக்க முன்வராததால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் நகரம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரமாகும். அமைச்சர் அவர்கள், தனியார் முன்வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். 1986 ஆம் ஆண்டு அந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்காக ஏறத்தாழ 5 ஏக்கர் நிலம் பேரூராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டிருக்கின்றது. அதிலே இதுவரை பேருந்து நிலையம் அமைவதற்கு அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. போக்குவரத்துக்கு approach road இல்லை என்ற காரணத்தால் அது நடைபெறவில்லை. தற்போது அந்த approach road-க்கு—pump house-க்குச் செல்லக்கூடிய ஒரு வழி, வெளியே வரக்கூடிய வழி; அதேபோல பேருந்து நிலையத்திற்கு அளிக்கப்பட்ட இடத்திற்குப் பக்கத்தில் ஆயூரான் வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் இருக்கிறது. அது ஏறத்தாழ 40 அடி அகலம் கொண்டது, அது ஆக்கிரமிப்பிலே இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, ஒரு தரைமட்டப் பாலத்தை அங்கே போட்டால், அந்த இடத்திற்குச் செல்வதற்கு வழியும் கிடைத்துவிடும்; அந்த நகரத்திலே போக்குவரத்து நெரிசல் இருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்களும் அறிவார்கள். ஆகவே, உடனடியாக அந்தப் பணியை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2003 மார்ச் 27]

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. எம்.சி.சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 9-7-1986 அன்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் சர்வே எண் 529-ல் ஒரு ஏக்கர் இருபத்தைந்து சென்டும், 529-ல் ஒரு ஏக்கர் எழுபத்தைந்து சென்டும், 530-ல் 0.10 ஏக்கரும் மற்றும் சர்வே எண் 227-ல் 0.45 ஏக்கரும், ஆக மொத்தம் 3.55 ஏக்கர் தானமாக வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்திற்கு வழியில்லை என்பதாலும், அருகில் தனியார் நிலம் அளிக்க முன்வராத காரணத்தினாலும், தற்போது புதிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தனியார் நிலம் வாங்கித் தருவதற்கு வழிவகை செய்தாலும், மேலும் அந்தப் போக்குவரத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி, கையகப்படுத்துவதற்கு முன்வந்தாலும் அரசு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்குச் சிந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவராஜ், நிலம் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) நிலம் நீங்கள்தான் கொடுத்தீர்களா?

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் குடும்பத்தால் அளிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாராட்டுகள்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, அந்த ஆக்கிரமிப்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் வரக்கூடியது. இரண்டு, மூன்று நபர்கள்தான் ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஆகவே அந்த ஆக்கிரமிப்பை அகற்றி TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடன் உதவி பெற்று, கூடிய விரைவிலேயே பேரூராட்சிக்கு இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் ஒப்புதலுடன் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மனு மூலம் தந்தால், அந்த ஆக்கிரமிப்புகளை

[2003 மார்ச் 27

அகற்றி, திருக்கோவிலூர் பேரூராட்சி மிகவும் நெருக்கடியான பேரூராட்சி, அந்தப் பேரூராட்சிக்கு உடனடியாக TUFIDCO கடன் உதவியின் மூலமாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

117—

### தொகுப்பு வீடுகள்

**•2836—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி, பனப்பாக்கம் பேரூராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல மலர்ப் பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய அரக்கோணம் தொகுதிக்கு உட்பட்ட நெமிலி ஒன்றியம், பனப்பாக்கம் பேரூராட்சியில், இருக்க இடமின்றி, தினக்கூலிக்கு வேலை செய்பவர்கள், வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள் அதிகம் உள்ளனர். மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலத்தில் பேரூராட்சிகளுக்கும் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் மறுபரிசீலனை செய்து, பேரூராட்சிகளுக்கும் தொகுப்பு வீடுகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் ஆட்சியில் வழங்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதி, நெமிலி, பனப்பாக்கம் பேரூராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பரிசீலனையில் இல்லை. பேரூராட்சிகள் துறை 1-6-1994 முதல் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920-ன்கீழ் இயங்கி வருவதால், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் தொடர்ந்து பேரூராட்சிக்கு விரிவுபடுத்தப்படவில்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

118—

### கூட்டுறவு ஒன்றியம்

**•3830—திரு. ப.இராஜரெத்தினம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டத்தில் தொழில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தனியாகப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் துவக்கி, வருவாய் ஈட்டிடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டத்தில் தனியாகப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் துவங்க தற்போது வாய்ப்பில்லை.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய ஒப்புயர்வற்ற முதல்வராம், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். இங்கு தொழில் துறை வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து மாத்திரம் 192 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தினந்தோறும்

225816

[2003 மார்ச் 27

கிட்டத் தட்ட ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆகவே, இதைக் கருத்திலே கொண்டும், பெரம்பலூர் பகுதி, சென்னை தேசிய நெடுஞ்சாலைப் பகுதியிலே அமைந்திருப்பதாலும், தற்சமயம் திருச்சி மாவட்டத்திலேயிருந்து பெரம்பலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதாலும்— அந்தப் பெருமையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995-லே செய்து கொடுத்து, தற்சமயம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து அம்மா அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், பெரம்பலூர் மாவட்டத்திற்கென்று வருங்காலத்திலே தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை அமைத்துத் தரவும், பால் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலையை அமைத்துத் தரவும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. [illegible]:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியம் துவங்க, குறைந்தது 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதனை நிர்மாணிப்பதற்கு ரூபாய் 4 கோடி செலவாகும். உள்ளூர் பால் விற்பனை நாளொன்றுக்குக் குறைந்தது 30,000 லிட்டர் இருக்க வேண்டும். ஆனால், தற்சமயம் மாவட்டத்தில் ஒன்றியத்தின் மூலம் பால் விற்பனை எதுவும் செய்யப்படவில்லை. இத்துடன், இங்கு பெரும்பாலும் நகரப் பகுதியாக இல்லாமல், கிராமப்பகுதியாக இருப்பதால், உள்ளூர் விற்பனை துவங்கினாலும், அதில் விற்பனை குறைந்து வாய்ப்பில்லை. மேலும், அருகில் திருச்சி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருவதால், பெரம்பலூர் மாவட்டத்தில் தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 119, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



2003 மார்ச் 27]

119—

**நினைவுச் சின்னம்**

**•22694—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சிக் கோட்டை அரசன் தேசிங்குராஜன் உயிர்நீத்த இடமான கடலி கிராமத்தில் நினைவுச்சின்னம் எழுப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சிக் கோட்டை அரசன் தேசிங்குராஜன் உயிர்நீத்த இடமான கடலி கிராமத்தில் நினைவுச்சின்னம் எழுப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் என்றாலே நினைவுக்கு வருவது புராதனச் சின்னமான செஞ்சிக் கோட்டைதான். இந்தக் கோட்டையை ஆண்ட தேசிங்குராஜன் கப்பம் கட்டவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஆற்காடு நவாபால் போர் தொடுக்கப்பட்டது. தேசிங்குராஜனுடைய உயிர் நண்பனான முகமதுகான் தனக்கு திருமணமான மறுநாளே படையின் தளபதியாகத் தலைமையேற்று, போர் புரியச் செல்கின்றான். போரிலே எதிரிகளால் வீழ்த்தப்படுகின்றான். நண்பன் இறந்த செய்தி கேட்ட தேசிங்குராஜன் எதிரிகளால் தான் இறக்கக்கூடாது என்ற எண்ணத்தில் தன்னைத் தானே வாளால் வெட்டிக்கொண்டு உயிர் துறக்கின்றான். அந்த வீரர் இறந்த இடம்தான் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கடலி கிராமம். இன்றும், அந்தக் கிராமம் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தலைவர்களுக்கும், தியாகிகளுக்கும் மரியாதை செலுத்துகின்ற, நம்பிக்கைக்கும், நட்பிற்கும், மன உறுதிக்கும் இலக்கணமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, நட்பிற்கும், மத நல்லிணக்கத்திற்கும் ஓர் உதாரணமாக வாழ்ந்து உயிர் நீத்த

தேசிங்குராஜனுக்கு, கடலி கிராமத்திலே நினைவுச்சின்னம் எழுப்புவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களின் நினைவினை என்றென்றும் போற்றிடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில், அரசின் நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *120*, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**120—**

**சுற்றுலாத் தலம்**

***28455—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதியில் தீர்த்த மலை, அனுமன் தீர்த்தம், பாம்பாறு அணை, எட்டிப்பட்டி தூவல் ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதியில் தீர்த்த மலை, அனுமன் தீர்த்தம், பாம்பாறு அணை, எட்டிப்பட்டி தூவல் ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.





**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்த மலை ஒரு சிறப்பு வாய்ந்த இடம். மிகக் கடுமையான வறட்சி நிலவுகின்ற நேரத்திலேயும், என் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர் கேட்டு மக்கள் கஷ்டப்படுகின்ற நேரத்திலேயும்கூட, மழை பெய்கிற காலத்திலேயும், மழை இல்லாத காலத்திலேயும் ஒரே சீராக ஒரு நீரூற்று ஊற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறப்பு வாய்ந்த இடம் தீர்த்த மலை. அதேபோன்று, அனுமன் தீர்த்தம் பகுதியில், அடியிலிருந்து நீர் பொங்கி ஒரு டாங்க் வழியாக ஊற்றிக்கொண்டிருந்தது—தற்போது நின்றிருக்கிறது. அதேபோல, எட்டிப்பட்டி தூவல் மிகச் சிறந்த இடம். பாம்பாறு அணை என்பது சிறந்த போக்குவரத்துக்கு வசதியான இடம். எனவே, அத்தகைய இடங்களில் சுற்றுலாத் தலம் அமைக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீர்த்த மலை என்கின்ற பகுதியில் சுற்றுலாத் தலம் அமைக்க சர்வே நடைபெற்றிருக்கிறது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிவிப்பால் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அதைத் துரிதப்படுத்த வேண்டும். அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, தீர்த்த மலையில் சுற்றுலாத் தலம் அமைக்கவும், மற்றப் பகுதிகளையும் அதேபோன்று ஆக்க வேண்டுமென்றும் மறுபரிசீலனை செய்ய ஆவன செய்திட வேண்டுமாய்த் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு சுற்றுலாத் தலத்திலும், அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, சுற்றுலாத் துறையால் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, தங்கும் இடம், உணவகம்......

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும், பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[2003 மார்ச் 27

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சாலை வசதி, விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறை முதலிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், பாம்பாறு அணை, பூங்கா மேம்பாடு, ஓசூரில் உள்ள கேலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டப் பூங்கா மற்றும் பூங்கா மேம்பாடு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் உள்ள பூங்காவை அழகுபடுத்தல் ஆகிய திட்டங்களுக்குத் தலா ரூ. 20 இலட்சம் வீதம், மொத்தம் ரூ. 60 இலட்சம் சுற்றுலாத் துறையின் மூலம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் பணிகள் துவங்கப்பட்டு, நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன. தீர்த்த மலை, மாவட்ட உலாத் தலமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தீர்த்த மலையில் 1988 ஆம் ஆண்டு, சுற்றுலாத் துறையால் வழங்கப்பட்ட ரூ.4 இலட்சத்தில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வுக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிகிற வரைக்கும் ஏதும் எடுத்துக்கொள்வதில்லை. 2 ஆம் தேதிக்கு மேலே எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்:





### 2003-2004 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 3,24,47 | - | - |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,68,30 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 36,11,79 | - | - |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 95,87,58 | 12,82,29 | 6,25 |
| 5 | வேளாண்மைத் துறை | 154,56,52 | 1,44,32 | 14 |
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை கால்நடை பராமரிப்பு | 44,24,63 | 1 | - |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 13,65,48 | 74,03 | - |
| 8 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால்வளம் | 3,28,88 | - | - |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 32,93,19 | 1,31,52 | - |
| 10 | வணிக வரித் துறை-வணிக வரிகள் | 111,65,02 | - | - |
| 11 | வணிக வரித் துறை முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 20,30,21 | - | - |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 369,76,01 | 3,30,70 | 3,67,65 |

| கோரிக்கை | வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 13 எரிசக்தித் துறை | 68,61,80 | 6,25,00 | 53,06,25 |
| 14 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 42,55,96 | 45,37,87 | - |
| 15 நிதித் துறை | 95,19,48 | - | 15,09,53 |
| 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல் | 33,13,40 | - | 1 |
| 17 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 14,51,27 | - | - |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 336,25,47 | 8,81,75 | - |
| 19 உயர் கல்வித் துறை | 184,20,92 | 43,27 | 13 |
| 20 நெடுஞ்சாலைகள் துறை | 247,93,86 | 357,42,54 | - |
| 21 உள் துறை-காவல் | 309,27,55 | 38,22,38 | 25,00 |
| 22 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 16,17,51 | - | - |
| 23 உள் துறை-சிறைச்சாலைகள் | 15,77,01 | 39,92 | - |
| 24 உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 10,53,98 | - | - |
| 25 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 27,23,71 | 20,67,45 | 27,68,91 |
| 26 தொழில் துறை | 10,33,18 | 1,00,01 | - |





| கோரிக்கை | வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 7,12,49 | - | - |
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 6,56,61 | 13,14 | - |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 14,93,68 | 1 | - |
| 30 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2,09,22 | - | - |
| 31 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | 44,52,74 | 27,33 | - |
| 32 சட்டத் துறை | 2,26,94 | - | - |
| 33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 251,27,02 | 136,25,01 | 69,05,72 |
| 34 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5,58,96 | - | - |
| 35 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 8,07,61 | 1,67,21 | - |
| 36 மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை | 6,63,90 | - | - |
| 37 பொதுத் துறை | 20,51,08 | - | - |
| 38 பொதுப் பணித் துறை | 194,11,31 | 211,93,82 | - |
| 39 வருவாய்த் துறை | 220,90,70 | 14,32,64 | - |
| 40 ஊரக வளர்ச்சித் துறை | 461,62,58 | 3,21,13 | - |
| 41 பள்ளிக் கல்வித் துறை | 1,045,19,99 | 5,72,96 | 2,38 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 42 சிறு தொழில்கள் துறை | 15,96,76 | 53,38 | 25,00 |
| 43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 111,20,70 | - | - |
| 44 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 10,36,86 | - | - |
| 45 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 7,02,53 | 8,40 | - |
| 46 போக்குவரத்துத் துறை | 37,31,82 | 4,18 | - |
| 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 6,54,06 | 27,80 | - |
| 48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 1,057,42,84 | - | - |
| 49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 196,72,40 | - | - |
| பெருமொத்தம் | 6,034,09,98 | 872,70,08 | 159,16,97 |

## 4. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2002-2003 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:-

"In pursuance of clause (2) of Article 205 read with clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 2002-2003.





## 5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-2003 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25-3-2003 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள். 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

### நிறைவேற்றப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 1 மாநிலச் சட்டமன்றம் | 10,66 | - | - |
| 2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1 | - | - |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 3 நீதி நிருவாகம் | 8 | - | - |
| 4 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 15,96,64 | 2,62,79 | 14,32 |
| 5 வேளாண்மைத் துறை | 53 | 93,80 | 3,24,24 |
| 6 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 17 | - | - |
| 7 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் | 7,95,63 | 1,59,65 | 3,61,10 |
| 8 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம் | 24,80,45 | - | - |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 32 | 1,12,57 | - |
| 10 வணிக வரித் துறை-வணிக வரிகள் | 3 | - | - |
| 11 வணிக வரித் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 6 | - | - |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 14 | 6,66,08 | 2,62,16 |
| 13 எரிசக்தித் துறை | - | - | 21,58,90 |
| 14 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 16 | 8 | - |
| 15 நிதித் துறை | 23,93,50 | - | 2,00,00 |





| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல் | 50,26,25 | - | 5,39 |
| 17 கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 4 | - | - |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,54 | 13,99,62 | - |
| 19 உயர் கல்வித் துறை | 23 | 2,02,14 | - |
| 20 நெடுஞ்சாலைகள் துறை | 28,36,39 | 12 | - |
| 21 உள் துறை—காவல் | 1,19 | 1 | - |
| 22 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 7 | - | - |
| 23 உள் துறை-சிறைச்சாலைகள் | 7 | 1,25,63 | - |
| 24 உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 3 | - | - |
| 25 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 11,12,16 | 1,77,82 | 1,00,00 |
| 26 தொழில் துறை | 10,49,10 | 19,42,65 | 57,53,42 |
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 4 | - | - |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா | 12 | 20,63 | - |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 1,57,70 | 36,02 | - |
| 30 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2 | - | - |
| 31 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 1,04 | - |
| 32 சட்டத் துறை | 11,14 | - | - |
| 33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 7 | 2 | 1 |
| 34 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5 | - | - |
| 35 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 11 | 1,85,67 | - |
| 36 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 14,75 | - | - |
| 37 பொதுத் துறை | 7,62,12 | - | - |
| 38 பொதுப் பணித் துறை | 80 | 69 | - |
| 39 வருவாய்த் துறை | 25 | - | - |
| 40 ஊரக வளர்ச்சித் துறை | 38 | - | 31,25,00 |
| 41 பள்ளிக் கல்வித் துறை | 19 | 7,50,00 | - |
| 42 சிறு தொழில்கள் துறை | 7,24,50 | 12,45 | 4,00,00 |
| 43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 34 | - | - |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 44 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 10 | - | - |
| 45 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை | 4 | - | - |
| 46 போக்குவரத்துத் துறை | 4 | - | - |
| 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 4 | - | - |
| 48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 56,73,51 | - | - |
| 49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 426,10,97 | - | - |
| பெருமொத்தம் | 672,62,89 | 61,49,48 | 127,04,54 |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு-அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

[2003 மார்ச் 27

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவை விதிகளைத் தளர்த்தி இன்றே சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் தீர்மானம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

• **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2003) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்*"
எனக் கோருகிறேன்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2003)*, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 11-05

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. திரு. கி. பாரிமோகன், 2 மணித்துளிகளில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

***திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக, பெண்களுக்காக உருவாக்கப்பட்டது இராணி மேரி கல்லூரி. 4,200 பெண்கள் அங்கே படித்துக் கொண்டிருக்கின்றார்கள். கடற்கரையின் முன்னால் அமைந்திருக்கின்ற ஒரு கல்லூரி. 4 நட்சத்திர சான்றிதழ் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கல்லூரி.

*'ஆழி தவழ்ந்திடும் கீழ்த்திசைத் தோற்றம்*
*அது எங்கள் கல்வி நல்நிலையத்தின் ஏற்றம்'*

என்று அங்கே படிக்கின்ற பெண்கள் எல்லாம் பெருமைப்படுகின்ற கல்லூரி. நம்முடைய முதல்வர், பெண்களுக்காக அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். பெண்கள் எல்லாம் தங்களுடைய சொந்தக் காலிலே நிற்க வேண்டும்; யாரையும் சார்ந்திருக்கக் கூடாது என்று சொல்பவர். ஆகவே, அப்படிப்பட்ட பெண்களை உருவாக்கி வருகின்ற அந்தக் கல்லூரி இருக்கின்ற இடத்திலே தலைமைச் செயலகக் கட்டடம் கட்டுகின்ற நிலையை கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, முக்காலியிலே பவானி ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்டுவதால் ஏற்படப் போகின்ற பிரச்சினைகள் குறித்து நம்முடைய அமைச்சர்கள், அதிகாரிகள் எல்லாம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதைப்போல, 1980-லே தொடங்கப்பட்ட தெலுங்கு கங்கைத் திட்டம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலை, செலவழித்த தொகை போன்ற விவரங்களை ஒரு வெள்ளை

அறிக்கையாக வைத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, தருமபுரி நகராட்சியிலே 5 நாட்கள், 7 நாட்களுக்கு ஒரு முறை குடிதண்ணீர் தருகின்ற சூழ்நிலை இருக்கின்றது. பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தண்ணீர் அங்கே வர வேண்டும். அங்கே வற்றிவிட்டது. தற்போது 4 கிணறுகள் வெட்டப்பட்டு, தண்ணீரை ஆற்றிலிருந்து விநியோகித்து வருகிறார்கள். ஆனால் அதுவும் இன்றைக்குப் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தருமபுரி நகராட்சியிலே லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தருமபுரி நகரத்திலே, எம்ஜி.ஆர். நகர், செங்கொடிபுரம் போன்ற இடங்களிலே 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டப்பட்டு, அங்கேயெல்லாம் இன்னும் பட்டா கொடுக்காமல் நிலுவையிலே இருக்கின்றது. அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, தருமபுரி ஒன்றியத்திலே, இலக்கியம்பட்டி ஊராட்சியிலே, அண்ணா நகரிலே பட்டா பெறாமல் வீடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்கும் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 படுக்கை வசதிகள் கொண்ட.. (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்து விடுகிறேன். மேம்பாடு செய்கின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தருமபுரி ஒன்றியத்திலே, டி. துரிஞ்சிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தையும், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் இலளிகம் ஆரம்ப சுகாதார மையத்தையும் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக உயர்த்தித் தர வேண்டுமென்று நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்கு எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்றன; அவை நோய்வாய்ப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது என்று பேசி, நம்முடைய கால்நடைத் துறை



அமைச்சர் அவர்கள் உடனடியாக நேற்றே அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளதாக அறிந்திருக்கின்றேன். அதற்காக அவருடைய சார்பிலேயும், என் சார்பிலேயும் நன்றி தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது கருத்துக் கூற வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்களும், அதற்கான நிதியொதுக்கீடுகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், சொல்லப்பட்டிருக்கின்ற அனைத்துத் துறைகளுக்கும் நிதி பெரிய அளவில் குறைக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வருத்தத்தோடு பார்க்கிறது. அதே நேரத்தில், இந்தத் திட்டச் செலவினங்களுக்காக, உலக வங்கி கடன் கொடுத்தால் செயல்படுத்தப்படும், கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது, நம்பப்படுகிறது என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால், தமிழக மக்களுக்காக, ஏழைகளுக்காக, தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட பட்ஜெட் என்பதைக் காட்டிலும், உலக வங்கியின் விருப்பத்திற்கேற்ப இந்த பட்ஜெட் போடப்பட்டு இருக்கிறது என்பதை இங்கே ஆழமாகப் பார்க்கத் தோன்றுகிறது. பிரச்சினை என்னவென்றால், உலக வங்கியின் விருப்பங்களுக்கு ஏற்ப பட்ஜெட் போட்டு நடத்திய பல்வேறு நாடுகள் இன்றைக்கு மிகப் பெரிய சிக்கலுக்கு உள்ளாகியிருக்கின்றன. இதை நிரூபிக்கின்ற வகையில்—தங்களைப் பொருளாதார ஆசியப் புலிகள் என்று சொல்லிக்கொண்டிருந்த--தென்கிழக்கு ஆசிய நாடுகள் இப்போது மிகப் பெரிய தலைகீழ் மாற்றத்தை அடைந்திருப்பதை இங்கே நாம் மிக ஆழமாகப் பார்க்கத் தவறக் கூடாது என நான் கருதுகிறேன்.

*முற்பகல் 11-10*

தொடர்ந்து 2, 3 ஆண்டுகளாகப் பருவ மழை இல்லாததால் தமிழகம் வரலாறு காணாத வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது. மா, தென்னை மரங்கள் காய்ந்து விட்டதை நாம் அறிவோம். தருமபுரி

மாவட்டத்தில் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட மரங்களும் காய்ந்துவிட்டன. அதேபோன்று விவசாயத் தொழிலாளரின் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வேலை தேடி ஊர்களை விட்டுக் காலி செய்துவிட்டு வெளியேறி இருக்கின்றன. பல விவசாயிகள் நம்பிக்கையோடு விவசாயத்திற்கு வைத்த முதலீடுகளை எடுக்க முடியாமல், மரம் ஏறிக் கைவிட்டவர்களைப் போல ஆகிவிட்டனர். இந்த நேரத்தில் நில வரி வசூலும், கூட்டுறவுக் கடன் கெடுபிடி வசூலும், விவசாயிகளைத் தத்தளிக்க வைத்துள்ளது. நான்கூட, நில வரியைச் செலுத்தியிருக்கிறேன். என்னிடம்கூட வசூல் செய்திருக்கிறார்கள். அதோடு தமிழக அரசு இன்றைக்கு நில வரிக்குப் பதிலாக, செஸ் வரி மட்டும் வசூலிப்பதாக இங்கே சொல்கிறது. ஆனால்.....

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பின்னால் நில வரி வசூலிப்பதில்லை என்று சொன்னேன். உத்தரவுகள் அரசாணையாக அனுப்பப்பட இருக்கின்றன. அப்படி நில வரி அவர் செலுத்தியிருந்தால், அது அடுத்த வருடக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் 'கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அதேபோன்று, செஸ் வரி வசூலிப்பதாகச் சொன்னார்கள். அந்த வரியையும்கூட வறட்சியின் காரணமாகத்தான்--நில வரியை வசூலிப்பதை--நிறுத்துகிறோம், செஸ் வரி என்பதும்கூட வறட்சியில்தானே வசூலிக்கப்படுகிறது. எனவே, அதையும்கூட நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்னொரு புறம் தமிழகத்திலே ஒரு கோடிப் பேர் விவசாயத் தொழிலாளர்கள். அவர்கள் சம்பந்தமாக வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு வரிகூடச் சொல்லப்படாததை வேதனைக்குரிய பிரச்சினையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தொடர்ச்சியான வறட்சியால், கிராமம், நகரம் என எங்கு பார்த்தாலும் இரவு, பகல் என்று பாராமல், கையில் குடம் வைத்துக்கொண்டு மக்கள் அலைந்தவண்ணம் இருக்கிறார்கள். தமிழக அரசு குடிநீருக்காகப் போதிய அளவிற்குத் திட்டங்கள் தீட்டவில்லை எனக் கருதுகிறேன். மிக அவசரமாக இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பீர்களேயானால், தமிழக மக்களுக்கு, இந்தப் பிரச்சினையிலிருந்து மீள ஓரளவுக்கு வசதியாக இருந்திருக்கும் என்று. கருதுகிறேன். இதை மத்திய அரசு பார்த்துக்



கொள்ளும் என்ற முறையிலே பார்த்திருப்பதாக நான் கருதுகிறேன். மத்திய அரசு, யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்டதைப் போன்று, 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் உதவி கேட்டால், வெறும் 250 கோடி ரூபாய் எனத் தன் கணக்கைச் சொல்லி முடித்திருக்கிறது. இந்தத் தொகையை, நெருக்கடியான நேரத்தில் மிகச் சிறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு தந்த போதுமான நிதியாகக் கருத முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, மதிய உணவளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்து, அது கிராமங்கள்தோறும், பஞ்சாயத்துக்கு 50 பேருக்கு மட்டும் என்று அறிவிக்கப்பட்டு, மாதம் 30 கிலோ அரிசி என்று அறிவிக்கப்பட்டு, அது மேலும் குறைக்கப்பட்டு, 30 பேருக்கு எனக் குறைந்துவிட்டது. இந்த அரிசி வழங்குகிற முறையை....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிந்தே தவறான தகவலை இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். நான் ஏற்கெனவே இந்த அவையில் பல முறை தெரிவித்ததுபோல், கடந்த ஜனவரி 31 ஆம் தேதி வரை புதிய இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்ட சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் 14 இலட்சம் பேருக்கு மாதம் 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த அரிசியின் அளவு குறைக்கப்படவில்லை. தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, ஏறக்குறைய ஒரு கோடி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இந்த மாநிலத்தில் இருக்கிறார்கள், அவர்களைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு வார்த்தைகூடக் குறிப்பிடவில்லை என்று சொன்னார். Food for Work Programme--வேலைக்கு உணவுத் திட்டத்தைப் பற்றி விரிவாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த நிலமற்ற ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர்களுக்காகவே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** வேலைக்கு உணவுத் திட்டம் வெகு விரைவிலே தொடங்கப்பட்டால் சிறப்பாக இருக்கும். கிராமங்களில் இன்னும்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த உலகில் இருக்கிறார் என்று புரியவில்லை. இந்தத் திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் முடுக்கிவிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** வேகமாகத் தொடங்கினால் நன்றி. எங்கள் பகுதியிலே இன்னும் தொடங்கவேயில்லை. எங்கள் பகுதியில் இன்னும் வேகமாகத் தொடங்கினால் சிறப்பாக இருக்கும்.

அதோடு, இந்த அரிசி வழங்குவதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அரிசியை வழங்குவதற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தத் தேதி நீங்களாக அறிவித்தது; இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற ஏழை மக்கள், விவசாயிகள், விவசாயம் செய்ய முடியாத காரணத்தால், வறட்சிக்காக அறிவித்தது. அதே மக்கள்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். மழை பெய்யவில்லை; வறட்சி; வளம் கொழிக்கவில்லை. எனவே, மீண்டும் அந்தத் தேதியைத் தளர்த்தி, அந்த மக்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். தகுதி வாய்ந்த மக்கள் இன்னும் நிறையப் பேர் இருக்கிறார்கள்; அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எடுத்தீர்கள் என்றால், அது சிறப்பாக இருக்கும் என்று தமிழக மக்கள் மிகப் பெரிய அளவில் எதிர்பார்க்கிறார்கள். கிராமங்கள்தோறும் மிகப் பெரிய அளவிலே கிளர்ச்சி, மிகப் பெரிய தகராறு; எல்லோரும் பட்டினியால் அவதிப்படுகின்ற நேரத்திலே, இந்த அரிசி வழங்குகிற திட்டத்தில் மேலும் தகுதி வாய்ந்த அனைவருக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதோடு, கிராமப்புறத்துக் கைவினைஞர்கள், சிறு தொழில் செய்து வாழ்ந்து வந்தோர் அனைவரும், கண்மூடித்தனமான இறக்குமதியால் இன்றைக்கு சூறாவளிக் காற்றில் பறக்கும் தூசுகளாக்கப்பட்டுள்ளனர். நூல் விலை ஏற்றத்தால், நெருக்கடி மிகப் பெரிய அளவில் வளர்ந்து, நெசவாளர் குடும்பங்களின் கண்விழி பிதுங்கியிருக்கிறது. உலகமயம், தனியார்மயம்,



தாராளமயம் என்னும் முப்பெரும் அரக்கத்தனத்தால் நமது நாட்டில் தீப்பெட்டித் தொழில்கள், பனியன் கம்பெனிகள், நூற்பாலைகள் எல்லாம் சர்வதேச மார்க்கெட்டாலும், இந்திய நாட்டினுடைய வரி உயர்வாலும் மத்தள அடியைப் போல அடிபட்டுக் கிடக்கின்றன.

தமிழகத்தில் கல்வி மிகச் சரியான முறையில் உள்ளது எனச் சொல்ல முடியவில்லை. 100 சதவிகிதம் கல்வி கற்ற மாநிலம் என்கின்ற அந்தப் பார்வையோடு செல்லாமல், இன்றும்கூட ஆரம்பப் பள்ளிகளுக்கும், மற்றப் பள்ளிகளுக்கும் போதிய அளவில் ஆசிரியர்கள் நியமனம் என்பது இல்லாமல் இருக்கிறது. இதனால் சாதாரண, ஏழையெளிய குடும்பங்கள் மிக உயர்ந்த கல்வி பெற வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆரம்பக் கல்வி சரியான முறையில் இருந்தால்தான், அந்த மாணவர்கள் அடுத்த மேல்நிலைக் கல்விக்கு வருவதற்கு வாய்ப்பிருக்கும். ஆனால் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், மிகப் பெரிய அளவில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு அவற்றை மாற்றி அனைத்துப் பள்ளிகளுக்கும் போதுமான, தேவையான அளவிற்கு ஆசிரியர்களை நியமித்து, கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு உயர்மட்டக்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு scholarship கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இணைத்ததால் இன்றைக்கு Vice-Chancellors எல்லாம் கட்டணம் வசூலிக்காமல் உயர்மட்டக் கல்வியை நடத்த முடியாது என்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இன்னும் ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இதனால் ஏழை வீட்டுப் பிள்ளைகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் உயர்மட்டக் கல்வி பெறுகின்ற வாய்ப்பில்லாமல் போகிற நிலைமை உள்ளது. தமிழக அரசு அப்படிப் போய்விடாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான எந்தவிதமான முன்முயற்சியையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. ஏறத்தாழ 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட, படித்துவிட்டு வேலை தேடி, அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற மாணவர்களுக்காக இதுவரை எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. உடனடியாக அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, சமூகம் சிறப்பான முறையில் வளர்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மழை பெய்தாலும்கூட, இன்றைக்கு விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது. அவ்வளவு பெரிய நெருக்கடியிலே இன்றைக்கு விவசாயிகள் சிக்கியிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்குப் பழைய கடன்கள் இருந்தாலும்கூட, மழை பெய்தால் உடனடியாகப் புதிய கடன்களைக் கொடுத்தால்தான் விவசாயத்தைத் தொடங்க முடியும் என்கின்ற நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்குப் புதிய கடன்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வேட்டி-சேலைகள் வழங்குதல், திருமணப் பெண்களுக்கு திருமண உதவித் தொகை, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை, ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை எல்லாம் மீண்டும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, 1 கோடிப் பேர் நிறைந்த விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, கோலப்பன் குழுவின் பரிந்துரையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஒரு தனி வாரியம் அமைக்கவேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இப்படி அனைத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா. (குறுக்கீடு) வார்த்தை எல்லாம் முடித்துவிட்டார். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** சாலைப் பணியாளர்கள்; அவர்களது பணிக் காலங்களில் வெண்ணிலைக் கடனாக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்று அவர்களுக்கு—வேலை இல்லாத நேரத்திலே—இப்போது Notice அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும்.



பாம்பாறு அணை நீர்த்தேக்கத்திற்கு மேல் 25 கிலோ மீட்டர் தூரத்திலே ஆண்டியப்பனூர் என்கின்ற இடத்திலே புதிய நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ரூ. 27.00 இலட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதனால் 12,000 ஏக்கர் நீர்ப்பாசனங்கள் பாதிக்கும். இன்றைக்கு கேரளாவைப் பற்றியும், கர்நாடகத்தைப் பற்றியும் பேசுகின்றோம். ஆனால், தமிழகத்திலேயே, அதுவும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே வறட்சிக்காகக் கட்டப்பட்ட பாம்பாறு அணை நீர்த்தேக்கத்திற்கு மேல் ஒரு அணை; அதனால் பாம்பாறு அணைக்கு வரக்கூடிய நீர் தடுத்து நிறுத்தப்பட்டு விடுகிறது. இதனால் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, அந்த அணையைக் கட்டுவதைத் தடுத்து நிறுத்தி, பாம்பாறுக்கு வருகின்ற நீர் முறையாக வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா.

***திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை குலைந்து, நிம்மதி கெட்டு, மனம் வெதும்பிக் கிடந்த மக்களை, சதி செய்த கூட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிய, மலை குலைந்தாலும் நிலை குலையா மாதரசியாய், புவி ஆண்டு, நிதி நிலையைச் சரிசெய்து, விதி மாற்றி எழுதிட்ட எனது இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தயவால், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினரான நான், அதற்கு வாய்ப்பளித்த எனது இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11-20

27-3-1999 அன்று முன்னாள் முதல்வர் இந்த மாமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டது என்னவென்றால், 'ஒவ்வொரு சொல்லையும் நாம் அளந்து சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். சொல் ஒன்றுதான் கீழே உதிர்ந்தால் மறுபடியும் எடுத்து வாயிலே போட்டுக்கொள்ளமுடியாது. பல் உதிர்ந்தால்கூட மாற்றுப் பல் வைத்துக்கொள்ளலாம். ஆனால், சொல் உதிர்ந்தால் அதற்காக ஒரு மாற்றுச் சொல்லை வைத்துக்கொள்ள முடியாது' என்பதாகும். ஊருக்குத்தான் உபதேசம், ஆனால் எனக்கு இல்லை என்பதைப் போல, இந்த அரசைக் காட்டுமிராண்டி அரசு என்று குறிப்பிட்டு, பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்துள்ளார். அதுமட்டுமல்ல, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசிய பேச்சை முன்னாள் முதல்வர், 'குண்டு மாரியைவிட அதிகக் கொடுமையான காட்சியாக பட்ஜெட் அமைந்திருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் நிதி நிர்வாகம் என்ற பரந்த அமைப்பில் அதன் ஒவ்வொரு துறையும் தேக்க நிலை அடையும்படி நிதிப் பற்றாக்குறை என்ற கண்ணி வெடிகளைப் புதைத்துவிட்டு, குண்டு மழைபோல் தினசரி 11 கோடி ரூபாய் வட்டி கட்டும் சுமையை இந்த அரசின்மீது, அதாவது, மறைமுகமாகத் தமிழக மக்கள்மீது சுமத்திவிட்டுச் சென்றவர்தான் முன்னாள் முதல்வர்.

தமிழக மக்களைக் காப்பாற்றி, வளர்ச்சி நீரோட்டத்தில் இணைக்கும் கடமையை மிகவும் பொறுப்புடன் செய்துள்ள இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசின் திட்டமிட்ட செயல்பாடுகள், முன்னாள் முதல்வரின் ஆட்சியிலே இல்லாததால், கொடுமையானதாகத்தான் தெரியும். தமிழ்நாடு நம்முடைய மாநிலம். தமிழ்நாடு மட்டுமல்ல. இந்தியா நமது நாடு; இன்னமும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுதான்.

இங்கே தீட்டப்படுகிற எந்தத் திட்டமும், அதற்கு முன்னுரிமை தந்துதான் அமைய முடியும் என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், திட்டமிடுதலில் முதன்மைத் துறையாக வேளாண்மை இருக்கிறது. வேளாண்மையும், தொழில் துறையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்றாலும், முக்கியமானது வேளாண்மைதான் என்று பொருளாதார நிபுணர் பார்பரா கூறுகிறார். ஆனால், 1999-ல் மாண்புமிகு முதல்வராக இருந்த திரு. கருணாநிதி ஆட்சியில், 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்தது எப்படி இருந்தது என்பதை 'பிசினஸ் லைன்' என்ற பத்திரிகை குறிப்பிட்டதை அவரே இந்த மன்றத்திலே கூறியிருக்கிறார். "தமிழ்நாட்டின் நிதி ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு, நிர்வாகக் கட்டமைப்பைப் பலப்படுத்தவும், 35 விழுக்காடு சமூகமேம்பாட்டுத் துறைகளுக்கும், எஞ்சியவை வேளாண்மை வளர்ச்சி. கிராம வளர்ச்சி போன்ற துறைகளின் நிர்வாக மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது" என்று குறிப்பிடுகிறார்.

40, 35, இரண்டும் சேர்ந்து 75 போக, மீதி 25 விழுக்காடு. அதாவது 25 சதவிகிதம்தான் வேளாண்மை வளர்ச்சிக்கு, கிராம வளர்ச்சிக்கு; அதுவும் அத்துறைகளின் நிர்வாக வளர்ச்சிக்குத்தான்; ஆனால், அத்துறையின் அடிப்படைக் கட்டுமானத்தை மேம்படுத்துவதற்காக இல்லை என்பது முக்கியமானது. இப்படி மக்களில் மிகக் குறைந்த பிரிவினராக உள்ள நிர்வாகம் சார்ந்தவர்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, மக்களை வறுமையில் தள்ளிவிட்டு நிதி



நிர்வாகத்தைச் செயல் இழக்கச் செய்தவர்களுக்கு இதய தெய்வம் அம்மா அவர்களது அரசைக் குறை சொல்ல, அதுவும் காட்டுமிராண்டி அரசு என்று கூற என்ன தகுதி இருக்கிறது?

இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தில், பக்கம் 43-ல் பாரா 82-ல் ஒரு வரி உள்ளது. அது, நடப்பாண்டில் கடும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும் மாநில வருவாயில் இருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய பங்குகள் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருவதைக் குறிப்பிடுகிறது. இந்த அரசின்மீது சொல் அம்புகளை வீசுபவர்கள் எண்ணிப் பார்கக வேண்டும். இதற்காகத்தான் அன்றே, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1996 முதல் 2001 வரை உள்ள காலத்தில் 3,776 கோடி வரை செலவு செய்யாமல் மக்கள் நலத் திட்டங்களை ஈடேற்றாமல் கடந்த கால தி.மு.க. மக்கள் விரோத அரசாகச் செயல்பட்டதை இந்தியத் தணிக்கைத் துறை படம் பிடித்துக் காட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலும், நான் சார்ந்திருக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களின் அண்ணா தி.மு.க. இல்லை. சில இடங்களில் தி.மு.க; வேறு சில இடங்களில் வெவ்வேறு கட்சிகள்கூட உள்ளன. தலைவர் அல்லது உரிய பொறுப்புகளிலே மாற்றுக் கட்சியினர் இருக்கிறார்கள். ஆனால், தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி, எங்களது அம்மாவின் ஆட்சியில், உள்ளாட்சி மன்றத்திலே மாற்றுக் கட்சி பொறுப்பிலே இருந்தாலும் கடுமையான நிதி நெருக்கடி, அதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி 82 சதவிகித வருவாய்ப் பற்றாக்குறை இருந்த நிலையில்கூட, உள்ளாட்சிக்குத் தவறாது பங்கு தரப்பட்டுள்ளது என்றால், இந்த அரசைக் குறை சொல்ல வார்த்தைகள் எப்படிக் கிடைக்கும்?

மனசாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த மாநில முதலமைச்சரும் சிந்திக்காத வகையில் வருங்காலத்தின் பக்கங்களின் சாட்சியாக, விவசாயிகளின் விடிவெள்ளியாக, நந்தா விளக்காக, இதய தெய்வம் அம்மாவின் அரசு இதனைச் செயல்படுத்தியுள்ளதற்கு நன்றி தெரிவிக்க நாவுகள் போதாது; கரம் குவித்து வணங்கக் கரங்கள் போதாது.

முற்பகல் 11-25

நேரத்தின் அவசியம் கருதி, சுருக்கமாகச் சொன்னால், பட்டியல் இட முடியாத அளவிற்கு வெவ்வேறு துறைகளிலே நிலுவை வைத்துவிட்டு,

பல கோடி ரூபாய் பாக்கிகளை வைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டவர்கள் தி.மு.க. வினர். அதனால் ஒரே நாளில் 600 கோடி ரூபாயை வங்கிக்குத் திருப்பிச் செலுத்த முடியாவிட்டால், ஏழை நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொது விநியோகத் திட்டத்திற்குப் பாதிப்பு என்ற நெருக்கடியிலே தள்ளிவிட்டுச் சென்றவர்கள் தி.மு.க. வினர். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்றைய தலைமுறைக்கும், வருங்காலத்திற்கும் சேர்த்து ஒரு பாதுகாப்பை இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமை பற்றிய சட்டமுன்வடிவு ஒன்றைத் தாக்கல் செய்வதாகக் கூறியுள்ளார்கள்.

"உறுதி கொண்ட நெஞ்சினாய் வா, வா, வா"

என்று பாடினார் பாரதியார். அந்த பாரதி கண்ட கனவை நனவாக்கும் நவயுகச் சிற்பியாக, உறுதி கொண்ட நெஞ்சுடன் அம்மாவின் அரசு அறிவித்துள்ளது. நாங்கள் எதிர்கொண்டது போன்ற மிக மோசமான நிதிப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இருந்து வருங்கால அரசுகளை இது காப்பாற்றும்.

அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் இலட்சியத்திற்கு இசைவான இந்த ஏற்பாட்டை எல்லோரும் வரவேற்கிறார்கள்.

திவாலாகிப் போன ஓர் அரசுக்கு மிகக் குறைவான காலக்கெடுவிற்குள், அதாவது உள்ளூரில் உள்ள ரிசர்வ் வங்கியே கடன் தர, அதாவது O.D. தர மறுத்த நிலையை மாற்றி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டுக் கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கி மற்றும் உலக வங்கி போன்ற வங்கிகள் எல்லாம் கடன் தர முன்வந்துள்ளன. இந்த நிலை ஏற்படக் காரணமான இதய தெய்வம் அம்மா அவர்களைக் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அவர் என்ன புரட்சி செய்தார் என்று கேட்கிறார்கள். இந்த பட்ஜெட்டில் ஒன்றும் இல்லை என்று சில தலைவர்கள் கூறி, பத்திரிகைகளிலே வெளிவந்துள்ளன.

பட்ஜெட் என்றால் என்ன? திட்டம் என்றால் என்ன? டெல்லிக்குச் செல்கிறோம்; 5 ஆயிரம் கோடிக்குத் திட்ட ஒதுக்கீட்டிற்கு டெல்லி அனுமதி தந்துவிட்டது என்றதும், உடனே 5 ஆயிரம் கோடி கையிலே நான் வாங்கி வந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு பாராட்டுகிறார்கள். அப்படியல்ல. 5 ஆயிரம் கோடி செலவு செய்ய ஒப்புதல். 5 ஆயிரம் கோடி தந்துவிடவில்லை. அதற்கு வருவாய் ஆதாரம் என்ன, அடிப்படை என்ன, நிதி ஆதாரம் என்ன இருக்கிறது என்று அவர்கள் கேட்டு, அவர்கள் அதற்கு மேல் ஒதுக்குகின்ற மானியங்கள், கடன் தொகை, இதையெல்லாம் சேர்த்துத்தான் 5 ஆயிரம் கோடி என்று இப்படி இந்த மாமன்றத்தில் 27-3-1999-ல் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி பேசினார்.



புரட்சித் தலைவி என்ன புரட்சி செய்தார் என்பவர்களுக்கு, இதோ இந்த பட்ஜெட் புத்தகத்திலே பதில் இருக்கிறது. பாதாளத்திலே கிடந்த தமிழக அரசின் நிதி நிலைமையைத் தூக்கி நிறுத்தியவர்தான் புரட்சித் தலைவி என்ற பதில் இருக்கிறது. இதற்கு முன்பு பல காரணங்களால் அப்படி அழைக்கப்பட்ட எங்களது இதய தெய்வம், இன்று தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்குத் திருப்பிய புரட்சியைச் செய்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா என்று வருங்கால வரலாறு வைர எழுத்துகளிலே பதித்து வைக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ. 40 ஆயிரம் கோடிக்கு ஒப்புதல் பெற்றவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தமிழக மக்கள் நன்றியுடன் எண்ணிப் பார்க்கிறார்கள். ஏனென்றால், இனிக் கடன் தர வாய்ப்பு இல்லை என்ற நிலையை மாற்றி, தகுந்த வருவாய் ஆதாரம் இதோ, அடிப்படை இதோ, நிதி ஆதாரம் இதோ என்று அடுக்கடுக்காக நியாயமான வாதங்களை எடுத்து வைத்து, மத்திய அரசிடமும் ஒப்புதல் பெற்றவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதால்தான் நாடு இன்று வாழ்த்தி, வரவேற்கிறது.

முற்றிலும் அனுபவம் இல்லாத புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு எல்லோரும் போகும்போது, தமிழ்நாடும் அதனுடன் இணைந்து செல்லவேண்டிய ஒரு காலகட்டத்தில், அதன் வளர்ச்சிப் போக்கில் சாதாரண ஏழை மக்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்களைப் பாதிப்பிற்கு ஆளாக்காமல் பாதுகாக்கும் கடமையையும், பொறுப்புணர்ச்சியையும் கொண்ட காவல் தெய்வம்போல், இதய தெய்வம் அம்மா அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு, 4,232.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தமிழ்ச் சமுதாயம் முழு மனதுடன் வரவேற்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சீர்திருத்தம் என்று சொல்லும்போதே வேலைவாய்ப்பு, தொழிலாளர் நலன் என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. ஆனால், இதய தெய்வம் அம்மா அவர்கள் அச்சத்தைப் போக்கி, அமைப்பு சாராத் தொழிலாளர் நலன்களைக் காக்க 325.61 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள்.

முற்பகல் 11-30

தமிழகத்தின் முதன்மைத் துறையாக உள்ள வேளாண்மையை வளர்ச்சிப் பாதையில் இணைக்கவும், புதிய தொழில்நுட்பத்துடன் இணைக்கவும் தாப்பட்டுள்ள திட்டங்களை விவசாயிகள் முழு மனதுடன் வரவேற்கிறார்கள். Bio-tech எனப்படும் உயிரி தொழில்நுட்பம் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்கு இதய தெய்வம் புதிய பாதையைத் திறந்துள்ளார்கள். இதன் மூலம் தண்ணீரைக் குறைவாகப் பயன்படுத்தி உற்பத்தி அதிகமாகவுள்ள புதிய வகைப் பயிர்களுக்கு விவசாயிகள் கொண்டு செல்லப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். இத்துறையின் தொடர்பான துறைகளான, தோட்டக்கலை உற்பத்திக்கு நீலகிரியில் 15.89 கோடி; தேனியில் 24.60 கோடி ஏற்றுமதி மண்டலம் அமைத்தல், புதிய பாசன முறை தருமபுரியில் அமைத்தல் 2 கோடி; நீர்ப்பாசன மேம்பாட்டிற்கு 30 கோடி; அதன் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு 10 கோடி; சிறிய ஏரிகளைத் தூர்வார ரொக்கமாக 25 கோடி, அரிசியாக 75 கோடி; பெரிய ஏரிகளைத் தூர் வாரவும், மேம்படுத்தவும் 748 கோடி; இராமநாதபுரத்தில் நீர் ஆதார வளர்ச்சிக்கு 24.36 கோடி என்று இந்த பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

வானம் வறண்டு போகலாம். ஆனால், தமிழகத்தை வளமாக்காமல் ஓயமாட்டேன் என்று இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப்போல இது உள்ளது. மேலும், கால்நடை வளர்ச்சிக்கு மாநில நிதி ஒதுக்கீடு 20 கோடி; மைய அரசு உதவி 20 கோடி; உயிரி தொழில்நுட்பம் மூலம் மீன் வளர்ப்பு மற்றும் மீனவர் நிவாரணத்திற்கு 25.13 கோடி; சிறு விவசாயிகள் மின் கட்டணத்திற்கான உதவித் தொகைக்கு 100 கோடி; குடிசைப் பகுதி மக்களின் மின் கட்டணத்திற்கான உதவித் தொகைக்கு 10 கோடி; பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகள் புதிய தென்னங்கன்று நட 30.50 கோடி; இந்த முதன்மைத் துறையின் அனைத்துப் பிரிவினரும், அதாவது கிராமப்புறத்தில் இருப்பவர்கள், விவசாயம் இல்லாத நேரத்தில், வேலைவாய்ப்புப் பெற சிறப்புத் திட்டமாக 9 மாவட்டங்களுக்கு 217.09 கோடி; 28 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் 341.92 கோடி, அதிலே 85.48 கோடி ரொக்கமாகவும் 256.44 கோடி அரிசியாகவும் வழங்க ஏற்பாடு என்று ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.



கிராமப்புறத்தில் தொடங்கப்படும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு மூலதன மானியமாக 10 கோடி; 33 தொழில்களுக்கு 23.14 கோடி; இவ்வாறு தரப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். குடிசை மாற்று வாரியத்திற்கு 20 கோடி ஒதுக்கி, அதிலே 2116 வீடுகள். மத்திய அரசின் வால்மீகி திட்டத்தின்கீழ் 5000 வீடுகள்; இதய தெய்வம் அம்மா அவர்களது திட்டப்படி, சென்னையில் ஆற்று ஓரம் உள்ள வீடுகளை மாற்றியமைப்பதைப் பொறுத்தவரை 3000 வீடுகள்; பீடித் தொழிலாளர்களுக்கு 2000 வீடுகள்; மீனவர் வீட்டு வசதிக்காக 10.21 கோடி; ஊரக வீட்டு வசதிக்கு 28.37 கோடி; 16 ஆயிரத்து 164 கச்சா வீடுகள் கட்ட 4.11 கோடி; தமிழகத்தின் குடிநீர்த் திட்டங்களுக்கு 611 கோடி; உலக வங்கி உதவியுடன் 2300 கோடியில் திட்ட முன் நடவடிக்கைகள்--இந்த விவரங்கள் பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. தடையில்லாமல் மின்சாரம் பெறவும், மின்சார எரிசக்தி, இதர ஏற்பாடுகளுக்கும் 1823.30 கோடி; அனைத்துச் சாலைகள் சீரமைப்பு மேம்பாட்டிற்காகப் பல்வேறு தலைப்புகளின்கீழ் 1287.22 கோடி ரூபாய் ஒதுக்கி, 3618 கோடி ரூபாய் அளவிற்குத் திட்ட வரைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் துறைகளுக்கும் பின்னணியாக நவீன தொழில்நுட்ப அடிப்படைகள், bio-tech முறைகள், கம்ப்யூட்டர் முறைகள், தகவல் தொழில்நுட்ப அடிப்படைகள் உள்ளன. அந்த வகையில், அனைத்துத் துறைகளையும் வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் அடிப்படை வேதமாக இந்த பட்ஜெட் உள்ளது. கால ஓட்டத்தில் பொருளைப் புரிந்துகொள்ள இயலாமல், பட்ஜெட் என்றால் என்ன? கவர்ச்சியான திட்டங்களை அறிவித்து அரசுப் பணத்தைப் பாழாக்கும் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி போன்றவர்களுக்கு இது தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. குடும்பக் கவலை மட்டுமே கொண்டவர்களுக்கு சமூக அக்கறை இருக்க முடியாது.

காலங்களைக் கடந்து வந்த கற்பக விருட்சமாய், தேம்பி அழுவோரைத் தேற்ற வந்த தேவதையாய், வாடி வதங்கியோரை வாழ்விக்க வந்த வாழ்வரசியாய், கண்ணீரைத் துடைக்க வந்த காமதேனுவாய், இதய தெய்வமாய், எந்நாளும் நான் வணங்கும் தெய்வமாய், ஏழு ஜென்மத்திலும் யாரும் பார்த்து அறியாத கருணைக் கடலாய் இருக்கின்ற எங்களின் புரட்சித் தலைவி

அம்மா அவர்களால், இந்த பட்ஜெட்டிற்கு முன்பாகவே துயர் துடைப்புப் பணிகள், குடிநீர்ப் பணிகள், பண்டிகைத் திட்டம் என 334.66 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் அமலாகியுள்ளன என்று கூறிக்கொண்டு, தமிழகத்திலுள்ள தொடக்க வேளாண்மை கிராம வங்கிகளில் டெபாசிட் பெறவுள்ள தடையை நீக்குமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம், கிராம வங்கிகள் மூடப்படுகின்ற நிலையை மாற்றி, வங்கிகளை வாழ வைக்கலாம். அதுமட்டுமல்லாமல், மகளிர் சுய உதவிக் குழு மூலம் சேகரிக்கப்பட்டுள்ள ரூ.277.54 கோடியும், இனி வரும் தொகையும் சேர்த்து, அந்தக் கிராமப்புற வங்கிகளில் deposit செய்யப்படுமானால், கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாகப் பயன்படும் என்பதைக் கோரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

மேலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, எனது குடியாத்தம் வளர்ச்சித் திட்டங்களுக்கு, package எனப்படும் திட்டம் மூலம் 3 கோடி ரூபாய் சிறப்பு நிதி தருமாறும், குடியாத்தம் நகருக்கு ஆரச் சாலை ஒன்று அமைத்துத் தருவதுடன், பள்ளிகொண்டான் முதல் பழமனேர் வரை உள்ள சாலையை மாநில நெடுஞ்சாலையாக 22 கிலோ மீட்டர் அளவிற்கு மாற்றித் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகரிலுள்ள கௌண்டின்யா மகாநதியின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன் என்று கூறிக்கொண்டு, பேச வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தண்டராம்பட்டு வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, உங்களுக்கு இப்படி ஒரு நன்றி சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் அருமை அண்ணன் கலைஞர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில கருத்துகளை நான் சொல்ல விரும்புகிறேன்.



2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை 60 பக்கங்கள் எங்களுக்குக் கொடுத்தார்கள்; அதேபோன்று, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கங்கள் 63 ஆக எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினுடைய பக்கங்கள் 96 ஆக இருந்து கொண்டிருக்கிறது. ஆக, ஆண்டுக்காண்டு பக்கங்கள் கூடிக்கொண்டே போகின்றனவேயொழிய, இந்த அரசு ஏதாவது திட்டங்களைக் கூடுதலாகத் தெரிவிக்கிறதா என்று சொன்னால், ஒன்றுமே இல்லை. அப்படியும் நீங்கள் அறிவித்த திட்டங்களாவது உருப்படியாக அமல்படுத்தப்படுகின்றனவா என்று சொன்னால், அதுவும் இல்லை. காரணம், இது ஒரு அறிவிப்பு அரசாங்கமாக இருக்கிறதேயொழிய, மக்களுக்குப் பணியாற்றுகின்ற அரசாங்கமாக இல்லை என்பதைச் சொல்லி, சில எடுத்துக்காட்டுகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

2002-2003-ல் அமெரிக்க கார்னெல் பல்கலைக்கழகத்துடன், bio-technology park-க்காக ஒப்பந்தம் செய்து ஆரம்பிக்க உள்ளோம் என்று சொன்னீர்கள். இந்த ஆண்டுகூட, பக்கம் 60-லே சொல்லியிருக்கிறீர்களேயொழிய, இது அறிவிப்பாகத்தான் போய்விடுமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலே இருக்கின்ற கார்னெல் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஒரு 'bio-technology park' அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தோம். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள், அதாவது, நவம்பர் மாதம், டிசம்பர் மாதத்திற்குள் இந்த bio-technology park' செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால், இந்த ஆண்டு அறிக்கையில், 60 ஆம் பக்கத்திலே, 'இந்த ஆண்டு முடிய இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், ஆரம்பிக்கப்படும் என்கிற வார்த்தை இருக்கிற காரணத்தினால்தான், இது அறிவிப்போடு இருந்துவிடக் கூடாது என்பதை இந்த அரசிடத்திலே நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான ஒப்பந்தம் 2001 ஆம் ஆண்டில் செய்யப்பட்டதே தவிர, ஆரம்பத்திலிருந்தே இதனுடைய செயல் திட்டப்படி, பணிகள்

இந்த ஆண்டு தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிப்பதாகத்தான் செயல் திட்டமே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003-ல், கூட்டுறவுத் தேர்தல்கள் நடைபெறும் என்று அறிவித்தீர்கள். ஆனால், இன்றைய அளவில் அது அறிவிப்போடு நிற்கிறதேயொழிய, இதுவரையில் கூட்டுறவுத் தேர்தல் நடைபெறவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, கூட்டுறவுத் தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்கிற அரசின் இலட்சியத்தை ஈடேற்றுகின்ற வகையில் நடத்தப்படுகின்ற சூழ்நிலையில், சிலபேர் வழக்குகள் தொடுத்து, நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிற காரணத்தினால், தற்போது கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படவில்லை. எனவே, வழக்கு முடிவிற்கு வந்தபிறகு, அது நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002-க்கான அறிக்கையில், பக்கம் 45-ல் கோப்புகளை முடிக்கிற வாரம் என்கிற ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால், இப்போதுகூட, கிராமத்திலே இருக்கிற தாலுகா அலுவலகத்திற்குச் சென்று ஒரு மனுக் கொடுத்தால், 6 மாதங்கள் ஆகியும்கூட, பல இடங்களிலே அதற்குப் பதில் வரவில்லை என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-40*

அதேபோன்று 2001-2002-ல் பக்கம் 44-ல் தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக சான்றோர் பெருமக்களை, தேவார மூவர், சமயக் குரவர் நால்வர், வள்ளலார், காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதர், ஆழ்வார் போன்றவர்களை எல்லாம் கௌரவிக்கும் வகையில் நாங்கள் விருதுகள் வழங்கலாம் என்று இருக்கிறோம் என்று அறிவித்தீர்கள். ஆனால், இன்றையதினம் வரை அப்படி ஒரு விருது வழங்கியதாக நான் பத்திரிகையில் படிக்கவில்லை. முதலமைச்சர் பல இடங்களுக்கு அரசு நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறார்கள்; இப்படி ஏதாவது ஒரு விருது கொடுப்பார்களா என்று எங்களைப் போன்ற தமிழ் ஆர்வம் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், இதுவரை ஒன்றும் தொடுக்கவில்லை.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விருதுகளுக்கான தகுதியானவர்களைத் தேர்ந்து எடுக்கிற அந்தப் பணியிலே இப்பொழுது அரசு ஈடுபட்டிருக்கிறது. தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற அந்தப் பணி முடிந்தவுடன் விரைவிலேயே அந்த விருதுகள் வழங்கப்படும். அது இப்போது அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. அதற்கு மாண்புமிகு வேலு அவர்கள் தகுதியானவர்கள் என்று விண்ணப்பித்தால், அதையும் நாங்கள் பரிசீலிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களேகூட தமிழ் ஆர்வம் உள்ளவராக இருக்கிறீர்கள் என்று நான் கருதுகின்றேன். உங்களுக்குக்கூட அப்படி ஒரு பட்டம் கொடுத்து இருக்கலாம்; அதாவது விருது கொடுத்து இருக்கலாம். எனவே, நீங்கள் மனுச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை; முதலமைச்சர் நினைத்தால் கொடுக்கலாம். எனவே, அது தொடர்ந்து நடைபெறவில்லை; அறிவிப்போடு சரி........

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்கெனவே பல பட்டங்களைப் பெற்றிருக்கிறீர்கள். புதிதாகப் பட்டம் பெறுகிற அளவிற்கு, கொடுப்பதற்கு உங்களுக்கு இனிமேல் பட்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலுவினுடைய சிபாரிசை, ஏதாவது, முடிந்தால் பரிசீலிக்கலாம். *(சிரிப்பு)*

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மாணவர்கள் விடுதிகள் கட்டுகிறோம் என்று அறிவிக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி நிதியிலிருந்துகூடப் பணம் கொடுக்கலாம் என்று சொன்னீர்கள். நாங்களும் நிதியைக் கொடுத்தோம். ஆனால், 2 ஆண்டு காலம் கழித்து, இப்போது...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், வரலாறு காணாத அளவிற்கு, அவர்களுக்கு விடுதிகள் இந்த ஆட்சியில்தான், அம்மாவின் ஆட்சியில்தான் கட்டப்பட்டு வருகின்றன என்பது நாடறிந்த உண்மை.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 12 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று இதே அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது. 2 ஆண்டு காலம் கழித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஒரு வாரத்திற்கு முன்னால் ஒரு கடிதம் வருகிறது. உங்களுடைய பணத்தில் எங்களால் கட்டடம் கட்ட இயலாமை; அதாவது எங்களால் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்ட முடியவில்லை; எங்களுடைய இயலாமையை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, இந்தப் பணத்தை வேறு வேலைக்கு ஒதுக்குங்கள் என்று கடிதம் வந்திருக்கிறது....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை; அப்படியில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணமும், அரசாங்கத்தினுடைய பணம்தான். That is also a budgetary allocation. இஷ்டம்போல் சட்டமன்ற உறுப்பினர் நிதியைச் செலவு செய்ய முடியாது; எந்த மாநிலத்திலும் இல்லை. மக்கள் பணிகளுக்காகச் செலவழிக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இப்படிப்பட்ட ஒரு கடிதம் வந்திருந்தால், அது அரசின் இயலாமை என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. உதாரணமாக, சில தொகுதிகளில் மகளிர்க்கான சுகாதார வளாகங்கள், துப்புரவு வளாகங்கள் கட்டுவதற்கென்று எம்.எல்.ஏ.-வினுடைய தொகுதி நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி இருக்கிறோம். ஆனால், அந்தத் தொகுதியில் தேவையில்லை என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கும்; அல்லது குறிப்பிட்ட இடத்தில் கட்ட முடியாத—அங்கே ஏதாவது கோயில் இருக்கும்; எனவே கட்ட முடியாத—நிலை இருக்கும். ஆகவே அந்த நிதியை அதற்காகப் பயன்படுத்த முடியாது; வேறு எதற்காவது பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுவார். அதனால், அது அரசின் இயலாமை என்று பொருளல்ல.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், மாவட்ட ஆட்சியரிடமிருந்து அப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறது. அங்குத் தேவையும் இருக்கிறது. இடம் இல்லை என்று சொன்னால், அரசாங்கம் அதற்கு முயற்சி எடுத்து இதைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. ஏனென்றால், நாங்கள்



ஏற்கெனவே allot பண்ணி இருக்கிறோம். ஆனால், அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கு வலியுறுத்தி, அங்குத் தேவை இருக்கின்ற காரணத்தால், அதைக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன், 2001-ல் இந்தத் துறை சம்பந்தமான ஓர் ஆய்வை நடத்தினேன். அப்போது, தமிழகம் எங்கும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், இந்த வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கான விடுதிகளில், அரசு நடத்தும் விடுதிகளில் எந்தவிதமான வசதிகளும் இல்லை என்பது அந்த ஆய்வில் தெரிய வந்தது. பல இடங்களில் வாடகைக் கட்டடங்களில் அவை இயங்கிக் கொண்டிருந்தன; மின்சாரம் இல்லை, குடிநீர் இல்லை, துப்புரவு வசதிகள் இல்லை, எதுவுமே இல்லை; வெறும் கட்டடம், நான்கு சுவர்கள் மட்டுமே இருந்தன. அதனால்தான் ஒரு crash programme— போர்க்கால அடிப்படையில் ஒரு திட்டத்தை—வகுத்து, இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களாகக் கட்டி முடிக்க வேண்டும்; பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்க்கு, எல்லா அடிப்படை வசதிகளுடன் கூடிய நல்ல விடுதிக் கட்டடங்களைக் கட்டித்தர வேண்டும் என்று ஒரு திட்டத்தை வகுத்து, அரசிடம் போதுமான நிதி வசதி இல்லாததால்தான் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதற்கான நிதியை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். அந்தத் திட்டம் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. சில இடங்களில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததுபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்தகைய கட்டடத்தைக் கட்ட இயலவில்லை என்று தெரிவித்திருந்தால், அந்த விவரங்களை நீங்கள் அரசின் சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்கலாம். உடனடியாக இந்த அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியுடன், மாவட்ட ஆட்சித் தலைவர், 'இயலாமை'

என்று கொடுத்திருக்கிற கடிதத்தை நான் முதலமைச்சருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். மேலும் 2002-2003 ஆம் ஆண்டு அறிக்கையில்...

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, தற்போது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக 114 கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு 100 விடுதிகள் கட்ட வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள், இடத்தைத் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இடமிருக்கும் இடங்களிலும், மற்றும் நிலம் கிடைக்கும் சூழ்நிலைகளுக்கேற்பவும், விடுதிகள் தேவைப்படுகின்ற இடத்திலே கட்டப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒழுங்காக, செம்மையாகப் பயன்படுத்தப்படும் என்ற விவரத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு அறிக்கையில், பக்கம் 26-ல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள முதியோர்களுக்குத் தாராளமான மருத்துவ வசதி அளிக்கிற திட்டத்தில், மருத்துவ வசதி அட்டை, அதாவது Health Card முறையைக் கொண்டு வருகிறோம் என்று அறிவித்தீர்களேயொழிய, இதுவரை அப்படி ஒரு Card கொடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்ல, சென்ற முறை சட்டமன்றத்தில்கூட...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேலு, அமைச்சர் அவர்கள் சொல்கிற பதில் எல்லாம் போக 10 நிமிடங்கள் உங்களுக்கு வழங்கப்படும். (குறுக்கீடு) அவர்களுடைய எண்ணிக்கை அதிகம்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று, குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டும்; அல்லது நீங்கள் கேள்வி கேட்டால் எங்களுடைய பதிலை நீங்கள் வாங்கிக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதியோர்களுக்கான சிகிச்சைக்கு அறிவித்த அறிவிப்பு, அறிவிப்பாகவே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.



உள்ளபடியே அவருக்கு 60 வயதிற்கு மேல் ஆகவில்லை என்று நான் நினைக்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்குப் பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திலும் Geriatric Ward என்ற முதியோர் தனிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுக்குத் தனியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. Health Card கொடுக்கிறோம் என்று சொல்லி (குறுக்கீடு) சொல்கிறேன், இருங்கள். Health Card கொடுக்கிறோம் என்று நாங்கள் சொன்னது உண்மை. Health Cards வழங்குவதற்கு, இப்போது அந்தப் பட்டியலை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். எதற்குமே கால அவகாசம் வேண்டும். திருமணம் செய்த பிறகு, மூன்று மாதங்களிலே ஏன் பிள்ளை பெறவில்லை என்று யாரும் கேட்க மாட்டார்கள். இப்படி அறிவித்து ஓர் ஆண்டுகூட முடியவில்லை. தமிழகம் முழுவதும் இருக்கிற 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களைக் கணக்கு எடுக்க வேண்டும். ஒவ்வொரு மருத்துவமனையிலும் எத்தனை முதியவர்கள் வருகிறார்கள் என்று கணக்கு எடுக்க வேண்டும். அதற்காகத்தான் தனிப் பிரிவை நாங்கள் அமைத்திருக்கிறோம். அப்படித் தொடர்ந்து வருகிற அந்த முதியவர்களுக்கு உரிய அட்டை —Health Card—வழங்கப்படும். அதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தனது ஆட்சிக் காலத்திலே சென்னை மருத்துவமனையில்தான் இந்தப் பிரிவை முதலில் தொடங்கி வைத்தார்கள். அதற்குப் பின்னால் நான் கூடச் சொன்னேன். மாவட்டந்தோறும், 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இப்படிப்பட்ட வைத்திய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால், அரசு அறிவித்ததே தவிர, எந்தவொரு மாவட்டத்திலும், எந்தவொரு இடத்திலும் நடைமுறையில் இல்லை என்பதுதான் இப்போது சொல்லப்படுகிறது. ஆனால், எவ்வளவு நாளைக்குக் கணக்கு எடுக்கப் போகிறோம்? எவ்வளவு நாளைக்குக் கணக்கெடுத்து, செய்யப் போகிறோம்? அதற்கு அளவுகோலே கிடையாது, ஒன்றுமே செய்வது கிடையாது. மருத்துவமனையிலே வருகிறவர்களுக்குக் கொடுப்பதுதான் அந்த Card.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Geriatric Ward என்பது வேறு. Geriatric பிரிவு என்பது வேறு. சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதற்கான வார்டு இருக்கிறது. ஆனால் மற்றத் தலைமை மருத்துவமனைகளிலே அந்தப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

[2003 மார்ச் 27

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலுரையிலே சொல்கிறபோது சொன்னார்கள்: நான், எதிர்க்கட்சியிலிருந்து வந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் தூள் கிளப்புவார்கள், இங்கே அனல் பறக்கும் என்றெல்லாம் பார்த்தேன்; தூசிகூடப் பறக்கவில்லை என்று சொல்லிவிட்டு, யாராவது சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன், யாரும் பேசவில்லை என்று சொன்னார்கள்—குறிப்பிலே இருக்கிறது. ஓர் ஆண்டு காலத்திலே, சந்தனக் கடத்தல் வீரப்பனை—அதுவும், இப்போது காவல் துறை அதிகாரிகளாக இருப்பவர்கள் எல்லாம் திறமையற்றவர்கள். ஓய்வு பெற்ற ஓர் அதிகாரி, அவர்தான் திறமையானவர், அவரை வைத்துப்-பிடித்துவிடலாம் என்று நாங்கள் அவருக்கு ஆணை பிறப்பித்திருக்கிறோம், உடனே பிடித்து விடுவார் என்று குறிப்பிட்டார்கள். ஓராண்டு காலமாக, இந்த மாயாவி வீரப்பனைப் பிடிப்பதாக எந்தவித முகாந்திரமும் இல்லை. பிடித்ததாக எந்தப் பத்திரிகைகளிலும் வரவில்லை. அவன் என்ன ஆனான் என்றே தெரியவில்லை. எனவே, பதிலுரையிலே நிதி அமைச்சர் அவர்கள், அதற்காக எத்தனை கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறீர்கள் என்பதை அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதற்கு அடுத்து, 2002-2003 ஆம் ஆண்டு அறிக்கையிலே, ஏழை விவசாயிகள். கூட்டுறவுக் கடன்கள் வாங்கியவர்களுக்கெல்லாம் 110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்கிறோம் என்று நீங்கள் அறிவித்தீர்கள். அதற்குக்கூட 30-6-2002 வரை ஒரு தேதியும் நிர்ணயம் செய்தீர்கள். விவசாயிகள் எல்லாம் இந்தச் சலுகைகளைப் பெறலாம் என்று நினைத்துக்கொண்டு தன் வீட்டிலே இருந்த தன் மனைவியின் காதிலே இருந்ததை, கழுத்திலே இருந்ததை எல்லாம் தனியார் கடையிலே அடமானம் வைத்துவிட்டு, அந்தப் பணத்தை எடுத்துக் கூட்டுறவுக் கடனுக்காகக் கட்டினார்கள். நில வள வங்கியிலே கொண்டுபோய்க் கட்டினார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நில வள வங்கியிலே பணத்தைப் பெற்றுக்கொண்டு அவனுடைய பத்திரத்தை, சொந்தப் பத்திரத்தைக் கொடுங்கள் என்று கேட்டால், நில வள வங்கியில் பணியாற்றுகிற கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்த அரசாங்கம் மானியமாகக் கொடுக்கிற பணம் இருக்கிறதே, அந்தப் பணம் இதுவரையில் எங்களுக்கு வந்து சேரவில்லை, அதனால்



2003 மார்ச் 27] [திரு. எ.வ. வேலு]

பத்திரத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்லி, ஓராண்டு காலமாக ஒவ்வொரு விவசாயியையும், நில வள வங்கியிலே இருக்கிற, கூட்டுறவு வங்கியிலே இருக்கிற அதிகாரி பெருமக்கள் அலைக்கழிக்கிறார்கள் என்ற செய்தியை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இலவச அரிசியைப் பற்றித் தொடர்ந்து 3 தினங்களாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார் ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகின்றேன். சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம், வெளியிலே இருக்கிற செய்தியை இந்த அரசாங்கத்திற்குச் சொல்லவேண்டியது எங்களது கடமை, ஜனநாயகக் கடமை. அதை நாங்கள் சொன்னால், அதை நாங்கள் விசாரிக்கிறோம் அல்லது விசாரித்துப் பதில் சொல்கிறோம்; உண்மை என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னால், அரசுக்கு அது அழகு. ஆனால், எதைப் பேசினாலும். நடக்கவேயில்லை, நடக்கவேயில்லை என்று சொன்னால் எப்படி உண்மைச் செய்தி இந்த அரசாங்கத்திற்கு வந்து சேரும்? என்னுடைய தொகுதியில் நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன் அரிசியைப் பொறுத்த அளவுக்கு, கிட்டத்தட்ட 250 பேர் மனுப் போட்டார்கள். அதாவது, எங்களுக்குச் சோறு போடுங்கள், முதலமைச்சர் பெயரில் வந்து இருக்கிறது, சோறு போடுங்கள் என்று மனுப் போட்டார்கள். குறிப்பாக, நான் ஒரே ஒரு ஊரை மட்டும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே செங்கம் தாலுகாவில் கொழுந்தன்பட்டு என்று ஒரு ஊர்; அந்த ஊரிலே எங்களுக்குச் சோறு போடுங்கள் என்று 242 பேர் மனுப் போட்டார்கள். இந்த அரசு 50 பேருக்கு மட்டும் உணவு வழங்குகிற திட்டத்தில் உணவு போட்டார்கள். 50 பேர் ஒரு வாரம் சாப்பிட்டார்கள். அதற்குப் பின்னாலே 18 பேருக்கு மட்டும்தான் அரிசி கொடுக்கப்படுகிறது. மனுப் போட்டது 242 பேர். மனுவைப் பதிவு செய்தவர்களுக்கெல்லாம் அரிசி கிடைக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள். 242 பேர் மனுப் போடுகிறார்கள். உணவு 50 பேருக்குத்தான் கிடைத்தது. இலவச அரிசி எத்தனை பேருக்குக் கிடைக்கிறது என்று சொன்னால், 18 பேருக்குத்தான் கிடைக்கிறது**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றால், அங்கே போய் வாங்குவதற்குக் கொஞ்சம் கூச்சப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்து, என்னுடைய கிராமத்தில் உள்ளவர்களிலேயே பலபேர் பட்டினி கிடந்தால்கூடப் பரவாயில்லை, சோறு போய் வாங்குகிற அளவுக்கு எங்களுக்கு ஒரு நிலை வேண்டாம், அரிசி வேண்டுமானால் கொடுக்கட்டும் என்று சொன்னார்கள். இரண்டாவது, அந்தக் குடும்பத்திலே நான்கு பேர் இருப்பார்களானால், அரிசி கிடைத்தால் ஆளுக்குக் கொஞ்சம் கஞ்சி குடிக்க முடியும். ஆனால், அதற்குப் பதிலாக சோறாக இருந்தால், அவர்கள் மன நிறைவோடு ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கிட்டுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதில்லை. ஆகவே, சோறு போட்டபோது விண்ணப்பிக்காத பல பேர், அரிசி கொடுக்கிறபோது விண்ணப்பிக்கிற அந்த வறுமை நிலையிலே இருக்கிறார்கள். அப்படி வறுமை நிலையிலே உள்ளவர்களையும் இந்த அரசு கருத வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைவிடத் தாராள மனம் படைத்தவர்கள் தமிழ்நாட்டிலே எந்தத் தலைவரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கொடுக்கிற அளவுக்குத்தான் கொடுக்க முடியும். வேண்டுமென்றால், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சார்ந்திருக்கின்ற அந்தக் கட்சியினுடைய அமைச்சர் பெருமக்கள் மத்திய அரசிலே இருக்கிறார்கள். இதற்கென்று கூடுதலாக அரிசியை நமக்கு வாங்கித் தருவார்களானால், நிச்சயமாக அதைக் கேட்கிற அளவுக்கு, மற்றவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மத்திய அரசு வரையில் போக வேண்டியதில்லை. இந்த அரசுக்கென்று சில தகுதி இருக்கிறது; சில உரிமைகள் இருக்கின்றன; சில கடமைகள் இருக்கின்றன; ஏதேனும் குறைபாடு இருக்குமானால், அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு இந்த அமைச்சர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? குறைபாடே இல்லாத ஒரு காரியத்தைச் செய்வது என்பது எந்த அரசாங்கத்திலேயும் இயலாத ஒரு காரியம். சில குறைபாடுகள் வரும். வருகின்ற குறைபாட்டை அக்கறையோடு நீக்கினால் ஏழைகளுடைய மனம் நிம்மதி அடையும்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இந்த அரசு கடமையைச் செய்வதற்கு மத்திய அரசினுடைய உதவி தேவைப்படுகிறது. அதற்கு நீங்கள் உதவுங்கள். அதற்குத் தடையாக இருந்து விடாதீர்கள். அதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எ.வ.வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே 23 ஆம் பக்கத்தில், "இவ்வரசு முதன்மைத் துறையில் விரைந்த வளர்ச்சி காண்பதன் மூலம் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, ஒட்டுமொத்த ஊரக வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், இந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரவேண்டிய நிதி, குறிப்பாக, திருவண்ணாமலை ஒன்றியத்தில், 2002-2003ஆம் ஆண்டிற்கு வரவேண்டிய நிதி, கிட்டத்தட்ட 91,11,435/- ரூபாய். ஆனால், வந்திருப்பது எவ்வளவு என்று சொன்னால் ரூ. 56,57,298/- சுமார் 34,54,000/- ரூபாய் வரவில்லை, இந்த வருடத்திற்கு வரவேண்டியது. அப்படியானால், நீங்கள், உள்ளாட்சிகளுக்கு நாங்கள் முன்னுரிமை அளித்து, அதற்கு முக்கியத்துவம் தருகிறோம் என்று சொல்வது எந்த விதத்திலே நியாயம்? எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு, உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தரவேண்டிய பணத்தைத் தரமுடியாமல் போனதற்குக் காரணம், மைய அரசு, மாநில அரசுகளுக்குத் தரவேண்டிய devolution-ல் அவர்கள் அதைக் குறைத்துக் கொண்டார்கள். 540 கோடி ரூபாய் சென்ற ஆண்டு மட்டும் குறைத்துக் கொண்டார்கள். தற்போது மீண்டும் 275 கோடியைக் குறைத்துக் கொண்டார்கள். Proportionately, that is being cut when it is being handed over to the local bodies.

**திரு. எ.வ.வேலு:** அதோடு மட்டுமல்ல, இப்பொழுதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரூர் சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோதுகூட, வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் ஆங்காங்கே முறையாக நடைபெறுகிறது, உங்களுடைய தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்று கேட்டார்கள். என்னுடைய தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நான் இல்லையென்று சொல்லவில்லை.

ஆனால் அதில் தவறு நடக்கிறது. அதை அரசிற்கு நாங்கள் உரிய நேரத்தில் சொல்கிறோம். இப்பொழுதுகூட உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். குறிஞ்சிப்பாடி தொகுதியில் 22 குளங்களை வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுத்து, தூர் வாரினார்கள். சட்டமன்ற உறுப்பினர், Chief Secretary-க்கு, முதலமைச்சருக்கு, டெல்லிக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தந்தி கொடுக்கிறார். வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தில் அரிசிதான் கொடுக்க வேண்டும். அதை விடுத்து, 22 குளங்களை புல்டோசரைப் போட்டுத் தூர் வாருவதன் மூலம் பணி நடைபெற்றது என்று உரிய நேரத்தில் தந்தி கொடுக்கிறார். அந்த 22 குளங்களிலும் மெஷினால் தூர் வாரியதற்கு payment வழங்கியாகிவிட்டது. அரசுக்குச் சொல்லியும் கூட, அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என்று நான் கருதுகிறேன். எனவே, அமைச்சர் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு திட்டத்தைப் போட்டுவிட்டால், நடக்கும் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், அதிகாரிகள் சரியாக வேலை செய்யமாட்டார்கள் இந்த ஆட்சியில். காரணம் என்னவென்று சொன்னால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகளைப் பறித்து விட்டீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியினால், பிழைப்பில்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிற ஏழை எளிய, நிலமற்ற, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் --Food for Work திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இதில் உண்மை என்னவென்றால், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் இந்த வேலைக்கு வர விரும்புவதில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் விவசாயம்தான். இந்த Food for Work திட்டத்தில் சேரும்படி யாரையும் இந்த அரசு கட்டாயப்படுத்த முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேன்மேலும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களை இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று பகீரத முயற்சி எடுத்து வருகிறார்கள். ஆனால் எப்பொழுதுமே இதுபோன்ற திட்டங்களுக்கு விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு resistance, எதிர்ப்பு இருந்து வந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இப்போது குறிப்பிட்ட இடத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புகளைப் பறித்து, ஏதோ புல்டோசர்களைப் பயன்படுத்தினார்கள் என்பது உண்மையாக இருக்காது. அந்த



இடத்தில் விவசாயத் தொழிலாளர்கள் இந்தப் பணிகளைச் செய்ய முன்வந்திருக்க மாட்டார்கள். அதனால்தான் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ. வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விசாரணை செய்ய வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், குறிஞ்சிப்பாடி பகுதியில் இருப்பவர்கள் பணக்காரர்கள் இல்லை. ஏழைகள் இருக்கிற பகுதிதான், (மணியடிக்கப்பெற்றது) விசாரிக்க வேண்டுமென்பதற்குத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் பணக்காரர்களைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பே இல்லை. இந்தத் திட்டம், அதாவது வேலைக்கு உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டதே, ஏழை எளிய, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத்தான். அந்தத் தொழிலாளர்கள் எல்லோருமே ஏழைகள்தான். ஆனால் பெரும்பாலானவர்கள் வேறு பணிகளுக்குச் செல்ல விரும்புவதில்லை. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) குறுக்கீடுகளெல்லாம் போக 10, 11 மணித்துளிகள் பேசி இருக்கிறீர்கள். இன்னும் 2 நிமிடங்களில் பேச்சை முடியுங்கள்.

**திரு. எ. வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அரசு ஏழை விவசாயிகள்மீது கருணை கொண்டு 28 மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணம் அறிவித்து இருக்கிறது. 28 மாவட்டங்களிலும் வறட்சி என்று நாங்களும் நினைக்கிறோம். நாங்களும் விவசாயிகள்தான். தொடர்ந்து மூன்று தினங்களாக, முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சரும், அதிலும் குறிப்பாக, வருவாய்த் துறை அமைச்சரும் சொல்கிறார்கள், எங்கேயுமே நாங்கள் வரி வசூல் பண்ணவில்லை என்று. இதே மாமன்றத்தில் 23 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், எங்களுக்கும் தகவல் வரவில்லை, உடனே ஆணையை அனுப்புகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் 24 ஆம் தேதிகூட வசூல் செய்யப்பட்டிருக்கிறது; ரசீது என்னிடத்திலே இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் அளிக்க விரும்புகிறேன். நான் கேட்க விரும்புவதெல்லாம், ஓர் அரசாங்கம் 28 மாவட்டங்களில் வறட்சி என்று அறிவித்த பின்பு, வரி வஜா செய்யப்படுகிறது, கூட்டுறவுத் துறையிலிருந்து சம்மன் அளிக்கப்படுகிறது, ஜப்தி செய்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, தமிழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டிருப்பதால், 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிப்புச் செய்தது. மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அரசு அறிவிப்புச் செய்தால், நில வரி வசூலிக்கப்படுவதில்லை. மாவட்ட வருவாய் அலுவலர்கள் கூட்டத்தில் அரசுச் செயலர், வரி வசூல் செய்ய வேண்டாமென்று வாய் மூலம் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். சில தினங்களுக்கு முன்னால் வரி வசூல் நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அதை விசாரிக்கிறபோது, தாமாகவே சிலர் முன்வந்து நில வரியைக் கட்டியிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. மீண்டும் அனைத்து மாவட்டங்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, நில வரி வசூல் செய்யப்பட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நில வரி வசூல் செய்திருந்தால், அது அடுத்த ஆண்டு வசூலிக்கப்பட வேண்டிய நில வரியில் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு எ.வ. வேலு:** இல்லை, இல்லை, இதோ பாருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் 9 நிமிடம்தான் பேசியிருக்கிறேன். பக்கத்திலே குறித்துக்கொண்டே வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 95-ல் "உற்பத்தித் துறையிலிருந்து தனது செயல்பாட்டைத் திரும்பப் பெற இவ்வரசு கருதுகிறது" என்கிற வாசகம் இருக்கிறது. நான் அதிலே அதிகமாக உள்ளே போகத் தயாராக இல்லை. ஆனால், ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆண்டு கொண்டிருக்கிறபோது, சேலம் உருக்காலையைப் பொறுத்த அளவிற்கு--திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை, எந்தப் பொதுத் துறை நிறுவனமாக இருந்தாலும்--அந்தப் பொதுத் துறை நிறுவனத்திலே இருக்கிற தொழிலாளிகள் பாதிக்கப்படாமல் அந்தத் தொழிற்சாலை நடைபெற வேண்டும் என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நீங்கள் எல்லாம் ஒரு போராட்டம் நடத்தி, தொழிற்சாலையைத் தனியார் எடுத்துக்கொள்ளக் கூடாது



என்றெல்லாம்கூடக் கருத்தைச் சொன்னீர்கள். நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், இன்றைக்கு எடுத்துக்கொள்ள..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு எ.வ. வேலு:** ஆனால் இன்றைக்கு, பொதுத் துறையில் நாங்கள் பின்வாங்க இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, சாத்தான்குளம் தேர்தலிலே சென்று, நீங்கள் அங்கு சிமெண்ட் ஆலை உருவாக்குகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இதில் முரண்பாடு இருக்கிறது என்று சொல்கிறேன். ஒரு பக்கம் சர்க்கரை ஆலை நஷ்டத்திலே போகிறது; டெக்ஸ்டைல்ஸ் நஷ்டத்திலே போகிறது; சிமெண்ட் தொழிற்சாலை நஷ்டத்திலே போகிறது. அதனால் பொதுத் துறையை எடுக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கம் நாங்கள் சிமெண்ட் தொழிற்சாலையைத் தொடங்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். முரண்பாடுகள் இந்த அரசாங்கத்தின் கொள்கையிலே இருக்கின்றன. அதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதோடு மட்டும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடு) அவரே சொல்லிவிட்டார், 9 நிமிடங்கள். (குறுக்கீடு) வாக்கியத்தை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவோம் என்று அரசு சொல்கிறபோதே, அது அரசு முதலீட்டிலேயே தொடங்கப்படுகிறதா, அல்லது Joint Sector ஆகத் தொடங்கப்படுகிறதா அல்லது Private and Public Partnership என்ற முறையிலே தொடங்கப்படுகிறதா அல்லது தனியார் துறை மூலமாகத் தொடங்கப்படுகிறதா என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஒரு தொழிற்சாலை அங்கு வரும் என்றால், அரசு ஊக்குவிப்பின் மூலமாகத் தனியாரும் அங்கு தொடங்கலாம்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தைப் பொறுத்த அளவிற்கு, தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே முனிசிபாலிட்டி கிடையாது. எல்லாமே கிராமம்... குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம்; பழைய வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை

22556

மாவட்டம், இறைவைப் பாசனத்திற்கு முதல் மாவட்டம். தஞ்சாவூரிலே டெல்டா பகுதியாக இருந்தாலும் கரன்ட் வைத்து இறைவை விவசாயம் பண்ணுவதில் முதல் மாவட்டம். திருவண்ணாமலை மாவட்டம். குறிப்பாக வேலூர் மாவட்டம். ஆனால் சென்ற முறை இதே மாமன்றத்திலே நான் பேசுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். நான் சொன்னேன், மீட்டர் வைக்கிறேன் என்று சொல்கிறீர்களே, எங்களுக்குப் பயமாக இருக்கிறது என்று சொன்னேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்டார்கள்; இந்த மீட்டர் வைப்பது என்பது இலவச மின்சாரத்தை ரத்துச் செய்வதற்காக அல்ல. விவசாயிகள் எந்த அளவிற்கு மின்சாரத்தை எடுக்கிறார்கள் என்று... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி எல்லாம் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டு விட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே மாண்புமிகு உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்வதால், ஏற்கெனவே தெரிவித்த பதில்களை மீண்டும் கூற வேண்டிய ஒரு கட்டாயத்தை அவர் ஏற்படுத்துகிறார். மீட்டர்கள் பொருத்தப்படும் என்று ஒப்புதல் அளித்தது தி.மு.க. அரசு; எங்களுக்கு முன்னால் இருந்த தி.மு.க. அரசு; நாங்கள் அல்ல. அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய நிர்பந்தத்தில் நாங்கள் இருக்கிறோம். இலவச மின்சாரம் ரத்துச் செய்யப்பட மாட்டாது என்று அறிவித்தேன். அதில் எந்த முரண்பாடும் இல்லை. இன்றைக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது; கிடைக்கத்தான் போகிறது. அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை அரசே செலுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர்.

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த, இந்தியத் துணைக் கண்டத்தின் இணையற்ற முதலமைச்சர் அன்னை அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையில் வார்த்தை ஜாலங்கள்தான் இருக்கின்றன; இது மக்களுக்குப் பயன் அளிக்காத ஒரு பட்ஜெட் என்று ஒரு தலைவரும்,



இந்த நிதிநிலை அறிக்கை ஈராக் மீது அமெரிக்கா போட்ட குண்டு போல் இருக்கிறது என்று முன்னாள் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களும் கருத்துக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் வார்த்தை ஜாலத்தை வைத்து, என்ன தொல்காப்பியத்துக்கு உரையா எழுதப் போகிறோம்? தமிழகத்தை இந்தியாவிலே முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்று சபதம் ஏற்று, புரட்சித் தலைவி அவர்கள் எப்போது ஓய்வு எடுக்கிறார், எப்போது உறங்குகிறார் என்று இல்லாமல் 20 மணி நேரமும் தமிழக மக்களுக்காக, தமிழ்நாட்டுக்காக உழைக்கிற ஒரு தங்கத் தலைவியைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்றால், அதனால் தமிழ்நாடு பெருமை அடைகிறது.

பிற்பகல் 12-10

கடந்த தி.மு.க. ஆட்சியில் விட்டுச் சென்றதோ காலிப் பாத்திரம். ஆனால், அன்னையின் கையில் கொடுக்கப்பட்ட அந்தக் காலிப் பாத்திரத்தை, அன்னை அவர்கள் அட்சயப் பாத்திரமாக மாற்றி, தினந்தோறும் திட்டத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். 2 ஆண்டுகளில் உள்ள கடுமையான நிதி நெருக்கடியிலும், கடுமையான சோதனையிலும், எதிர்க் கட்சியினர் போராட்டங்கள், இத்தனைக்கும் இடையிலேதான் 5 இடைத் தேர்தல்கள் தமிழ்நாட்டிலே வந்தன. ஒரு நாட்டிலே ஒரு ஆளும் கட்சிக்கு உரைகல்லாக, ஒரு நற்சான்று கொடுப்பது இடைத் தேர்தல். ஆனால் 5 இடைத் தேர்தல்களிலும் உரைத்து, உரைத்துப் பார்த்தார்கள். ஆனால் புரட்சித் தலைவிக்குத்தான் அந்த உரைகல்லிலே வெற்றி கிடைத்ததே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு இல்லை என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டந்தோறும் செல்கிறார்கள். இது ஆடம்பர விழா என்கிறார்கள்; இது தேவையா என்கிறார்கள். மாவட்டந்தோறும் ஒரு முதலமைச்சர் செல்கிற நேரத்தில், அங்கு இருக்கிற மக்களுடைய நலப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்கள். செல்லுகிற இடமெல்லாம், கொளுத்தும் வெயிலின் கொடுமையிலும் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகப் பந்தல் போடப்படுகிறது. அந்தப் பந்தலை ஆடம்பரம் என்கிறார்கள். மக்கள் வெயிலிலே வாடக்கூடாது என்பதற்காகத்தான், இப்படிப்பட்ட விழாக்களை ஆடம்பரம் இல்லாமல் மதிய வேளையிலும் புரட்சித் தலைவி அந்த விழாக்களை நடத்தி, அதன் வாயிலாக மக்களுக்கு நலப் பணிகளை வாரிக் கொண்டிருக்கிறார்கள். சில மக்கள் செல்வாக்கு இல்லாத

தலைவர்கள், அவர்கள் போகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆடம்பரம்; அதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்தாலும் தவறு என்கிறார்கள். அதே நேரத்தில் புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே இருந்து கோட்டையிலே பணியாற்றினால், ஏன் சென்னையிலேயே இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள், அவர் மாவட்டந்தோறும் போகக்கூடாதா என்று சொல்வார்கள். அது மட்டும் இல்லை. இங்கேயே இருக்கிறார், மாவட்டத்திற்குச் செல்லவில்லை என்று குறை சொல்வார்கள். அதற்கு எனக்கு ஒரு பாட்டுக்கூட ஞாபகத்திற்கு வருகிறது. அந்தப் பாட்லை இங்கே நான் கவிதை வழியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பைத்தியக்காரன் பத்தும் சொல்வான்,*
*போகட்டும் விட்டு விடு,*
*படைத்தவன் இருப்பான், பார்த்துக்கொள்வான்,*
*பயணத்தைத் தொடர்ந்துவிடு,*
*அன்னையே பயணத்தைத் தொடர்ந்துவிடுங்கள்,*
*நரம்பில்லாத நாவால் எதையும் வரம்பில்லாமல் கூறிடுவார்,*
*நரம்பில்லாத நாவால் எதையும் வரம்பில்லாமல் கூறிடுவார்;*
*காய்த்த மரம்தான் கல்லடிபடும் எனக் கண்கூடாகப் பார்த்ததுண்டு;*
*புத்தன், ஏசு, காந்தியைக்கூட குற்றம் சொல்லிக் கேட்டதுண்டு.*

(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பைத்தியக்காரர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படிப்பட்ட இசை மேதை எங்களுக்குத் துணைத் தலைவராகக் கிடைத்திருக்கிறார்! பெருமைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அன்னை அவர்களே, சொல்பவர்கள் சொல்லட்டும், உங்கள் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். அதை மக்கள் விரும்புகிறார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இதைவிட வேறு தீர்ப்பு வேண்டியதில்லை. மாவட்டந்தோறும் செல்கிறாரே, அந்த நேரத்தில் --உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்டந்தோறும் செல்கிறபோது, எத்தனை ஏழை விவசாயிகள், எத்தனை வறுமைக் கோட்டிலே இருக்கிறவர்கள், அத்தனை பேருக்கும், 19 மாவட்டங்களுக்குச் சென்று தன்னுடைய பணிகளை ஆற்றினாரே— என்றைக்காவது ஓய்வு எடுத்தாரா?



பிற்பகல் 12-15

Election-க்குத் தொடர்ந்து போகிறார். அதை முடித்துவிட்டுத் திரும்பவும் மாவட்டத்திற்குப் போகிறார். போகிற நேரத்தில், இதைக்கூட நான் பேரவைத் தலைவரிடம் இந்த Photo—வைக் காட்டியிருக்கிறேன். அனுமதியும் பெற்றிருக்கிறேன். ஒரு பெண்ணைப் பாருங்கள். இரக்கமான அந்த வடிவத்தைப் பார்த்தால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். திருச்சி மாவட்டத்திலே வந்து கலந்துகொள்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு முதலமைச்சர் வருகிற நேரத்தில், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மணச்சநல்லூர் பகுதியைச் சேர்ந்த அறிவுக்கண்ணு என்கிற ஒரு பெண்—பி. காம். பட்டதாரி, 24 வயதாகிறது. 24 வயது, ஆண்டவர்கள் யாருக்கும் தெரியாதா?--24 வயதிலே. அந்தப் பெண், புரட்சித் தலைவி அம்மாவிடம்தான் அந்தப் பணியைப் பெற வேண்டுமா? அதற்கு முன்னாலே இருந்தவர்கள், அவர்களுக்கெல்லாம் அந்த உணர்வு இல்லையா? அந்த இரக்கம் இல்லையா? அந்தப் பெண்ணைப் பார்த்து உதவி செய்வதற்கு இரக்கம்கூட வரவில்லையா? அந்த அறிவுக்கண்ணுவை, கஷ்டப்பட்டு பிகாம். வரையும் படிக்க வைத்துவிட்டு, வேலையில்லை என்று அவதிபட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில்தான். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தகவலுக்கு வருகிறது. உத்தரவும் வந்தவுடனே அவருக்கு எழுத்தர் பதவியைக் கொடுக்கிறார். அந்தப் போட்டுவிட்டார்கள். அந்த எழுத்தர் பதவி கொடுக்கிற அந்தப் பெண்ணினுடைய உயரம் என்ன தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பணியிலேயும் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அவர் பணியிலே சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவருடைய உயரமே இரண்டே அடிதான். சர்க்கஸில் இருக்கிற இரண்டே அடி மாதிரி. அதைச் சொல்ல நான் வருத்தப்படுகிறேன். இருக்கின்ற ஒரு பெண்ணுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குனிந்து அவருக்கு வேலை கொடுக்கிறாரே, அந்தப் பக்குவம் உங்களுக்கு இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு குனிந்து அந்த இரண்டு அடி உள்ள அந்தப் பெண்ணுக்கு அந்த உத்தரவைக் கொடுத்து பணியிலே சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார். வங்கியிலே, படிப்பதற்காக வாங்கிய கடனை இதைக் கொண்டுதான் தீர்ப்பேன் என்று சொல்கிறார் அந்தப் பெண். அந்தப் பெண் உத்தரவு வாங்கியதைத் தொலைக்காட்சியில் அத்தனைபேரும் பார்த்திருப்பீர்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்குத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்டந்தோறும் செல்கிறார்கள்.

இங்கேகூடப் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள்--இருப்பார் என்று நினைத்தேன், அவர் போய்விட்டார்— இந்த ஆட்சியிலே அரியலூர் மாவட்டம் என்னாச்சி, என்னாச்சி, என்னாச்சி என்றார். மாண்புமிகு உறுப்பினர்தான் சொன்னார். என்னாச்சி, என்னாச்சி என்று சொன்னார். அரியலூர் மாவட்டம் என்னாச்சி, சமத்துவபுரம் என்னாச்சி என்று சொன்னார். சமத்துவபுரம் இடிந்து போய்விட்டது. (சிரிப்பு) ஏனென்றால் நீங்கள் சமத்துவபுரம் கட்டினீர்கள், இடிந்துவிட்டது. நீங்கள் கட்டிய தரம் அப்படி. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியிலே பரவாயிலே சமத்துவபுரத்தைப் போய்ப் பார்த்தேன். போய்ப் பார்த்தபோது அங்கே மேலே ஒழுகுகிறது என்று சொன்னார்கள். தண்ணீர் ஊற்றச் சொன்னால் தொற, தொற என்று ஒழுகுகிறது. இது சமத்துவபுரம்.

அதற்குப் பின்னாலே அரியலூர் பற்றிச் சொன்னார். இந்த மாவட்டம் என்னாச்சி, இவர் என்னாச்சி, என்னாச்சி என்கிறார். இப்போது நடப்பது புரட்சித் தலைவி அம்மா ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் சொன்னார். என்னாச்சி, என்னாச்சி என்றார், இது அம்மா ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தப் பணியைப் பார்க்கிறபோது, அம்மாகூடச் சொன்னார். என்னாச்சி என்று சொன்னீர்களே, பெண்களுக்கு ஒரு நீதிமன்றம், கோவையிலே தனியாக பெண்களுக்கு ஒரு நீதிமன்றம். அதற்குப் பின்னாலே சென்னையிலே ஒரு நீதிமன்றம். இந்த இரண்டு நீதிமன்றங்கள். ஏனென்றால் பெண்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமையை நானே பெற்றேன் என்கிற காரணத்திற்காகத்தான், இப்படிப்பட்ட பெண்கள் எல்லாம் என்னைப் போல் கஷ்டப்படக் கூடாது என்பதற்காகத்தான் பெண்களுக்குக் காவல் நிலையம், பெண்களுக்கு நீதிமன்றம், இப்படிப் பெண்களுக்காக உருவாக்கிய பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உடனே சொன்னார், பெண்களுக்கு கோவையிலே ஒரு நீதிமன்றம் தொடங்கியாச்சு. என்னாச்சி, தொடங்கியாச்சி, சென்னையிலும் தொடங்கியாச்சி. நீங்கள் பார்க்கவில்லை, அதுதான் தப்பு என்றார் இப்படிப்பட்ட பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அரியலூர் மாவட்டம் பற்றி ஒன்றை மட்டும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருச்சியிலிருந்து பெரம்பலூரைப் பிரித்து--கரூரை எல்லாம் சேர்க்கவில்லை, பெரம்பலூரைப் பிரித்து—பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்று பெயரை மட்டும் சூட்டினார்கள். பெயரை சூட்டிய பின்னாலே வள்ளலின் வாரிசாக புரட்சித் தலைவி



பொறுப்பேற்ற பின்னாலேதான் 1995-லே அதைப் பெரம்பலூர் மாவட்டம் என்று செயலும்படுத்தி, எல்லா அலுவலகங்களையும் கொண்டு வந்து பெரம்பலூர் மாவட்டத்தை 6 தொகுதிகளாக்கினார்கள்; 6 தொகுதிகள். உப்பிலியாபுரம், பெரம்பலூர், வரகூர், ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், அரியலூர் என 6 தொகுதிகளாக்கினார்கள். 6 தொகுதிகள் அடங்கிய ஒரு பாராளுமன்ற இடத்தைக் கொண்ட ஒன்று அது. அப்படி ஆக்கி நடைபெற்று வந்தது.

பிற்பகல் 12-20

அதற்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்தவர்கள் வந்தார்கள். வந்தவுடன், அவர்செய்த ஒரே ஒரு காரியம், அவர் என்னாச்சி என்று சொன்னார் அல்லவா? அரியலூர் மாவட்டம்? பெரம்பலூர் மாவட்ட நிருவாக நலத்தைக் கருதி, அந்த மாவட்டத்தை, ஆறு தொகுதிகளைக் கொண்ட ஒரு மாவட்டமாக அறிவித்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, திரு. கருணாநிதி ஆட்சியிலே, பெரம்பலூர் மட்டும்—பெரம்பலூர், வரகூர் இரண்டும் ரிசர்வ் தொகுதிகள். அந்த ரிசர்வ் தொகுதிகளில்,--இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கும் பார்த்திருக்க மாட்டீர்கள், இப்படிப்பட்ட-- மாவட்டத்தை. பெரம்பலூர் மட்டும் ஒரு மாவட்டம், ஒரு ரிசர்வ் தொகுதி கொண்டது. அரியலூர், ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் --அது ஒரு மாவட்டம். எல்லாம் பி.சி., எஸ்.சி.-க்கு என்று ஒரு மாவட்டமும், பி.சி.-க்கென்று ஒரு மாவட்டமும். ஒரு சமுதாயத்தை அவர் பாராட்ட வேண்டும். ஒரு சமுதாயத்திற்கு, அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று பிரித்தார்கள், முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள். அதனால்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்து இப்போது 2001-ல் ஆட்சிக்கு வந்தவுடன், நிருவாக நலனைக் கருதி உப்பிலியாபுரத்தை அங்கே பிரித்து விட்டீர்கள். 5 தொகுதிகளைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தைத் திரும்பவும் அமைத்த பெருமை புரட்சித் தலைவி அன்னை அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) 6-3-2003-ல் வந்து கோடிக்கணக்கில் திட்டங்களைத் துவக்கி, நலப் பணிகளைக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு நலப் பணிக்கும் வருகிறபோது, 20,000 பேர், 30,000 பேர்கள் வருகிறார்கள். அந்த 30,000 பேர்களை நாம் மழையிலே நனைய வைக்கக் கூடாது. கொளுத்துகிற வெயிலிலே--1½ மணி நேரம் எங்களால் தாங்க முடியவில்லை. அப்படி அன்னை அவர்கள் கோடிக்கணக்கான திட்டங்களை அந்த வெயில் நேரத்தில்--கொடுக்கிறார். கோடை

வெயிலுக்கு ஊட்டிக்கும் செல்லவில்லை, கொடைக்கானலுக்கும் செல்லவில்லை; வெயிலிலே வந்து மக்களைப் பார்க்கிறார்கள். மக்களுக்காகப் பணியாற்றுகிறார். இது சிலருக்குப் பொறுக்க முடியவில்லை.

Punctuality பற்றி அம்மா அவர்களிடம்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்து விட்டார்கள். ஒரே hurry, bury எனக்கு. அப்போதுதான் ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் தெரிந்து கொண்டேன். வந்தவுடனே மேடைக்கு வந்தார்கள். பெரம்பலூருக்கு வந்தவுடனே, அமர்ந்த உடனே மணி என்ன ஆயிற்று டைம் என்ன என்று கேட்டார்கள். நான் எப்போதும் 5 நிமிடம் fast ஆக வைத்து விடுவேன். 5 நிமிடம் fast ஆக வைத்திருந்தேன். நான் உடனே 1-35 என்றேன். அம்மா அவர்கள் உடனே தப்பு என்று சொன்னார்கள். நான் அரண்டு போய், பேசவும் முடியவில்லை. 1-35 என்று சொன்னேன். அப்போதுதான் நினைத்தேன். Fast-ஆக வைப்பதும் தவறு, லேட்டாக வைத்தாலும் தவறு, கரெக்ட் டைம் punctuality தான் அன்னைக்குப் பிடிக்கும் டைம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த கரெக்ட் டைமை வெள்ளைக்காரன்கூட அப்படி ஃபாலோ பண்ண மாட்டான். அப்படிப்பட்ட பெருமை அன்னை அவர்களுக்கு உண்டு. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றுதான் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அவர்களிடம், வெட்டு ஒன்று, துண்டு மூன்றுதான். வேறு வழியே இல்லை. இப்படிப் பல திட்டங்களை உருவாக்கினார்கள்.

மின்சாரத்தைப் பற்றி முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறையச் சொல்லி விட்டார்கள்; திரு. புகழேந்தி அவர்களும் சொன்னார்கள். மின்வெட்டே இல்லாத ஆட்சிதான் புரட்சித் தலைவி ஆட்சி, எங்கள் ஆட்சியிலே மின்வெட்டு வருகிறது, இல்லையென்று சொல்லவில்லை, லைன் மாற்றுகிறபோது. இரண்டு நிமிடம் லைன் மாற்றும்போது மட்டும் மின்வெட்டு. ஆனால், மொத்தத்தில் மின்வெட்டே இல்லை. இதெல்லாம் சொல்கிறபோது, முன்னால் இருக்கிற முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் இல்லாது எழுந்து போய்விட்டார். அவர் நேற்று ஒரு டி.வி.க்குப் பேட்டி கொடுத்தார்கள், எங்கள் ஆட்சியிலே மின்வெட்டே இல்லையென்று. மின்சாரம் வந்தால்தானே மின்வெட்டே? மின்வெட்டே இல்லையென்று சொல்லிவிட்டு, மின்கட்டணத்தை நாங்கள் வசூலிக்கவில்லை. இவர்கள் போட்ட சட்டம் 1998-1999-ல். இவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்த சட்டம். போட்டு விட்டு, அவர் என்ன சொன்னார்? அவர்



மறந்து விட்டார் என்று நினைக்கிறேன். மறதி கொஞ்சம் அதிகம். பின்னால் வருகிறேன். அவர் சொல்கிறார், நாங்கள் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்தோம் என்று. எப்படிக் கொடுத்தீர்கள்? 6 மணிக்கு. பகலில் 4 மணி, விடியற்காலையில் போக வேண்டும். அப்படிப் போய் மோட்டார் போடும்போது எத்தனை விவசாயிகள் பாம்பு கடித்துச் செத்தார்கள் தெரியுமா? நைட்டிலே நீங்கள் நேரத்தை ஒதுக்கிக் கொண்டு, மின்சாரத்தைக் கொடுத்தீர்கள். இரண்டு நாளைக்கு மின்சாரமே இல்லாத வரலாறே உண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வார்கள். நான் கிராமப்புறத்தைச் சேர்ந்தவன், தை மாதம் வந்து பொங்கலிடலாம் என்று பார்த்தால், மின்சாரமே வரவில்லை. தை பிறந்தால் உங்கள் ஆட்சியிலே வழி பிறக்காது. மின்சாரம்தான் போகும். இப்படிப்பட்ட மறதியாக இருக்கிறவர் பேட்டி கொடுக்கிறார். அதைப் பார்த்தீர்கள் என்றால், எல்லா எதிர்க் கட்சிக்காரர்களும் இலவச மின்சாரத்தைக் கண்டித்து—இலவச மின்சாரத்தை, இலவச மின்சாரத்தைக் கண்டித்து—இலவச மின்சாரத்தைக் கொடுப்பதைக் கண்டித்து--செய்கிறார்களா என்ற சந்தேகமே வருகிறது. இலவச மின்சாரம் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து விட்டார்கள். அப்புறம் கண்டித்து ஒரு போராட்டம் என்றால், அப்படிக் கொடுப்பதை நீங்கள் கண்டித்து, போராட்டம் பண்ணுகிறீர்கள் மக்களுக்கு விரோதமாக என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

எப்படி என்றால், புரட்சித் தலைவி அவர்கள் அந்த மின்சாரத்தைக் கொடுக்கிறபோது, இதையெல்லாம் மறந்துவிட்டு, எங்களுடைய ஆட்சியிலே நாங்கள் எல்லாம் இவ்வளவு மின்சாரத்தைக் கொடுத்தோம் என்று சொன்ன முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொஞ்சம் மறதி ஜாஸ்தி. ஏன் என்றால், ரொம்ப நாளைக்கு முன்பு, அவர் மோர் என்று நினைத்து டர்பன்டைன் ஆயிலையே குடித்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அப்புறம் அவருக்கு எப்படி இருக்கும்? மறந்து விட்டுப் பேசுகிறார். டி.வி.யைப் பார்த்தீர்கள் என்றால், எதிர்க் கட்சிக்காரர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஐ.நா. சபையிலே--ஈரான், ஈராக்கிலேதான் போர் வந்துவிட்டது--ஏதோ, எல்லாம் சேர்ந்து ஒரு ஃபைலை மூவ் பண்ணுகிறார்கள்போல் இருக்கிறது; ஒரு அமைதியை ஏற்படுத்துவார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தால், எல்லோரும் கையெழுத்துப் போடுகிறார்கள். அதிலே வேலுகூட கையெழுத்துப் போடுகிறார். எல்லோரும் போடுகிறார்கள். File rotation அப்படியே வருகிறது. திருப்பி வந்து எல்லோரும் கையெழுத்துப் போடுகிறார்கள். ஏன் என்றால் நீங்கள்

கையெழுத்துப் போடவில்லை என்றால், வெளியே போய் ஏதாவது அறிவித்து விடுவார்களே எதிர்க் கட்சிக்காரர்கள் கூட்டணி என்று சொல்லி. இவர்கள் எல்லாம் ஒரு திட்டத்தை உருவாக்கி, புரட்சித் தலைவி கொண்டு வந்திருக்கிற அந்த நல்ல திட்டத்தை எதிர்க்கிற வகையிலேதான் கருணாநிதி அவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைக்கூட நம்முடைய சகோதரி எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சூரியகலா அவர்கள் சொல்கிறபோது, 'காட்டுமிராண்டி ஆட்சி எனச் சொன்னார்' என்று சொன்னார்கள். அவர் இப்போது கொஞ்சம் நேரம் அப்படித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். காட்டுமிராண்டி ஆட்சி, இது மக்களுக்கு விரோதமான ஆட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அவர்கள் 100 கோடி ரூபாயை விவசாயிகளுக்கு, அதுவும் 3 ஹார்ஸ் பவர் பம்பு செட் உள்ளவர்களுக்கு, அதேபோல் 5 ஹார்ஸ் பவர் உள்ளவர்களுக்கு; 3 ஹார்ஸ் பவர் உள்ளவர்களுக்கு 1000 ரூபாயும், அதேபோல் 5 ஹார்ஸ் பவர் உள்ளவர்களுக்கு 1250 ரூபாயும் இனாமாகக் கொடுக்கிறார். அதை நீங்களும் எடுத்துக்கொள்ளுங்கள். நீங்களே பாராட்ட வேண்டும். இப்படி இனாமாகக் கொடுத்த பெருமை, இந்திய வரலாற்றிலே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும் இல்லை இந்தத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிசைக்கு மின் விளக்கு. இப்போது குடிசைக்கு மின் விளக்கு பற்றி சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், ரத்து, ரத்து என்று. குடிசைக்கு மின் விளக்கு தி.மு.க.-வா கொண்டு வந்தீர்கள்? அண்ணா தி.மு.க. ஆட்சியிலேதான் குடிசைக்கு மின் விளக்கே கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குடிசைக்குக் கூட 100 ரூபாயை புரட்சித் தலைவியே கொடுத்து அதைக் கட்டிக்கொள்கிறார். இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் ஆற்றிக் கொண்டு வருகின்ற நேரத்தில், மின் வசதியை இன்னும் பெருக்க வேண்டும் ஊரகப் பகுதிகளுக்கு என்று, 232.30 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்ற பெருமை அன்னைக்கு உண்டு.

இந்தியாவிலேயே ஒரு சிறந்த காவல் துறைக்கு, தமிழ்நாட்டைப்போல் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாமல், மகளிருக்காக ஒதுக்கிய பெருமை, 148 மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கினார்கள் முதன்முதலாக. அதற்குப் பின்னாலே, அந்தக் காவலர்களின் குழந்தைகளுக்கும். அவர்களுக்கும் நாம் செய்ய



குழந்தைகள் படிப்பு வேண்டாமா என்று சொல்லி, காவலர்களின் ரூபாயை வசதிக்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே 1.38 கோடி உண்டு. மானியமாக வழங்கித் தந்திருக்கிற பெருமை அன்னைக்கு

அதேபோல், 6 காவல் துறை அலுவலகங்களில், அந்த அலுவலகத்திலுள்ள அந்தக் காவலர்களின் குழந்தைகளுக்கு எல்லாம் குழந்தைகள் காப்பகம் வேண்டும், அதுமாதிரி பிள்ளையைக் காக்கிற ஒரு காப்பகம். அதெல்லாம், வெள்ளைக்காரன் அப்படியெல்லாம் பண்ணுவான். அப்படிக் குழந்தைகள் காப்பகத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், தீயணைப்புப் படைக்கு, தீயணைப்புத் துறை வளர்ச்சி அடைய வேண்டும் என்று ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியின் தலைமையிலே ஒரு ஆணையம் அமைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீயணைப்புப் படைக்கும் ஒரு பெருமையைச் சேர்த்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.

அதேபோல் எல்லோரும் சொன்னார்கள், சென்னையிலே கைதிகளாக இருப்பவர்களுக்குக் கூட பாதுகாப்பு வேண்டும்; அவர்களுக்கும் வசதி வேண்டும் என்கிற ஒரு பெருமையைச் செய்திருப்பவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

பிற்பகல் 12-30

சென்னையில் உள்ள மத்திய சிறைச்சாலையை புழலில் அமைக்க, வளாகம் அமைப்பதற்கு, மாற்றி அமைப்பதற்கு, பத்து கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1391.4 கோடியாக உயர்த்தி உள்ளார்கள் காவல் படையை நவீனமாக்க. காவல் துறை நவீனமாக இருந்தால்தான் ஓடிச் சென்று திருடனைப் பிடிக்க முடியும். அப்படி நவீனமாக்குவதற்கு ரூ.130.98 கோடியை ஒதுக்கிய பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு.

ஆதிதிராவிடர்களுக்கு எல்லாம் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சிலர் சொன்னார்கள். ஆதிதிராவிடர் நலம் காக்கிற பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னை அவர்களுக்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ரூ. 439.05 கோடியை ஒதுக்கித் தந்து அந்த மக்களுடைய நலம் காக்கிற நல்ல தலைவியாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. அ. அருணாசலம்] [2003 மார்ச் 27

சைக்கிளைப் பார்த்தீர்களென்றால், இதற்கு ஒரு பெருமையே உண்டு. தி.மு.க.-காரர்களும் சைக்கிளைக் கொடுக்கிறார்கள் விழாவிலே—சட்டமன்ற உறுப்பினர்கள்—அண்ணா தி.மு.க.-காரர்களும் கொடுக்கிறார்கள். சைக்கிள் இல்லாத ஒரு நிகழ்ச்சியே இல்லை, விழாவே இல்லை என்று மாறி விட்டது. எல்லா விழாக்களிலும் சில சைக்கிள்களாவது இருக்கும். அந்த சைக்கிள் வழங்கும் பணியை இன்னும் தற்பொழுதும் தொடர்ந்து செய்வதற்கு, பிளஸ்-1, பிளஸ்-2 படிக்கிற மாணவிகளுக்காக இந்த ஆண்டும் ரூ. 7.49 கோடியை ஒதுக்கியிருக்கிற பெருமை அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை அவர்கள், சின்னத்தைத் தக்க வைப்பதற்கும், அந்தச் சின்னத்தை எடுக்கவும் செய்வார். சைக்கிள் சின்னம் கொடுத்ததால் ஒரு கட்சியே இல்லை. சைக்கிளும் இல்லை. அந்தக் கட்சிக்கு சைக்கிள் சின்னம். அந்தச் சின்னத்தை எங்களுடைய தலைவி எடுத்துவிட்டார். ஏதாவது பேசினால், ஒரு சின்னத்தையே எடுப்பார். சின்னத்துக்குப் பெருமையும் கொடுப்பார், சின்னத்தையும் எடுப்பார். (குறுக்கீடு) அங்கீகாரம். நான் பேசி விடுகிறேன். ஒரு நிமிடம். இல்லை. (குறுக்கீடு) சின்னம் இருந்தால் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சைக்கிள் என்பது ஒரு பெருமை பெற்று விட்டது (குறுக்கீடு) சரி, சரி. (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையின் கை பட்டதால் சைக்கிள் பெருமை பெற்றுவிட்டது. ஒத்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையின் கை பட்டதால் சைக்கிளுக்கு ஒரு பெருமை வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த பட்ஜெட்டைப் படிக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்கள் சொன்னார்கள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வகையிலே மகிழ்ச்சி. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இன்னும் சைக்கிளை நினைவில் வைத்துக் கொண்டு இருப்பதிலே ரொம்ப மகிழ்ச்சி! (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஏழைகளுடைய வாகனமாக, தொழிலாளர்களுடைய வாகனமாக இருப்பதால் மறக்க முடியாது. சைக்கிள் சின்னத்தை மறக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. சைக்கிள் சின்னம் வேண்டாம், அதை முடக்கி வையுங்கள் என்று நாங்கள்தான் சொன்னோம். வேறு யாரும் அதை முடக்கி வைக்க முடியாது. தமிழ்நாட்டில் அது முடக்கி வைக்கப்பட்டதற்குக் காரணம் நாங்கள்தான்.



2003 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் ஏழைகளே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏழைகளுக்குக் கொடுத்தது எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள்; அதனால் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, ஆதிதிராவிடர் துறையைப் பொறுத்தவரையில், முதலிலே தாட்கோவிலே லோன் கொடுப்பார்கள். லோன் கொடுக்கிறார்கள் என்று பாங்குக்குப் போனால்—நாம் மானியம் கொடுக்கிறோம்--பாங்கிலே margin money கொடுக்க மாட்டார்கள். subsidy-ஐ நாம் கொடுக்கிறோம். அதற்கு வேண்டிய மூலதனப் பணத்தை அவர்கள் கொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் வரக்கூடாது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதிதிராவிட மக்களுக்குக் கடன் தருவதற்கு, வணிக வங்கியிடமிருந்து பெறுவதில் தாட்கோவுக்கு உள்ள சூழ்நிலையை மாற்றி அதற்குப் பெருமை சேர்த்தார்கள். இந்த ஆண்டுகூட 150 புதிய மாணவர் இல்லங்கள்--விடுதி--மாணவர்களுடைய இல்லங்களைக் கட்டுவதற்கும், அதேபோல் சீர்மரபினர் பள்ளியிலே குடிநீர் வசதியை ஏற்படுத்துவதற்கும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

கைத்தறியைப் பற்றிச் சொல்ல வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அரூர் கிருஷ்ணமூர்த்தி என்று நினைக்கிறேன்; பேசிக் கொண்டிருந்த போது, கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் ரொம்பவும் வேதனைப்படுகிறார்கள். கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்றார்கள். கல்லூரி மாணவிகளும் கைத்தறி ஆடையை அணிய வைத்த பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு. எல்லாக் கல்லூரி மாணவிகளும் கைத்தறி ஆடைகளை அணிகிறார்கள். அன்னை அவர்கள் சொன்னால்தான் எல்லோரும் கேட்பார்கள். நாம் சொன்னால் யார் கேட்பார்கள்? ஆகவே, அத்தனை பேரும் கைத்தறி ஆடையை அணிந்து கொண்டு சிறப்பாக வருகின்ற ஒரு பாங்கைப் பார்த்திருக்கிறோம். அதுமட்டுமா சொன்னார்? ஆட்சியிலே உள்ளவர்களுக்கும் ஒரு திட்டம். அண்ணா தி.மு.க. காரர்களுக்கு ஒரு அறிக்கை விட்டார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நீங்கள் எல்லாம் விட்டிருக்க மாட்டீர்கள். இனிமேல் வருகின்ற தொண்டர்கள், அவருக்கு மாலை, சால்வை போடாமல், கைத்தறித் துண்டை மட்டும்தான் போட வேண்டுமென்று கட்சிக்கே ஆணையிட்ட தலைவிதான் நம்முடைய புரட்சித் தலைவி அன்னை அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் நலிந்து விடாமல் இருக்க, இந்த ஆண்டு 85 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கிய பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு.

*பிற்பகல் 12-35*

ஒரு மாநிலம் முதல் மாநிலமாக மாற வேண்டுமென்றால், எரிசக்தித் துறையிலே அது சிறப்பு அடைய வேண்டும். அந்த வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்று சொல்லி, அதன் தொடர்ச்சியாக, வட சென்னையிலே 4 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில், ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தையும், அதேபோல தூத்துக்குடியிலே 4 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில், ஆயிரம் மெகாவாட் மின் நிலையத்தையும், அமைத்துக் கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. மேலும் கூடங்குளத்திலே 1. ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டுத் திட்டத்திலே 2 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட மின் நிலைய உற்பத்தியும் விரைவிலே செயல்பட இருக்கிறது என்பதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிற பெருமை தமிழகத்தை முதல் மாநிலமாக எப்படி ஆக்குவோம், எப்படி ஆக்குவோம் என்றால், இப்படித்தான் புரட்சித் தலைவி ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சாலைகள் நன்றாக இருந்தால்தான், அன்றாட மக்களின் சங்கடங்கள் தீரும். ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில், முன்பு பாலத்தைக் கட்டினார்களே தவிர, கிராமங்களிலே சாலைகள் போடவில்லை. அந்தப் பாலத்தாலே மக்களுக்குப் பயனும் இல்லை. இதற்காக புரட்சித் தலைவி அன்னை அவர்கள் சாலை மேம்பாட்டுக்காக, 1995-ல் அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது ஒரு திட்டத்தை வகுத்து சாலைத் துறைத் திட்டத்தின் வாயிலாக 2118 கோடி ரூபாய் செலவிற்கு அதை உலக வங்கிக்கு அனுப்பினார்கள். திரும்பவும் இப்போது வந்துதான் 2003-லே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பெருமை அன்னைக்கு உண்டு. அதேபோல 5 ஆயிரம் கிலோ மீட்டர் சாலையை மேம்படுத்துவது. இப்படிப் பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மகளிருக்காக—'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று சொன்னதுபோல—மகளிர் சுய உதவிக் குழுக்கள்; இந்த ஒன்றை மட்டும் சொல்லி விடைபெற விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திற்கும் போனால் கிராமத்தில் இருக்கிற மகளிரைப் பார்க்கிறபோது, சீவிச் சிங்காரித்து, உடை அணிந்து வருகிற அழகைப் பார்க்கிறபோது,



இந்த மகளிர் சுய உதவிக் குழுவைக்கூட முதன்முதலாகக் கொண்டு வந்த பெருமை புரட்சித் தலைவி அன்னை அவர்களையே சாரும்.

அதேபோல, சிசுக் கொலையைத் தடுக்கிற வகையில்—கருத்தம்மா படத்தை எல்லாம் பார்த்திருப்பீர்கள்; கள்ளிப் பாலை விட்டு, குழந்தைகளைக் கொன்றார்கள் என்று. ஆனால், அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே--14 கோடி ரூபாயை ஒதுக்கிய பெருமை புரட்சித் தலைவி அன்னை அவர்களுக்கு உண்டு என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தைக் கடந்த தி.மு.க. ஆட்சியிலே கிடப்பிலே போட்டார்கள். வள்ளலின் வாரிசாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திரும்பவும் வந்து, 25 பைசாவை 35 பைசாவாக உயர்த்தினார்கள். அப்படி உயர்த்திய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சி சத்துணவுத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டது என்று மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். கிடப்பிலே போடவில்லை. அதோடு, சத்துணவிலே முட்டையும் போட்டிருக்கிறோம் என்பதை அவருக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் எல்லாமே அறிவிப்பாகத்தான் இருந்தது. சத்துணவில் முட்டை போடுகிறோம் என்று அறிவித்து, அது அறிவிப்பாகக் காகிதத்தில்தான் இருந்தது. பெரும்பாலான முட்டைகள் அந்தச் சத்துணவு மையங்களுக்குப் போய்ச் சேரவே இல்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி விடட்டும்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், கிடப்பிலே போடப்படவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். கடந்த

5 ஆண்டு காலத்தில் சத்துணவு மையத்திலேயும் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்ற போர்டு வைத்திருந்ததைக்கூட, தி.மு.க. காலத்தில் தூக்கி வீசி எறிந்து விட்டு, அந்தச் சத்துணவுக் கூடங்கள் அனைத்தும் பழுது அடைந்து இருந்தன என்பது மட்டும் உண்மை என்பதை மாமன்றத்திலே இருந்த உறுப்பினர்கள் யாவரும் பார்த்திருப்பார்கள் என்றுதான் நான் நம்புகின்றேன்.

பிற்பகல் 12-40

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தையே கிடப்பில் போட்டார்கள் என்றார்கள். இப்போது போர்டைப் போட்டார்கள் என்கிறார்கள். இரண்டையும் போடவில்லை.

**மாண்புமிகு திரு அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் போடவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் என்ற, அந்தப் பெயரை மட்டும் மாற்றி இருந்தார்கள். முதலமைச்சர் திட்டம் என்று இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்து, எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். (குறுக்கீடு) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள்.

அரசு அதிகாரிகள் எல்லாம், ஏதோ புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான் தீங்கு இழைத்தது போல, போராட்டம் என்று சொல்லிக்கொண்டு, சில புரளிகளைக் கிளப்பிக்கொண்டு, அதற்கு எதிர்க் கட்சிக்காரர்களும் உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறார்கள், ஏதோ பாதிக்கப்பட்டு விட்டார்கள் என்று. சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே, ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பார்ப்பீர்களேயானால், 10 ஆசிரியர்கள் அவரைச் சுற்றிக் கொண்டேயிருப்பார்கள். என்னடாவென்றால், இந்த ஊரிலேயிருந்து அந்த ஊருக்கு மாற்றல் வேண்டும், அந்த ஊரிலேயிருந்து இந்த ஊருக்கு மாற்றல் வேண்டும் என்பார்கள். இப்போது ஒரு வாத்தியாரைப் பார்த்தால், எங்களைப் பார்க்க மாட்டேன் என்கிறார். அவர் பாட்டுக்குப் போய்க்கொண்டேயிருக்கிறார். நாங்கள் வணக்கம் வைத்தால்கூட அவர் வணக்கம் வைக்க மாட்டேன் என்கிறார். ஏனென்றால், இப்போது எல்லாமே Counselling நேர்மையாக நடக்கிறது. ஆகவே, இதற்கு முதலில் அவர்களைப் பாராட்டக் கூடாதா? Counselling என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து 6000 பேரைப் போடுகிறேன்



என்று கல்வி அமைச்சர் அறிவிக்கிறார். அந்த அறிவிப்பு வந்தவுடனேயே எல்லா ஆசிரியர்களுக்கும் வேலையும் கொடுத்தாகிப் போய் விடுகிறது. ஒரு எம்எல்ஏவுக்கும் தெரியாது. ஒருவருக்கும் தெரியாது. எம்எல்ஏவுக்கே தெரியாமல் வேலை வந்து விடுகிறது.

இந்த அரசு ஊழியர்களுக்கு என்ன நாங்கள் பாதுகாப்புக் கொடுக்கவில்லை? 1-4-2003 முதல் 3 சதவிகிதம் அகவிலைப் படியைக் கூட்டி, 1-10-2002 முதல் வருங்கால வைப்பு நிதியில் வைத்து வந்த ஒரு சதவிகிதத்தையும் கூட்டித் தான் புரட்சித் தலைவி இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, மற்றத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எல்லாமே இந்த ஆட்சியிலே ஒளிவு மறைவின்றி நடைபெறுகின்றன என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நாங்கள்தான் வருத்தப்பட வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடன் சுமையிலேயிருந்த தமிழ்நாட்டை மீட்டு, தமிழ்நாட்டுக்கு நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். வரவு-செலவுத் திட்டம், இதிலே என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது என்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள்கூடச் சொன்னார்கள். பக்கம் மட்டும் ஏறிக்கொண்டே போகிறது என்றார்கள். பணிகள், ஏற, ஏற, பக்கமும் ஏறத்தான் செய்யும். பணிகள் இருந்தால் பக்கம் இருக்கும். வெறும் பேப்பரிலே எழுதிக்கொண்டேயிருக்க முடியாது. விஷயம் இருக்க வேண்டுமல்லவா? ஆகவே, பக்கம் ஏறுகின்றது என்றால், அங்கே நலப் பணிகளும் ஏற்றப்பட்டிருக்கின்றன என்று பொருள்.

என்னுடைய தொகுதியிலேயுள்ள இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் சொல்லி விடுகின்றேன். ஏனென்றால் கேட்கிறார்கள், துணை சபாநாயகர் ஒன்றுமே பேசுவதில்லையே என்று. என்னுடைய வரகூர் தொகுதி என்பது ஒரு வறட்சியான தொகுதியாகும். பெயரே வரகூர். வரகைத் தவிர வேறு ஒன்றும் விளையாது. அதுதான் வரகூர் தொகுதி. அந்த வரகூர் தொகுதியில் புரட்சித் தலைவி அன்னை ஆட்சியிலேதான் ஒரு வட்டம், குன்னம் வட்டம் என்பது பிரிக்கப்பட்டது. அந்த குன்னம் வட்டம் பிரிக்கப்பட்டு, இன்று வரைக்கும் அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை நம்முடைய, சம்பந்தப்பட்ட நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமும் மனு கொடுத்திருக்கிறேன். ஏனென்றால், கொடுத்துவிட்டு இங்கே பேசினால், அன்னையிடம் பேசினால், கொஞ்சம்

கிடைக்கும் என்பதால் (குறுக்கீடு) நன்றி. அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன், தொகுதியின் சார்பிலே.

அதைப்போல, மின்சாரத்தினுடைய அளவு குறைவாக இருப்பதால், வேப்பூர் ஒன்றியத்திலே, துங்கபுரம், தேனூர் என்கிற இடத்திலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உங்களுக்குப் பெரிய வாய்ப்பையே கொடுத்து விட்டார்கள்.

அந்த மின் தடை வருகிறபோது, பல ஊர்களில் இரவு நேரமானால், லைட் வெளிச்சம் கொஞ்சம் கம்மியாக இருக்கிறது. ஏனென்றால், பவர் கம்மியாக வருகிறது என்கிறார்கள். அதற்கு நான் மின் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேப்பூர் ஒன்றியத்திலேயுள்ள துங்கபுரம், தேனூர் பகுதியைச் சேர்ந்த சப்-ஸ்டேஷனையும்—துணை மின் நிலையம்—அதேபோல, ஆலத்தூர் பகுதியைச் சேர்ந்த அந்த ஒன்றியத்திலுள்ள கூத்தூர்மேடு என்கிற இடத்திற்கு சப்-ஸ்டேஷனையும் அமைத்துக் கொடுக்குமாறு அன்னை அவர்களிடம் இந்த நேரத்திலே பணிவோடு எனது தொகுதியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், அன்னையின் ஆட்சி நல்லாட்சியாக, நலம் பயக்கிற ஆட்சியாக, ஏழை, ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் அத்தனைபேருக்கும் சிறப்பான ஆட்சியாக நடத்திக் கொண்டிருக்கிற அன்னை அவர்களுக்கு, பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அன்னை அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பங்கேற்றுப் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காகத் தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் உரித்தாக்கிக் கொள்கின்றேன்.



நிதிநிலை அறிக்கையை நான் படித்து முடித்து பார்வையைச் சற்று
மேல்புறமாக ஓட்டி, பக்கத்தின் எண்ணைப் பார்த்தேன், சற்றுப் பயந்து
போனேன். சதம் அடிப்பதற்கு நான்கு பக்கங்கள்தான் குறைவு. கடந்த
2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 63 பக்கங்கள். அந்த 63
பக்கங்களைக் கொண்ட நிதிநிலை அறிக்கைக்குப் பதிலுரை அளிப்பதற்கு
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சற்றேறத்தாழ 6 மணி நேர காலம்
எடுத்துக் கொண்டார்கள் என்று எண்ணுகின்றேன். (குறுக்கீடு) 5 மணி
நேரம் (குறுக்கீடு) ஆக, 63 பக்கங்களுக்கு 4 மணி நேர காலம் என்று
சொன்னால், 96 பக்கங்கள் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கைக்குப்
பதில் சொல்வதற்கு அவர்கள் எத்தனை நேரம் எடுக்க
வேண்டியதிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தேன். சற்றுப் பயந்து
போனேன். அவர்மீது உண்மையிலேயே எனக்குக் கழிவிரக்கம்
பிறந்தது; கனிவும் பிறந்தது; கவலையும் பிறந்தது.

என்னுடைய கவலைக்கு இன்னொரு முக்கியக் காரணம்,
நிதிநிலை அறிக்கையிலே நிறையப் பக்கங்களைத் தந்திருக்கின்றாரே,
மக்களுக்கு நலம் பயக்கும் நல்ல திட்டங்களையும், நலத்
திட்டங்களையும் அவர்கள் நிறையச் சொல்லியிருப்பார்கள் என்று
எதிர்பார்த்தேன். திட்டங்கள் நிறையவே சொல்லப்பட்டிருக்கின்றன.
ஆனால், அவை நிறைவாக இல்லை என்பதுதான் என்னுடைய
ஆதங்கம். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டக்கூடிய
அம்சங்களோ, பயனுள்ள அம்சங்களோ அணுவளவும் இல்லை என்று
அடம் பிடிக்கவும் நான் தயாராக இல்லை. நிச்சயமாக,
பாராட்டக்கூடிய அம்சங்கள், பயனுள்ள அம்சங்கள் இருக்கின்றன.
அவற்றை நான் பாராட்டுகின்றேன்; வாழ்த்தி வரவேற்கின்றேன். அதே
நேரத்திலே, பயனுள்ள அம்சங்களையும், பாதகமான அம்சங்களையும்
ஒரு தராசிலே இட்டு நிறுத்துப் பார்ப்போமேயானால், பாதகமான
அம்சங்களின் பக்கம்தான் பாரம் சற்று அதிகமாக இருக்கின்றது.

உதாரணமாக, டெல்டா விவசாயிகளுக்கு இலவச உணவிற்குப்
பதிலாக வழங்கப்பட்டு வருகின்ற இலவச அரிசியானது தொடர்ந்து
வழங்கப்படும் என்ற ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றீர்கள். மெத்த
மகிழ்ச்சி. ஆனாலும்கூட, அந்த மகிழ்ச்சியைப் பரிபூரணமாக
எங்களால் கொண்டாட முடியவில்லை. காரணம், நீங்கள் அதிலே
பாரபட்சம் காட்டியிருக்கின்றீர்கள். ஏன் என்றால், ஏற்கெனவே
இலவச உணவிற்காகப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு
மட்டும்தான் இலவச அரிசி என்று சொல்லியிருப்பதுதான் ஒரு மிகப்

பெரும் குறையாக இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், பேராசிரியர் அவர்கள்கூட இதனைத் தொட்டுப் பேசினார்கள். அது அவருடைய கருத்து மட்டும் அல்ல. பல விவசாயப் பெருமக்களும் சரி, விவசாய சங்கத்தின் பிரதிநிதிகளும் சரி, எங்களைச் சந்தித்த நேரத்திலே இந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஏன் என்றால், சமைத்த உணவு என்று சொல்லும்போது, பலர் சங்கோஜப்பட்டு, சங்கடப்பட்டு, தங்கள் பெயர்களை அதிலே பதிவு செய்துகொள்ளவில்லை. அதுமட்டும் அல்ல, என்னதான் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, பசி அவர்கள் வயிற்றைக் கிள்ளியபோதும்கூட, அவர்கள் தள்ளி நின்றுகொண்டார்களேயன்றி, தட்டேந்துவதற்கு அவர்கள் தயக்கம் காட்டினார்கள். ஆகவே, ஆரம்பத்திலேயே அரிசி வழங்குகிறோம் என்று அரசு அறிவித்திருக்குமேயானால், பாதிக்கப்பட்ட அனைவருமே இந்தத் திட்டத்தின்கீழ் தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருப்பார்கள் என்ற ஒரு (குறுக்கீடு) கருத்தைச் சொன்னார்கள். ஆகவே இப்படி, பாதிப்பு என்பது பரவலாக இருக்கின்றது. ஆகவே, நீங்கள் இதனைக் கருத்திலே கொண்டு, பதிவு செய்யாவிட்டாலும்கூட, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், டெல்டா மாவட்டங்களிலே, பசி, பட்டினி, பஞ்சம் என்பது இன்றைக்குத் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றது.

எங்கள் பேரியக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். டெல்டா பகுதி விவசாயிகள் எலிக்கறியைத் தின்னுகின்ற அவலம் இருக்கின்றது என்று சொன்னார்கள். அது அரசின் தரப்பிலே வன்மையாக ஆட்சேபிக்கப்பட்டது. இது அவரது சொந்தக் கருத்து இல்லை. அரசின் தரப்பிலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்து, அதுவும் உச்ச நீதிமன்றத்திலே—The highest Court of the land என்று சொல்லப்படுகின்ற உச்ச நீதிமன்றத்திலே—அரசின் தரப்பிலே வாதிடப்பட்ட கருத்து. அரசின் அதிகாரபூர்வ Press release-ல்கூட இந்தச் செய்திகள் வெளியாயின. அனைத்துப் பத்திரிகைகளிலுமே இது வெளியானது. இதை நான் வாதத்திற்காகவோ, எதிர் வாதம் செய்ய வேண்டும் என்றோ, குற்றச்சாட்டாகவோ சொல்லவில்லை. ஏன் என்றால், எங்களுக்கு நன்றாகத் தெரியும். வறட்சி என்பது நிச்சயமாக அரசாங்கத்தின் குற்றமல்ல.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்றைக்கு இந்த அவையிலே அழகாகச் சொன்னார்கள், வறட்சி என்பது இயற்கையின் குற்றம் என்று. நாங்களும் அதை முழுமையாக ஒப்புக்கொள்கின்றோம். ஆனால், இதில் அரசாங்கத்தின் பங்கு என்பது, அந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதில் மட்டுமே இருக்கிறது. ஆகவே, இந்தப் பாதுகாப்புப் பணிகள் என்பது முழுமையாக இருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்புப் பணிகள் என்பது பாரபட்சமற்று இருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்புப் பணிகள் என்பது, பாகுபாடில்லாமல் அனைவருக்குமே சென்று சேர வேண்டும். அதாவது, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமே சம நீதி கிட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். வேறு ஒன்றும் அல்ல. அதேபோன்று 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பது உழவர் பெருமக்களைப் பொறுத்தமட்டிலும் இன்றைக்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஏன் என்றால், இன்றைக்கு இலவச மின்சாரம் ரத்துச் செய்யப்பட்டிருப்பது, உழவர் பெருமக்களுக்கு ஒரு பேரிடியாக, அடியாக இருக்கின்றது. கடந்த நிதிநிலை (குறுக்கீடுகள்) இல்லை, நான் வருகின்றேன். அறிக்கையிலே... (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசால், மானியமாகப் பணம் வழங்கப்படுகிறது. ஆகவே, இலவச மின்சாரம் ரத்துச் செய்யப்படவில்லை என்பதைத்தான் பொருளாகக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஒரு சில உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டே குறுக்கிட்டனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதி இல்லாமல் இப்படிப் பேசுவது முறையற்றது.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலே, மாநிலத்திலே உள்ள அனைத்து இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தப்படும் என்று தாங்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருந்தீர்கள். அந்த நேரத்திலே நான்கூடப் பேசினேன்; நிதிநிலை அறிக்கையிலே நான்கூடக் கடந்த முறை பேசினேன்; அப்போது சொன்னேன். 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும்' என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்துக்

கிடையாது. ஆனால் இந்த மீட்டர் பொருத்துவது என்பது, எதிர்காலத்திலே இலவச மின்சாரத்தை ரத்துச் செய்வதற்கான முதற்படியாக அமைந்து விடக்கூடாது என்கின்ற எங்களுடைய அச்சத்தை இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னேன். அந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இந்தப் பேரவையிலே பதிவு செய்திருக்கின்றார்கள். இலவச மின்சாரமானது தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அப்போது அவர்கள் பெரு விவசாயிகளுக்கு இலவச மின்சாரமானது ரத்துச் செய்யப்படும்; குறு, சிறு விவசாயிகளுக்கு மட்டும் தொடரும் என்கின்ற கருத்தைச் சொல்லவில்லை. அதேபோன்று ஆண்டிப்பட்டி தேர்தலிலே, அவர்கள் வேட்பாளராக நின்றிருந்த நேரத்திலே, மக்கள் மன்றத்திலே அவர்கள் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அறுதியிட்டு, உறுதியாகச் சொல்லியிருக்கின்றார்கள், இந்த இலவச மின்சாரமானது தொடரும் என்று. அப்போது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றிலே போட்டாலும் அளந்து போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார். நான் எப்போதும் வார்த்தைகளை அளந்து பேசுபவள். ஆண்டிப்பட்டி தேர்தலின்போது, மிகவும் அளந்து சொற்களைப் பயன்படுத்தினேன். எல்லோருக்கும் இலவச மின்சாரம் தொடரும் என்று நான் அப்போது சொல்லவில்லை. ஏழை எளிய விவசாயிகளுக்கு நிச்சயமாக இலவச மின்சாரம் தொடரும் என்றுதான் சொன்னேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இந்தச் சிறு, குறு விவசாயிகளைப் பாகுபடுத்தியிருப்பதிலேகூட ஒரு சரியான முறை கையாளப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. குதிரைத் திறன் என்பது சரியான அளவுகோலாக இருக்காது என்பதை இங்கே நான் சொல்லிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், நிலப்பாப்பு சிலருக்கு அதிகமாக இருக்கும். ஆனால்,குறைந்த குதிரை சக்தி கொண்ட மோட்டார்களை அவர்கள் பொருத்தியிருக்கலாம். அதேபோன்று....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத்தெளிவாக அரசு இதுபற்றித் தெளிவுபடுத்தியிருக்கிறது. Small farmers and Marginal farmers; small farmers என்பவர்கள், 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கின்றவர்கள். Marginal farmers, 2½ ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கின்றவர்கள். நிலத்தின் அடிப்படையில்தான் அது கூறப்பட்டிருக்கிறது.



**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அப்படி நிலத்தின் அடிப்படையிலே பாகுபடுத்துவதிலேகூட பிரச்சினை இருக்கிறது. ஏன் என்று கேட்டால், இப்போது திருநெல்வேலி மாவட்டத்தையெல்லாம் எடுத்துக் கொள்வோமேயானால், அங்கே ஒருவருக்கு 50 ஏக்கர் நிலம் இருக்கும். ஆனால், மேய்ச்சல் நிலம்தான் அதிகமாக இருக்கும். விளைச்சல் நிலம் என்பது 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலமாக இருக்கும். ஆகவே, அவர்களைப் பெரு விவசாயிகள் என்று எடுத்துக்கொள்வதிலேகூட சிக்கல் இருக்கிறது. எனவே...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை, இந்த அவையில்—இங்கே நீண்ட நெடிய விளக்கத்தைத் தினந்தோறும்—நேற்று முன்தினம்கூட 20 தடவை பதில் அளித்திருக்கின்றார்கள். அதற்கு முன்தினம் 27 தடவை இந்த மின்சார மானியத்திற்கு மட்டும் பதில் அளித்திருக்கின்றார்கள். அதிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருக்கின்றவர்கள் 2½ ஏக்கர் நன்செய் நிலம் வைத்திருக்கின்றவர்கள் என்று தெளிவாக வரையறுக்கப்பட்டு. மீண்டும், மீண்டும் அவையிலே தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். மீண்டும் விளக்கம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொண்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** பொதுவாக, குதிரைத் திறன் என்பது, நிலத்தடி நீர்மட்டத்தைப் பொறுத்துத்தான் பொருத்தப்படுகிறது என்று உழவர் பெருமக்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, வறட்சிப் பகுதியிலே குதிரைத் திறன் அதிகமாக உள்ள மோட்டார்களைப் பொருத்த வேண்டியிருக்கிறது. அதேபோன்று, பாசனப் பகுதியிலே குறைந்த மின் அழுத்தம் உள்ள மோட்டார்களைப் பொருத்தினாலே போதுமானது. ஆகவே, நீங்கள் வறட்சிப் பகுதியிலே இந்த உதவித் தொகையைக் கூட்டி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, குறைந்தபட்சம் வறட்சிப் பகுதியிலே பார்ப்பீர்களேயானால், 10 எச்.பி. என்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஆகவே, அதனை அளவீடாகக் கொண்டு, அடிப்படையாகக் கொண்டு, நீங்கள் இந்த உதவித் தொகையைக் கணக்கிட்டு வழங்க வேண்டுமென்று கேட்டுக்

[திருமதி எஸ். மகேஸ்வரி] [2003 மார்ச் 27

கொள்கிறேன். நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே அளித்துள்ள, இந்தப் பேரவைக்குச் சமர்ப்பித்துள்ள வெள்ளை அறிக்கையிலே, இலவச மின்சாரத்திற்காக மட்டும் இந்த அரசு ஆண்டொன்றுக்கு 3,208 கோடி ரூபாய் மானியமாகத் தர வேண்டியுள்ளது என்ற கருத்தினைச் சொன்னீர்கள். தற்போது விவசாயிகளுக்கான ஒரு குதிரை சக்திக்கு 250 ரூபாய் என்ற அடிப்படையிலே மின் க்ட்டணம் வசூலிக்கப்படும்போது இந்த அரசுக்கு—மன்னிக்கவும், மின்சார வாரியத்திற்கு—250 கோடி ரூபாய் வருமானம் கிட்டுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆக, எப்படிப் பார்த்தாலும்கூட, கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய் deficit விழுகிறது.

*பிற்பகல் 12-55*

அதுமட்டுமல்ல, 250 கோடி ரூபாய் வசூலிக்கப்படுகின்ற நிலையிலே, நீங்கள் 100 கோடி ரூபாயைத்தான் உதவித் தொகையாக இந்த நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்து இருக்கின்றீர்கள். ஆனால், இந்த 100 கோடி ரூபாயும்கூட, முழுமையாகப் பயனாளிகளுக்குச் சென்று சேருமா என்பதிலே பிரச்சினை இருக்கிறது. ஏனென்றால், பல practical difficulties இருக்கின்றன. ஆகவே. என்னதான் நீங்கள் உதவித் தொகையை அறிவித்தாலும்கூட, விவசாயிகளைப் பொறுத்தமட்டிலும், இந்த உதவித் தொகை அளித்திருப்பது என்பது, பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டும் கதையாக, ஒரு கண்துடைப்பாகத்தான் இருப்பதாக அவர்கள் கருதுகின்றார்கள். ஆகவே....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியான கருத்தாக இருக்க முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் எதை அறிவித்தாலும், அதைச் செய்வதில், குறிக்கோளாக அறிவிக்கின்ற திட்டங்கள் போய்ச் சேருகின்றனவா என்பதில் முழுமுனைப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக விவசாயிகளுக்குக் கொடுக்கிற இந்த மானியம் கண்டிப்பாக அவர்களுக்குப் போய்ச் சேரும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மார்ச் 27]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். 2½ ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் இருந்தால் சிறு விவசாயிகளாக, குறு விவசாயிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 3 குதிரை சக்திக்கு முதலில் அறிவித்தீர்கள். இப்போது 5 குதிரை சக்திக்கும் உண்டு என்று சொல்லியிருக்கின்றீர்கள். மிக்க மகிழ்ச்சி. 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு விவசாயி தன்னுடைய பயன்பாட்டிற்காக 10 குதிரை சக்தியுள்ள மோட்டார் வைத்திருந்தால் அவருக்கும் அதே சலுகை வழங்கப்படுமா, இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்ச 10 குதிரை சக்தி கொண்ட மோட்டார் தேவையே இல்லை. (குறுக்கீடு) தேவையேயில்லை. காரணம் என்னவென்றால், 10 எச்.பி. போடக்கூடிய அந்தப் பகுதியிலே, அந்த ஆழத்திலே தண்ணீரே இருக்காது. 2 மணி நேரத்திற்குக்கூட ஒரு நாளைக்குத் தண்ணீர் கிடைக்காது. இது நடைமுறை உண்மை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சருக்கு ஒருவேளை அனுபவம் இருக்காது. எங்கள் பகுதியிலே நிறைய அனுபவம் உண்டு. 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள், தாராளமாக 10 குதிரை சக்தி கொண்ட மின் மோட்டார்களை அங்கே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்படுமா. மாட்டாதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. எங்களைப் பொறுத்தமட்டிலும், நீங்கள் சிறு, குறு, பெரு என்ற பேதங்களைப் பார்க்காமல், அனைவருக்குமே இலவச மின்சாரம் தாருங்கள் அல்லது இந்த உதவித் தொகையைத் தாருங்கள் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொண்டு, மின்சாரம் என்பது shock....

*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மின்சாரம் என்பது shock அடிக்கலாம். ஆனால் மின் கட்டணம் shock அடிப்பதாக இருக்கக் கூடாது. ஆனால். தற்போது நீங்கள் அறிவித்திருக்கின்ற மின் கட்டணமோ High Voltage Shock ஆக இருக்கிறது. ஏனென்றால், கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பரிலே நீங்கள் 1000 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வினை

அறிவித்தீர்கள். அதன் பிறகு ஜூலை மாதத்திலே current consumption deposit என்ற பெயரிலே 800 கோடி ரூபாய் வசூலிப்புச் செய்து இருக்கின்றீர்கள். தற்போது மீண்டும் 1398 கோடி அளவுக்கு மின் கட்டண உயர்வை அறிவித்திருக்கின்றீர்கள். ஆக, 16 மாதங்களிலே நீங்கள் இரண்டாவது முறையாக மின் கட்டண உயர்வினை அறிவித்திருக்கின்றீர்கள். Or in other words, 16 மாதங்களிலே சற்றேறத்தாழ 40 விழுக்காடு மின் கட்டண உயர்வினை மக்கள்மீது திணித்திருக்கிறீர்கள். ஆகவே, இது எந்த வகையில் நியாயம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலும் வீட்டு உபயோகத்திற்கு 22 விழுக்காடு மின் கட்டண உயர்வு என்பது மிக அதிகபட்சமானது; அதை நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டு, இப்போது...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் என்பது, அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, அகில இந்திய அளவில் பார்க்கின்றபொழுது நமது தமிழகத்தில் மிகக் குறைவான கட்டணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி. எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 5% Electricity tax -additional tax என்று அறிவித்திருக்கின்றீர்கள். ஏற்கெனவே அது Industrial consumption-க்கு மட்டும்தான் இருந்து வருகிறது. அதுவேகூட சட்ட விரோதமானது. ஏனென்றால், G.O. Ms. No. 787, Public Works Department, dated 13-4-1979 ஆணையின்படி, இந்த Electricity Tax—E—Tax ஆனது basic rate என்பதோடு merge செய்யப்பட்டிருக்கிறது; இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் இந்த additional tax-ஐ வசூலிப்பது என்பது Double taxation, ultra vires என்று சொல்லி நாங்கள் உயர்நீதிமன்றத்திலேகூட Writ மனுத் தாக்கல் செய்து, (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். Writ மனு தாக்கல் செய்து, நாங்கள் இடைக்காலத் தடையுத்தரவு பெற்றிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, இன்றைக்கு அந்த Amended Act, 1991-ன்படி, Tamil Nadu Electricity taxation on Consumption Act -ல் புகுத்தப்பட்டுள்ள Section 3(a)-விலேகூட domestic consumption-க்கு இந்த additional tax நிர்ணயிப்பதற்கு நிச்சயமாக வழிவகையே இல்லை. ஆகவே, நீங்கள் அதனையும் மாற்ற வேண்டும். அதுபோல, இன்றைக்கு இப்படி மின்சாரத் தாக்குதல் நடத்தி, 1,398 கோடி ரூபாய் சுமையை நீங்கள் மக்கள்மீது சுமத்தியுள்ளதோடு, புதிதாக



வரிகள் என்ற பெயரிலே 430 கோடி நிதிச் சுமையையும் மக்களுக்குத் தந்திருக்கின்றீர்கள். இன்றைக்குத் தொழில் துறையும், வர்த்தகமும் பெரிதாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலே, தனி மனித வருமானம் என்பது மிக, மிகக் கணிசமாகக் குறைந்து இருக்கிறது. ஆகவே, தனி மனித வருமானத்தை உயர்த்தாமல் வரிச் சுமையை உயர்த்துவதால், வறுமைதான் பெருகும்.

*பிற்பகல் 1-00*

" இல்லாமை இல்லாத நிலை வேண்டும் " என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய கவிதை வரிகளை நீங்கள் இங்கே நிறைவேற்ற வேண்டும் என்ற இலட்சியக் கனவு நிச்சயமாக நிறைவேறுவதற்கு வழி இல்லை. ஆகவே, இந்த வரிகளையெல்லாம் தளர்த்த வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்த செல்ஃபோன்களுக்கும், தொலைபேசிக் கட்டணங்களுக்குமான 12.5 சதவீதம் விற்பனை வரியை நீங்கள் குறைக்க வேண்டும். இதனால் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், மத்திய அரசு ஏற்கெனவே 8 சதவீதம், அதிலே சேவை வரி விதித்திருக்கின்றது. அதேபோன்று, இந்த மோட்டார் வாகன வரியை நீங்கள் குறைக்க வேண்டும். அதிலும் குறிப்பாகக் கல்வி நிறுவனங்கள் உபயோகப்படுத்தும் பேருந்துக்கான வரிக் கட்டணம் மிக, மிக அதிகமாக இருக்கிறது. அதனால் மாணவர் சமுதாயம் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. பசுமை வரியால் நிச்சயமாகச் சுற்றுப்புற மாசு அதிகமாகுமே தவிர, குறையாது. ஏனென்று சொன்னால், ஒரு முறை நீங்கள் அவர்களிடம் பசுமை வரியை வாங்கிவிட்டால், அவர்கள் சுற்றுப்புறத்தை என்னதான் மாசுபடுத்தினாலும்கூட அவர்களை நீங்கள் கண்டிக்கவோ, தண்டிக்கவோ முடியாது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான கருத்து. Pollution Control Board சில குழுக்களை அமைத்திருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு வாகனத்தையும் செக் செய்வார்கள். அந்த வாகனம் சுற்றுப்புறச்சூழலை மாசுபடுத்தாது என்பதற்கு அவர்கள் சான்று வழங்க வேண்டும். அத்தகைய certificate வழங்கினால்தான் அந்த வாகனம் பயன்படுத்தப்படும். அதற்காக தான் அந்த Green Card வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன். (குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கான நேரம் முடிந்துவிட்டது.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, என்ன, சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஒரு விளக்கம் அளித்தார்கள். அதிலே மாசுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் விசாரணை செய்து, பிறகு certificate வழங்குவார்கள் என்று சொன்னார்கள். அந்த certificate வழங்கிடுவார்களேயானால், அவர்களுக்கு அந்த Green Tax இல்லாமல் இருக்குமா என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். ஏனென்றால், மாசுக் கட்டுப்பாட்டு—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய வாகனங்களுக்குத்தான் அந்த Green Tax. அப்பொழுது, அந்தப் பழைய வாகனங்களுக்கு நீங்கள் அந்த Green Tax -ஐப் பெற்றுவிட்டால் அந்த வாகனங்கள் சுற்றுப்புறச்சூழலை மாசுபடுத்திவிடுமே என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். சுற்றுப்புறச்சூழலை மாசுபடுத்தும் வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதிலே விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கை மக்களுடைய எதிர்பார்ப்புக்கேற்ப இல்லை என்பதை நான் முதலில் தெரிவிக்கிறேன். மக்களுக்குச் சாதகமாக இருப்பதை மாற்றி, பாதகமாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். சாதனை என்கின்ற முறையில் இந்த அறிக்கையின் துவக்கத்தில் பல கருத்துகள்



தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கு வேதனைக்கு மேல் வேதனையைத்தான் அதிகப்படுத்துகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டதிலிருந்த தன்மைக்கும், இந்த ஆண்டின் தன்மைக்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஒரு முன்னுரை வழங்கப்பட்டிருந்தது, ' நிதி நிலைமை ' என்கின்ற தலைப்பின்கீழ் அந்த முன்னுரையில் 4-வது பத்தியில் சில விவரங்களைத் தெரிவிக்கிறார்கள். அதன் தொடர்ச்சியிலே 8-வது பத்தி, அதில் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் பேசியபோது எதைச் சுட்டிக்காட்டினாரோ, அது குறித்து இதிலே தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

'கூட்டாட்சி அமைப்பின் பல்லாண்டு காலச் செயல்பாடு, மாநிலங்கள் இடையே ஒரு ஏமாற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. கையேந்தும் நிறுவனங்கள்—Dole getting Corporation—என்ற நிலைக்குத் தாங்கள் விரைந்து தள்ளப்பட்டு வருவதாக மாநிலங்கள் கருதுகின்றன' என்கிற வாசகத்தையெல்லாம் அதிலே இடம் பெறச் செய்திருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட மத்திய அரசுக்கு எதிரான ஒரு பெரிய நிலை என்பது, சென்ற நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நாம் என்ன கேட்டோம்; எது கிடைக்கவில்லை என்பதையெல்லாம் அதிலே சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதே சமயத்திலே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வைக்கின்றபோது அதுபோன்ற sense இதிலே இல்லை. அந்தக் காரம் ரொம்பக் குறைந்து, ஒரு மென்மையான approach என்பது மத்திய அரசைக் குறித்து இருக்கிறது என்பதை நான் கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில், தமிழகத்தினுடைய வறட்சி நிலை எவ்வாறு இருக்கிறது ; சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களும் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நாம் இவ்வளவு அரிசி கேட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு கிடைத்தது என்பதைப் பார்க்கும்போது, ஏற்கெனவே இதே அவையில் தோழர் பாலபாரதி சுட்டிக்காட்டினார்; நாளேடுகளிலும் வந்தன; முதலமைச்சரும்கூடக்

குறிப்பிட்டார்கள், 'இன்றைக்குத்தான் செய்தி கிடைத்தது' என்று. நாம் கேட்கிற அரிசி கிடைக்காதது மாத்திரமல்ல. மத்திய அரசு ஒப்புக்கொண்ட அரிசிகூடக் கிடைக்கவில்லை என்பதை நாம் சென்ற முறையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இந்த முறையும்கூட, இந்த நேரத்திலும்கூட, இந்த அறிக்கையில் அது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கேகூட ஒரு விவாதம் வந்தது; கிராமப்புறங்களில் பதிவு செய்தவர்களுக்கு நாங்கள் உணவுக்குப் பதிலாக அரிசி வழங்குகிறோம் என்று பதில் வந்தது. இப்போது வறட்சியின் தன்மைக் கூடிக்கொண்டே போகிறது. ஏற்கெனவே, ஒரு குறிப்பிட்ட தேதியில் பதிவு செய்து கொண்டவர்களுக்குத்தான் அரிசி என்கின்ற அந்த முறையை மாற்றியமைத்து, அது விரிவுபடுத்தப்பட வேண்டும்; அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது ஒரு விவாதம் இங்கே வந்து, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசினார்; முதலமைச்சர் அவர்களும்கூட மீண்டும் தெரிவித்தார்கள், அமைச்சர்களும் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பதிவு செய்தவர்களுக்குத்தான் என்பது வலியுறுத்தப்படுகிறது. இது கூடாது. விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதை நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும் இந்தத் திட்டம் பொருந்த வேண்டும். அனைவருக்கும் அரிசி கிடைப்பதற்கு வழி ஏற்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறேன். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களிடத்திலேகூடத் தெரிவித்தார்கள்: 'நீங்கள் அங்கே கேட்கவேண்டியதுதானே' என்று. அது வாஸ்தவம். ஈராக் பிரச்சினையில் இந்த மன்றத்தில் ஒருசேரத் தீர்மானம் நிறைவேற்றினோம். இந்த மன்றத்திற்குப் பெருமை அளிக்கிற ஒரு செயல் அது. அதேபோல ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில், மத்திய அரசைக் கோரி நிறைவேற்றுவதற்கு இந்த மன்றம் முன்வர வேண்டும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லாவிட்டால், தமிழகத்தின் இந்தக் கொடிய வறட்சியை நாம் சமாளிப்பதற்கு இயலாது என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவிக்கிறேன். இந்த அறிக்கையில் புதிய தன்மை என்னவென்றால்——சென்ற ஆண்டு இல்லாதது——85 ஆம் பக்கம் வரை இருந்ததை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். 86 ஆம் பக்கத்திற்குப் பின்னால், பின்னிணைப்பு என்று கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பின்னிணைப்பு என்பது நாட்டிற்கு ஒரு பெரிய தீங்கானது; அது பின்னாபத்து.



'பொதுத் துறை நிறுவனங்களிலும், கூட்டுறவுத் துறைகளிலும் உள்ள அரசுப் பங்குகளை விற்பனை செய்தலும், அவற்றைச் சீரமைத்தலும்- இது தலைப்பு. பக்கம் 95. 'உற்பத்தித் துறையிலிருந்து தன்னுடைய செயல்பாட்டைத் திரும்பப் பெற இவ்வரசு பொதுவாகக் கருதுகிறது. மத்திய அரசின் கொள்கைகள் அடிப்படையில், பங்கு விலக்குக் கொள்கைகளை நாங்கள் வகுத்துள்ளோம். உற்பத்தித் துறையில் உள்ள பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள தனது பங்குகளை அரசு விலக்கிக் கொள்ளும். எஞ்சியுள்ள பொதுத் துறை நிறுவனங்கள் அனைத்தையும் திறம்படச் செயல்படுபவையாகவும், செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுபவையாகவும் ஆக்கும் வகையில் அவற்றை நாங்கள் சீரமைப்போம். அவ்வாறு சீரமைப்பதை எளிதாக்கும் வகையில் பொதுத் துறை நிறுவனங்களிலும், கூட்டுறவுத் துறை நிறுவனங்களிலும் உள்ள பணியாளர்களுக்காக, தாமாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெறும் திட்டம் ஒன்றை நாங்கள் செயற்படுத்தியுள்ளோம். இந்த மாற்றத்தை எளிதாக்கும் வகையில் சட்டமன்றப் பேரவையில் கூட்டுறவுச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வரப்படும்' என்று அதிலே வருகிறது.

அதேபோல, தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றை எல்லாம் சீரமைத்தல் என்று வருகிறது. அது சீரமைக்கிற செயல் அல்ல. மத்திய அரசு பின்பற்றக்கூடிய கொள்கை என்று ஒரு வாக்கியத்திலே கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தக் கொள்கை ஏன் வந்தது? பாய்ச்சல் வேகத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய, தேசிய ஜனநாயக முன்னணி என்கிற பெயரில் இருக்கக்கூடிய அரசு, தேசியத்திற்கு விரோதமாக, ஜனநாயகத்திற்கு விரோதமாக அணி என்பதற்குப் பதிலாக, ஒரு பிணி என்கிற முறையிலான ஒரு அரசுதான் டெல்லியிலே இருந்து வருகிறது. ஈராக்கின் மீது அமெரிக்கா தொடுத்திருக்கிற போர். (குறுக்கீடு)

*பிற்பகல் 1-10*

**திரு. ஜெக. வீரபாண்டியன் :** தொடர்ந்து கம்யூனிஸ்டுகளுக்கு இதே வேலையாகப் போய்விட்டது. பிணி என்கிற முறையிலான...

**திரு. என். நன்மாறன் :** நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) I am not yielding, Be calm, comrade, Mr. Raja.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து ஜெக. வீரபாண்டியன் பேசுகிறார். அவரைப் பேசச் சொல்லுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** ஆகவே, அது தேசியத்திற்கு விரோதமானது. இப்போது ஈராக்கிற்காகத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். சதாம் உசேன் மீது ஜார்ஜ் புஷ் தொடுத்திருப்பது தனிப்பட்ட யுத்தம் அல்ல. அதற்குள் உள்ள எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவது நோக்கம். இதுபோல உலக அளவில் முதலாளித்துவம் தன்னுடைய எல்லையை விரிவுபடுத்துவதற்கு எதையும் செய்கிறது. சென்ற ஆண்டு ஆப்கன் விஷயத்தில் நாம் இங்கே அஞ்சலி தெரிவித்தோம். ஆப்கனில் அமெரிக்கா இறங்கியதற்குக் காரணமும் அங்குள்ள எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவதற்குத்தான். இப்போது ஈராக்கில் இறங்குவதன் காரணமும் அதுதான். தன்னுடைய வலுவைப் பயன்படுத்தியிருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப்போது உலக வங்கியினுடைய பார்வை நம்மீது பட்டிருப்பதற்குப் பெருமையடைகிறோம். அது ரொம்ப ஆபத்தானது என்பதை நாங்கள் கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆமை புகுந்த இடமும், அமீனா நுழைந்த வீடும், என்பார்கள். அதைப்போல, அமெரிக்காவின் பிடியிலுள்ள நிறுவனங்கள் இறங்கிய இடங்கள் எல்லாம் ரொம்பப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றன. அவர்களுடைய நிபந்தனைகள் என்பது மிகப் பெரிய கொடுமையாக இருக்கின்றன. நிபந்தனைகள் பூராவையும் மத்திய அரசு அப்படியே ஏற்கிறது. ஏற்றுக்கொண்டு, இந்தியத் தொழில்கள் எல்லாம் சிதைந்துவிட்டன, விவசாயம் சிதைந்துவிட்டது.

பாரதப் பிரதமர் பெயரிலே சாலை அமைக்கும் திட்டம். பாரதப் பிரதமர் பெயரிலே திட்டம் இருக்கிறது. மாநில அரசுக்கும் தெரியாது, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரியாது, பஞ்சாயத்து போர்டுக்கு நேராகப் போகும். ஆக, இது முழுவதும் நாட்டில் உள்ளாட்சி ஜனநாயகத்தைக் குலைக்கின்ற திட்டம். இது நேரடியாக (குறுக்கீடு) decentralisation என்கிற பெயரிலே, எம்.எல்.ஏ-வுக்கும் தெரியாது, மந்திரிக்கும் தெரியாது, தலைமைச் செயலகத்திற்கும்



தெரியாது. டில்லியிலே இருக்கின்றவர்களுக்கு எப்படி குப்பனம்பட்டியைப் பற்றித் தெரியும்? அவர் ரோடு போட்டோம் என்று எழுதி வைத்துவிடுவார். இது ரொம்பப் பெரிய ஆபத்தான வேலை. இதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இன்றையதினம் மத்திய சர்க்கார் அமெரிக்காவின் பிடியில் ரொம்ப இறங்கி, மாநிலங்களைத் தள்ளாடச் செய்கிறது. இதற்குத் தமிழகம் விதிவிலக்காக மாறிச் செயல்படுவதற்குப் பதிலாக, அந்த நிர்பந்தங்களை அப்படியே ஏற்றுக்கொள்கிற முறையில் செல்வதை நாங்கள் கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளிக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** இது ஒன்று. அடுத்து, இந்த அறிக்கையில் சாத்தான்குளம் தேர்தலைப் பற்றிப் பெருமையாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு விஷயம். இந்தியாவிலே முன்னோடி மாநிலமாகத் தமிழகம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அதை அடிக்கடிக் குறிப்பிடுகிறீர்கள். நன்றாக வந்தால் ரொம்ப மகிழ்ச்சி. ஆனால், எதிலே முன்னோடியாக இருக்கிறது? விஸ்வ இந்து பரிஷத் தலைவர் திருச்சியிலே வந்து பேசுகிறார். இந்தியாவில் எங்கேயும் இல்லாத கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தமிழகத்தில் இருக்கிறது. இதை குஜராத்திற்குக் கொண்டு செல்வேன் என்று சொல்கிறார். இதிலே தமிழகம் முன்னோடியாக இருப்பது.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததில் தமிழ்நாடு முன்னோடி அல்ல. ஏற்கனவே ஒரிசா, மத்தியப்பிரதேசம், அருணாசலப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் அந்தச் சட்டம் இருக்கிறது.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே மன்றத்தில் தெரிவித்தார்; வருத்தத்தோடு ஒரு முறை திரு. சிவ புண்ணியம் பேசினார். பூணூல் பற்றி வந்தபோது, வெள்ளிப் பூணூல் சம்பந்தமாக வந்தபோது, முன், பின்னாக சர்ச்சைகள் வந்தன. இதற்கு நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புகள் வழங்கினார்கள். தமிழகத்தில் ஆத்திகத்திற்கும் இடமுண்டு,

நாத்திகத்திற்கும் இடமுண்டு என்று இந்த அவையிலே பதிவு பண்ணியிருக்கிறார்கள். அதனால்தான் தந்தை பெரியார் படம் இங்கே வைத்திருக்கிறோம். இதுபோல ஒரு படம் இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் இருக்காது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவருடைய படம் இங்கே இருக்கிறது. வேறு மாநிலங்களில் இல்லை. தமிழகத்தின் பெருமைக்கு இந்தச் சட்டம் உதவாது. சாத்தான்குளம் தேர்தலில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்று பேசியபோது எத்தனை முறை பதில் சொன்னார்? இந்தச் சட்டத்தால் சிறுபான்மையினருக்குத் தீங்கு வராது, வராது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்னாலேதான்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், பெரும்பான்மையினரான இந்து மக்களும்கூட, அவர்கள் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவார்கள் என்றால், அவர்கள் மீதும் இந்தச் சட்டம் பாயும் என்பதை அவையில் மிகவும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். நீங்கள் ஏன் இஸ்லாமிய மதத்திற்கு, கிருத்துவ மதத்திற்கு மட்டுமே வக்காலத்து வாங்க வேண்டும்? இது secular approach. எல்லா மதங்களும், எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கட்டாயத்தில் ஈடுபடுவார்கள் என்றால், அவர்கள்மீது இந்தச் சட்டம் பாயும். இதுதான் இந்தச் சட்டத்தினுடைய ஷரத்து.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** வக்காலத்து வாங்குகிறோம் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வது தவறு. உண்மைகளை நாங்கள் சொல்கிறோம். அதாவது, மதமாற்றத் தடைச் சட்டத்தினைப் பார்த்து சிறுபான்மையின மக்கள் பயப்பட்டதன் காரணமாகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சாத்தான்குளத்தில் ஒரு நூறு தடவை, இந்த மதமாற்றச் சட்டத்தினால் உங்களுக்கு ஆபத்து இல்லை, ஆபத்து இல்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை; அது ஏன் வந்தது?

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களுக்கு இப்படி ஒரு உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள். இவர்களெல்லாம் போய்



அங்கே பிரச்சாரம் செய்து, மக்கள் மனதைக் குழப்பி, உங்களுக்கு ஆபத்து வந்துவிடும், வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆகவேதான், நான் பிரச்சாரத்தில் சென்று, ஆபத்து வராது, வராது என்றேன். நான் சொன்னதை மக்கள் ஏற்றுக்கொண்டு, எங்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, நாங்கள் ஒன்றும் பிரச்சாரம் செய்யவில்லை. இன்று பல இடங்களிலே பெரும்பான்மையின மக்கள், சிறுபான்மையின மக்களுடைய ஆராதனை சுதந்திரத்தை இன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், பேசி முடியுங்கள். ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் பதில் அளித்துவிட்டார்கள், நன்மாறன், கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை வந்த நேரத்திலே, தமிழகத்தில் இலட்சக்கணக்காக இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் மத்தியில் மிகப் பெரிய கவலை இருப்பதை இந்த மன்றம் அறியும். இதற்கு முன்னால் ஏதாவது அறிக்கை வைத்தால், ஏதாவது புது அறிவிப்பு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். இப்பொழுது என்னவென்றால், இருப்பதிலே ஏதாவது பறிபோகிறதா என்று பார்க்கிறார்கள். இப்பொழுது அவர்களுடைய ஓய்வூதியமே ஒரு பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிற காலம், இந்தக் காலம். சென்ற ஆண்டு கொடுக்க வேண்டிய படி இந்த ஆண்டு; அதிலேயும்கூட அவர்கள் ரிட்டயர் ஆகிறபோது கிடைக்க வேண்டிய அந்தப் பணி நன்மைகள்—அதுவும்—சிறுசேமிப்பிலே சேரும் என்று வருகிறபோது, மிகப் பெரிய கவலைக்குரியதாக மாறியிருக்கிறது. இந்தப் போக்குகளைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பணியிலே அவர்களுக்கு ஊக்கம் இருக்க வேண்டும்; உற்சாகம் ஏற்படுத்த வேண்டும். அந்த முறையில் அரசு ஊழியர் பிரச்சினையில் அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதில் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன. ஒரு புறம் என்ன சொல்கிறார்? உலக வங்கி போடுகின்ற நிபந்தனைகளுக்கு நீங்கள் அடிபணியக் கூடாது; உலக வங்கியிடமிருந்து நீங்கள் கடன் பெறக்கூடாது என்று சொல்கிறார். இன்னொருபுறம், அரசு

ஊழியர்களுக்கு நீங்கள் இன்னும் சலுகைகள் தரவேண்டும்; இன்னும் அகவிலைப் படி தரவேண்டும் என்று கூறுகிறார். ஏற்கனவே நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்த மாநிலத்திற்கு என்று, இந்த மாநில அரசுக்கு என்று இருக்கின்ற மொத்த வருவாய்—Revenue Receipts—இதில் 96 சதவீதம் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், பென்ஷன் வழங்குவதற்குமே போய்விடுகிறது. ஆகவேதான், வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியில்லை. ஆகவேதான், உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து நாங்கள் கடன் பெறவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம், நீங்கள் அனைவரும் அறிவுரை கூறி, அரசு ஊழியர்கள், தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டால், அப்பொழுது மாநிலத்தில் மாநில அரசு ஈட்டுகின்ற வருவாயை, நமக்குக் கிடைக்கின்ற Revenue Receipts-ஐ இந்த மாநிலத்திற்கான, பொது மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளுக்கே நாம் பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது உலக வங்கி சொல்கின்ற நிபந்தனைகளுக்கெல்லாம் கட்டுப்படாமல், அவர்களுடைய கடனுதவி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, மாநிலத்தில் கிடைக்கின்ற வருவாயை வைத்துக்கொண்டு, நாம் வளர்ச்சிப் பணிகளைச் செய்யலாம். அதற்கு நீங்கள் வழி செய்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய உறவு கூடாது என்றோ, கடன் வேண்டாம் என்றோ நான் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள், கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள். ஆத்திரப்பட்டு விடாதீர்கள். உலக வங்கியுடன் இப்போது பல நாடுகள் உறவு வைக்கின்றன. அதனுடைய நிபந்தனைகள் மோசமானவை, ஒன்று. அடுத்து, இப்போது அரசு ஊழியர் விஷயத்திலே, புதிதாகத் தரவில்லை என்றாலும், இருப்பதை எடுக்க வேண்டாம். அதை மட்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாட்டில் அரசாங்க ஊழியர்களுக்கு மத்தியிலே ஏற்படுத்துகின்ற சில மாற்றங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்கள் பேசுகிறார்கள். இது காலத்திற்கேற்ற, நிலைமைக்கேற்ற மாற்றம்தான். கம்யூனிஸ்ட் நாடான சீனாவில்கூட, regular employment-ஐக் கைவிட்டுவிட்டு, Contract Labour System என்பதை இப்போது நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனா இராஜ்ஜியத்திலே எந்தத் தொழிலாளிக்கும் வேலையில்லாத நிலைமை ஏற்படவில்லை. சில தொழில்களிலே Contract Employment -ஐப் புகுத்துவது என்பது தவறு என்று நாங்கள் சொல்லவில்லை. அதற்கு நாட்டிலே சட்டம்கூட இருக்கிறது. அதாவது, control and abolition of contract system. அந்த முறையிலே அங்கே சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோமே தவிர, இருக்கின்ற employees-யினுடைய உரிமைகளைப் பிடுங்கி அல்ல.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கைக்காக சீனா அரசாங்கம் regular employment -ஐயே கைவிட்டுவிட்டு, 1986 ஆம் ஆண்டிலிருந்து Contract system follow செய்கிறது. இன்னும் ஒன்று; அங்கே Labour Law-வே இல்லை. அதனாலேதான் அங்கு தொழில் தகராறு இல்லை. ஆனால், இங்கு Labour law இருப்பதால்தான் உங்களாலே எங்களுக்கு விவகாரங்களே ஏற்படுகின்றன.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் சீனா நாட்டிற்குச் சென்று இருக்கிறவன். அங்கேயிருக்கிற தொழில் ஸ்தாபனங்களையெல்லாம் போய்ப் பார்த்திருக்கிறவன். அங்கே Management Committee என்று ஒரு Committee இருக்கிறது. அங்கு என்னென்ன முறையிலே Labour law இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது, அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்மாறன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** முடித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அரசு ஊழியர்களுக்கு 96 சதமானம் என்ற ஒன்று வருகிறது. அது மொத்த வருவாயிலே...

[2003 மார்ச் 27

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்கம் அளிக்கிறேன். அரசு அலுவலர்களின் ஊதியங்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை போன்றவை பற்றி விளக்கமான குறிப்பு, இந்த அரசு ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்துள்ள வெள்ளை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் பக்கம் 23-ல் மாநில அரசின் சொந்த வரி வருவாயில், சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவின் சதவீதம் 94% என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அக்டோபர் 2002-ல் மாநில அரசின் சொந்த வரி வருவாயில் ஏறத்தாழ 94% ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களுக்குச் செலவிடப்படுகிறது என்றும், இதனைச் சற்றுக் கட்டுப்படுத்த வேண்டிய அத்தியாவசியத்தைப்பற்றி நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தேன்.

உதாரணத்திற்கு, 1995-1996-ல் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மாநில அரசின் சொந்த வரி வருவாயில் 70.17% ஆக அமைந்து இருந்தன. 1999-2000 ஆம் ஆண்டில் இது 102.85% ஆக உயர்ந்தது. ஆக, 1999-2000 ஆம் ஆண்டின் கணக்கின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் மொத்தமாகவே ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களுக்குச் செலவிடப்பட்டன. வேறு எந்தத் திட்டங்கள், மற்றும் பணிகளுக்கும் இதிலிருந்து எதுவும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனைச் சற்று மாற்றியமைக்க வேண்டிய நிர்பந்தமும், கட்டாயமும் இந்த அரசுக்கு ஏற்பட்டது. மாநில அரசின் சொந்த வரி வருவாயில் இந்தக் கணக்குக் காட்டுவது பொருத்தமல்ல என்ற ஒரு வாதமும் எழுப்பப்பட்டிருக்கின்றது. இது தேவையற்ற வாதமாகும். வேறு முறையில் கணக்கிட்டுப் பார்த்தாலும், அதே முடிவிற்குத்தான் வரவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். உதாரணத்திற்கு, 1995-1996-ல் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மாநில அரசின் மொத்த வருவாயில் 47.32% ஆக இருந்தது. இது 1999-2000-ல் 68.78%ஆக உயர்ந்தது. எனவே, கணிசமாக உயர்வு ஏற்பட்டுள்ளது என்பது இதிலேயிருந்தே தெளிவாகும்.

மேலும், ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் போக, வாங்கிய கடன் மீதுள்ள வட்டியையும் வழங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மொத்த வருவாய் என்று கணக்கிடும்போது, செலவினங்களின் வட்டியைச் சேர்த்தால் மறுபடியும் அதே நிலைதான் உருவாகின்றது. எனவே, நம்முடைய அரசு, அலுவலர்கள் பெற்றுவருகின்ற ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களைச் சற்று முறைப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத



[செல்வி ஜெ ஜெயலலிதா]

2003 மார்ச் 27]

கட்டாயத்தில் உள்ளது. இந்த நிலை இருந்தபோதிலும், மற்ற மாநில அரசுகள் முறைப்படி அகவிலைப் படி உயர்வுகூட வழங்க முடியாத நிலையில், இந்த அரசு மத்திய அரசுக்கு இணையாக அகவிலைப் படியை முழுமையாக வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) நன்மாறன், போதும்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது என்னைப் பேசப் பணித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மிகச் சுருக்கமாக, காலம் கருதி...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்துக்கு ஒரேயொரு....

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்மாறன் போதும். (குறுக்கீடு) திரு. ஜெக. வீரபாண்டியன் (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், நீங்கள் உட்காருங்கள். நாளைக்குப் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டும் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். நாகை மாவட்டம், காவிரி டெல்டாவினுடைய கடைக்கோடி மாவட்டம். நான் கடைமடைப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். எனது பகுதியிலே விவசாயப் பெருங்குடி மக்கள் வறட்சியாலும், பருவம் தவறிப் பெய்த மழையினாலும்—ஒரு இரவிலே 32 சென்டி மீட்டர் மழை எங்கள் பகுதியிலே பெய்து—விவசாயிகள் சொல்லொணாத் துயரத்திலே இருக்கின்ற இந்த நிலையிலே எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள், அறுவடை செய்த நெல்லைக்கூட விற்க முடியாத நிலை இருக்கிறது. எனது தொகுதியில் ஆறே ஆறு இடங்களில்தான் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்தாலும்கூட, எந்த சென்டரிலும் நெல் வாங்குவதாக இல்லை. தரம் பிரித்து எல்லா நெல்லையும் திருப்பியனுப்புகிற சூழ்நிலையில்தான் மயிலாடுதுறையில் விவசாயப் பெருங்குடி மக்கள் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும், சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டங்களும் என அறிவித்திருந்தார்கள். நான் இந்த பட்ஜெட்டிலே நிச்சயமாக ஒரு அறிவிப்பு வரும் என்று

சொல்லி, அரசின் சார்பாக நானும், கோட்டாட்சியரும் விவசாயிகளைச் சமாதானப்படுத்தி அந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக்கூடக் கைவிடச் செய்திருக்கிறோம். என்றாலும்கூட, இந்த அளவுக்கு விவசாயிகளுடைய நெல்லைக் கொள்முதல் செய்யாமல், மிகுந்த துயரத்தில் இருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அதுமட்டுமல்லாமல், மின் கட்டண உயர்வு பற்றிச் சொன்னார்கள். பட்ஜெட்டினுடைய இறுதி உரையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சில சலுகைகளை அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இருக்கிறேன். இதிலே, 50 யூனிட்டுக்கும் குறைவாகப் பயன்படுத்துகிற ஏழை மக்களுக்கு, யூனிட் ஒன்றுக்கு 85 காசிலிருந்து 30% உயர்த்தி, ரூ.1.10 காசு யூனிட்டுக்கு என்று விலை நிர்ணயம் செய்திருப்பதைத் தமிழக அரசு தயவுசெய்து வாபஸ் பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பட்ஜெட்டின் சாதக, பாதக விஷயங்களைப் பற்றிப் பல இயக்கங்களும் தங்களுடைய கண்ணோட்டத்தில் விவாதித்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், அதன் உள்ளே செல்வதற்கு எனக்கு விருப்பம் இல்லை. என்றைக்குமே மத்தியிலே ஆட்சியைப் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே, கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்ற காரணத்தினால்தான் எதற்கெடுத்தாலும் அவர்கள் பா.ஜ.க.-வைப் பற்றியும், மத்திய அரசைப் பற்றியும் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே...(குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன்:** வந்த அழைப்பையும் நிராகரித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** வரமுடியாது. அந்த மாதிரி நீங்கள் இல்லை. உங்களை யாரும் நம்பமாட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயும் கம்யூனிஸ்டுகளால் எந்தக் காலத்திலும் ஆட்சியைப் பிடிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் எங்களுடன் கூட்டணி சேர்ந்து இடங்களை வென்றுவிட்டு, எங்களையே சதா சர்வ காலமும் குறைகூறிக் கொண்டே இருக்கிறார்கள்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்கிற பழக்கம், கம்யூனிஸ்டுகளுக்கு எப்போதும் உண்டு. (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிக்கு வரமுடியாமல் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால். நாங்கள் யார் பக்கம் கையைக் காட்டுகிறோமோ, அவர்கள்தான் ஆட்சிக்கு வரமுடியும். நாங்கள் யாரை இறக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ, அவர்களை எங்களால் இறக்க முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அவர்கள் பக்கம் கையைக் காட்டினால்தான், அவர்கள் இந்த அவைக்கே வந்து இந்தக் கருத்துகளைக் கூறமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள் இல்லாமலும், உங்களுடைய ஆதரவு இல்லாமலும் நாங்கள் வந்திருக்கிறோம்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** வருங்காலத்திலே நிச்சயமாக வரமுடியாது. (குறுக்கீடு) வருங்காலத்தில் நிச்சயமாக எந்த இடத்திலும்கூட கம்யூனிஸ்டுகள் தனியாக நின்று வரமுடியாது என்பதுதான் மக்கள் தருகிற பாடம். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** அணி சேர்ந்து, எங்களுக்கு எம்.எல்.ஏ. பதவி, உங்களுக்கு ஆளுங்கட்சிப் பொறுப்பு கிடைத்திருக்கிறது. அதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** தமிழகத்திலே, பல மாவட்டங்களிலே, சென்னையைத் தவிர, 20-க்கும் மேற்பட்ட மாவட்டங்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையிலே, பாரதம் முழுவதும் 10 மாநிலங்கள் கடும் வறட்சியாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல மாநிலங்கள், வெள்ளத்தாலும், இயற்கைச் சீற்றத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சியினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையால், இப்போது தமிழக அரசு எந்த அளவுக்கு நிதி நெருக்கடியில் அல்லாடிக் கொண்டிருக்கிறது? அதேபோல், மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு,

ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் கோடி ரூபாய் வட்டியாக மட்டும் செலுத்த வேண்டிய துர்பாக்கியமான முறையிலே இந்த ஆட்சியை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள். எனவே, இருக்கிற கடுமையான நிதி நெருக்கடியிலேகூட, எந்த அளவுக்கு இந்த மாநில அரசுக்கு அதிகமாக உதவ முடியுமோ, அந்த அளவுக்கு மத்திய அரசு தாராளமாக உதவி செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வருகிற பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, தமிழகத்திற்கு, வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு ரூ.40 ஆயிரம் கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், 1991-1998 வரை, காங்கிரஸ் ஆட்சியும், கம்யூனிஸ்டுகளினுடைய ஆதரவுடன் செயல்பட்ட, ஐக்கிய முன்னணி ஆட்சியும் உலகமயமாக்கல் என்ற பெயரிலே பொருளாதாரத்தை எந்த அளவுக்குச் சீரழிக்க முடியுமோ, அந்த அளவுக்கு பாரதப் பொருளாதாரத்தைச் சீரழித்து, தங்களுக்குப் பொறுப்பே இல்லாததைப்போலத், தட்டிக் கழித்து, பாரதிய ஜனதா கட்சி அரசை வசைபாடுவதன்மூலம், ஆதரித்த ஐக்கிய முன்னணி அரசைக்கூட, அவர்கள் தவறுகளை கம்யூனிஸ்டுகள் மூடிமறைத்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு சின்ன விளக்கத்தை நான் கூற விரும்புகிறேன். மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 40 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கித் தந்துள்ளதாக அவர் கூறினார். இது,-Planning Commission-ஆல் ஒதுக்கப்பட்ட தொகை. இந்த 40 ஆயிரம் கோடி ரூபாயில், மாநில அரசே பெரும்பான்மையான நிதியை, தானே வசூல் செய்ய வேண்டும்; இதில், மத்திய அரசின் பங்கு ஐந்தாண்டு காலத்திற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குத்தான் இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-30*

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைய ஆட்சி இருக்கிறது. (குறுக்கீடுகள்) இந்த நல்லாட்சி இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-3-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. தகவல் தொழில்நுட்பம்/மென்பொருள் வளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில் அலகுடைய தொழில்களை 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XIV of 1947) முதல் அட்டவணையில் இணைப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 7-1-2003 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XIV of 1947) 40 ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

56. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

57. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

58. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

D
N21/3/003
103.372
225515

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53-19